www.tamilarangam.net

இதழ்-113
ஜனவரி 09-22,1997
விலை-10.00

சரிநிகர்
'SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

# பொன்னன்வெளி: ஐ.தே.க.வின் இனவாதமும் அஷ்ரபின் தோல்வியும்!





# சமாதானத்துக்காக ஓர் இரவு...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இருவாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை- ரூபா 300
வெளிநாடு- U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04, ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புக்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

# சமாதானத்துக்காக ஓர் இரவு...



டிசம்பர் 20/21ம் திகதிகளில் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட "சமாதானப் பொழுது" எனும்புதுமாதிரியானசமாதான நிகழ்வில் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு சகலநிகழ்ச்சிகளும்நிறுத்தப்பட்டன. எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு கலந்து கொண்ட சகலரும் அவற்றை கைகளில் ஏந்தி நின்ற பொழுது ஒலி பெருக்கியில் "யுத்தத்தீ அணையட்டும் சமாதானம் ஓங்கட்டும்" எனும் சுலோகங்கள் மும்மொழிகளிலும் மீண்டும் மீண்டும் ஒலித்தன. மக்கள் அனைவரும் மௌனப் பிரார்த்தனையில் ஆழ்ந்தனர். "இது அவர்களது இதயபூர்வமான பிரார்த்தனையாகவிருந்தது" என்று அமைப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார். ஏனெனில், இந்நிகழ்வுக்கு முன்னால் நடைபெற்றுக்கொண்டிருந்த இசைநிகழ்ச்சி திடீரென நிறுத்தப்பட்ட பொழுது அதனை வெகுவாக ரசித்துக்கொண்டிருந்தும், ஆடிப் பாடிக்கொண்டுமிருந்த அனைவருக்கும் அடுத்த நிகழ்ச்சியான மெழுதுவர்த்திப் பிரார்த்தனை பற்றி அறிவிக்கப்பட்டது. எந்தவித மறுதலிப்போ முணுமுணுப்போ இன்றி அனைவரும் கலந்து கொண்டனர். சமாதானத்தின் தேவைபற்றிய உரத்த பிரகடனமாக இது அமைந்தது எனலாம்.

இந்நிகழ்ச்சியில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் குறிப்பாக பொலன்னறுவை, அநுராதபுரம், புத்தளம், மாத்தறை, நுவரெலியா, கண்டி ஆகிய பிரதேசங்களிலிருந்து பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர். அப்பிரதேசங்களிலிருந்து பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பஸ்வண்டிகளில் யுத்தத்திற்கு எதிரான சுலோகப் பதாதைகளைத் தாங்கியவண்ணம் அவர்கள் கொழும்பை அடைந்தனர்.

தேசிய சமாதானப் பேரவையின் தகவல் தொடர்பு பொறுப்பாளரான ஜெகான் பெரெரா சரிநிகருக்கு கருத்துத் தெரிவிக்கையில் 'எந்த வடிவிலேனும் இந்த நிகழ்ச்சியின் போது அசம்பாவிதம் நேரலாம் என நாங்கள் அச்சத்திலிருந்தோம். ஆனால், சிறுவாக்குவாதம்கூட நிகழாது வெற்றிகரமாக நடந்து முடிந்தது' என்றார்.

இந்நிகழ்ச்சியின் அமைப்பாளரும் தே.ச.பேவின்தேசிய அமைப்பாளருமான அஜீத் ரூபசிங்க கருத்து தெரிவிக்கையில் "பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக கொழும்பில் இருந்தே பலர் வருவதற்கு தயங்கிய நிலையில் அனுராதபுரம், மாத்தறை, திருகோணமலை போன்ற தூர இடங்களிலிருந்து பலர்கஷ்டப்பட்டு வந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் என்பது முக்கிமானது" என்றார்.

எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த மக்கள் பல்வேறு பிரதேசங்களிலிருந்து இதில் கலந்து கொண்டனர் என்பது மட்டுமின்றி சமாதானத்தை வலியுறுத்திச் சமாதான சகவாழ்வினை எடுத்துக்காட்டும் பல கலைநிகழ்ச்சிகளையும் வழங்கினர்.

சிறுவர்களின் நடனங்கள், பாடல்கள் முதல் வயது வந்தவர்களின் நாடகங்கள் கவிதைகள், சமாதான உரைகள் போன்றவைகளும் நிகழ்வில் இடம் பெற்றன. சமயத் தலைவர்கள் பலரது உரைகளும் இடம்பெற்றன. 1997ம்வருடம் ஒருசமாதானத்திற்கான ஆண்டாக இருக்க வேண்டும் என்பது அனைவரதும் பிரார்த்தனையாகவிருந்தது.

"யுத்தத்தினால் சமாதானத்தை ஒரு போதும் ஏற்படுத்த முடியாது"

"யுத்தத்திற்கும் வன்முறைக் கலாசாரத்திற்கும் முடிவு"

"யுத்தச்செலவுகளை அபிவிருத்தியின் பால் திருப்புவோம்"

எனும் சுலோகங்களைக் கொண்ட மும்மொழிகளிலுமான பதாதைகள் விகாரமகாதேவி உள்ளக அரங்கைச் சுற்றிலும் தொங்கவிடப்பட்டிருந்தன.

தேசிய சமாதானப்பேரவை கடந்த பல மாதங்களாக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய [illegible] கருத்துக்களை அறிவதற்கா[illegible]க்கு உணவூட்டுவதற்காகவும் மக்கள் [illegible]வுகள் பலவற்றை சிறிய அளவில் நடத்தி வந்தது. அம்மக்கள் அனைவரையும் ஒரே இடத்தில் கூட்டி அவர்களின் அபிலாஷைகளை உலகறியச் செய்வதற்காகவும் யுத்தத்தின் மூலம் தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்தும் பகுதியினருக்கு ஒரு சவாலாக தமது ஒருமித்த குரலை முன்வைப்பதற்கு ஏதுவாகவும் இத்தகைய ஒரு நிகழ்ச்சியை தேசிய சமாதானப் பேரவையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தற்போது சமாதானத்திற்கான முயற்சிகள் குரல்கள் மறுபடியும் மெல்ல மெல்ல மேலேழுந்து வருவதை இந்நிகழ்வும் குறிகாட்டுகிறது.

மேற்படி சமாதானப் பொழுது நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக இடம்பெற்ற சமாதான இரவு இசை நிகழ்ச்சியில் விக்டர் ரத்னாயக்க, சுனில் எதிரிசிங்க, எட்வேட் ஜயகொடி, சரித பிரியதர்ஷனி, நிரோஷா விராஜினி, கருணாரத்ன டிவுலகனே, டோனி ஷசன், சஞ்சீவனி வீரசிங்க, லதா வல்பொல ஆகிய பிரபல சிங்கள பாடகர்களும் ஜீப்ஸீஸ், சாதுஜனராவய, ஆகிய குழுக்களும் கலந்து கொண்டனர். முத்தழகு, சிறீதர் பிச்சையப்பா, நிலாமதி பிச்சையப்பா ஆகியோரும் கலந்து கொண்டு பாடினர். அறிவிப்பாளர் உவைஸ் இசை நிகழ்ச்சியைத் தமிழில் தொகுத்தளித்தார்.

ஜெகான் பெரெரா இது பற்றி குறிப்பிடுகையில் "இசைநிகழ்ச்சியின் பல பாடகர்கள் காதல் பாடல்களும், வேறு பாடல்களுமே அதிகம் பாடவேண்டியிருந்தது. சமாதானப் பாடல்களுக்கு உள்ள தட்டுப்பாடானது எமது கலை கலாசாரங்களில் கூட சமாதான வரட்சி எவ்வளவு தூரம் உள்ளது என்பதை காட்டிற்று" என்றார்.

சமாதானப் பொழுது நிகழ்ச்சியை சிங்களத்தில் ராஜா தர்மபால அவர்களும், தமிழில் எஸ்.பி. நாதன் அவர்களும் தொகுத்தளித்தனர்.

டிசம்பர் 20ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பித்த இந்நிகழ்ச்சி 21 ம் திகதி அதிகாலை 4.30 மணிவரை தொடர்ந்து நடைபெற்றது.

## அவர் பிரபாகரனுடன் பேசவில்லை!

இன்ரநஷனல் அலேற் அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் முகமாக இலங்கைக்கு வந்துள்ளதாகவும், ஜனாதிபதியினது அனுமதியுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கும் முகமாக வன்னியை நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருப்பதாகவும் தொடர்ந்தும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லையென அறியக்கிடைக்கிறது.

குமார் ரூபசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவையும் சந்தித்துப் பேசியது உண்மையே. ஆனாலும் குமார் ரூபசிங்க தலையீடு செய்வதற்காக ஜனாதிபதியிடம் அனுமதி கோரவில்லையென்பதுடன் தலையீடு செய்யுமாறு ஜனாதிபதியினால், எதுவித கோரிக்கையுமே விடுக்கப்படவுமில்லை.

இதற்குச் சில காலத்துக்கு முன்பு இன்ரநஷனல் அலேட் அமைப்பு அரசியல் கட்சிகள் பலவற்றைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 24 பேரை அயர்லாந்துப் பிரயாணமொன்றில் பங்குபற்ற வைத்த அதே சமயம் பயண மாநாட்டின் முடிவில் சமாதானத் தீர்வொன்றை ஏற்படுத்து முகமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கருத்து உள்ளடக்கப்பட்ட பொதுக் கடிதமொன்றில் இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் 24 பேரும் கையொப்பமிட்டிருந்தனர். இம்முறை இலங்கைப் பயணத்தின் போது குமார் ரூபசிங்க அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்திநான்கு பேரது கூட்டமொன்றைக் கூட்டியிருந்தாலும் அயர்லாந்துப் பயணத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர்.

கட்சி அனுமதியின்றிக் கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கக் கூடிய அக்கடிதத்தில் கையொப்பம் இட்ட சம்பவம் எல்லாக் கட்சிகளினுள்ளுமே விமர்சனத்துக்குக் காரணமாயிருந்தது. இதனால் மேலும் பிரச்சினைகள் ஏற்படும் என்று நிலவிய பயம் காரணமாகவே அவர்கள் கலந்து கொள்வதைத் தவிர்த்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்திய சந்தர்ப்பத்தில் பிரபாகரனுடன் நேரடியாகக் கலந்துரையாடலில் ஈடுபட ஜனாதிபதி விரும்பினால் அதற்காக பயன்படுத்தக்கூடிய, கதைக்கும்போதே திரையில் மற்றையவரின் முகம் தெரியும் செய்மதித் தொலைபேசித் தொகுதி ஒன்றை இன்ரநஷனல் அலேட் அமைப்பின் செலவில் வழங்க குமார் ரூபசிங்க பிரரேரித்திருந்தாலும் ஜனாதிபதி அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

ராவய 19970105

## நடவடிக்கை இல்லை

காணாமற் போனோர் பற்றிய விசாரணைக் குழுக்களின் உத்தியோகபூர்வ காலக்கெடு ஜனவரி மாதம் 31ம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனாலும் அவ்விசாரணைக் குழுக்களிடம் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் பெரும்பாலானவை பற்றி இன்னும் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடையவில்லை.

இதேசமயம் கடந்த பயங்கரவாத காலகட்டத்தில் நபர்கள் காணாமல் போன சம்பவங்களுக்குப் பொறுப்பான அநேகருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் அது தொடர்பான விசாரணை செய்யும் பிரிவுகளினுள் கடும் வெறுப்புத் தோன்றியுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுக்களில் சாட்சியம் அளித்த சிலருக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வடமேல், மத்திய, வடமத்திய, ஊவா மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைக் கமிஷன், காணாமல் போதல் சம்பவங்களுக்குப் பொறுப்பான நபர்கள் ஐந்நூறு பேர் அளவினர் தொடர்பாக இடைக்கால அறிக்கைகளில் சுட்டிக்காட்டி இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

லக்பிம 19970105

## முடியாது!

மலையக மக்களின் பாரம்பரிய பூமியில் வெளியாருக்குக் காணி வழங்குவதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என கால்நடை வள, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான சௌ.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கிருந்தோ வந்தவர்கள் அல்லர். காடுகளை வெட்டி இம்மண்ணை வளமாக்கியவர்கள் நாங்களே. 1947ம் ஆண்டில் எமது பிரதிநிதிகள் 7 பேர் பாராளுமன்றத்திற்கும் சென்றனர்.

எமது பலம் கூடிவிடும் என நினைத்த அக்காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் எமது வாக்களிக்கும் உரிமையைப் பறித்தெடுத்தனர் எனவும் சௌ.தொண்டமான் தெரிவித்தார்.

லக்பிம 19970105



சி.செ.ராஜா

## வருகிறார்!

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் சோமவங்ச அமரசிங்க விரைவில் இலங்கைக்கு வரவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

சோமவங்ச அமரசிங்க இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தினுள் மக்கள் விடுதலை முன்னணியின் பகிரங்கக் கூட்டங்கள் பலவற்றில் உரையாற்றவுள்ளார்.

இக்கூட்டங்களில் கலந்து கொண்ட தன் பின்பு அவர் மீண்டும் வெளிநாடு செல்வார் என அரசியல் தகவல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

சோமவங்ச அமரசிங்க இதுவரை எட்டு வருடகாலம் அளவில் வெளி நாட்டில் வசித்துள்ளார். அவர் 22 நாடுகளில் கட்சிக் காரியாலயங்களை அமைத்து சர்வதேச ரீதியில் கட்சியைக் கட்டி எழுப்பப் பாரிய பணியாற்றினார் என மக்கள் விடுதலை முன்னணி பேச்சாளர் ஒருவர் கூறினார்.


அவர் இலங்கைக்கு வந்துவிட்டுத் திரும்பிச் செல்லும் வரை அவரின் பாதுகாப்பு தொடர்பாக பூரணமான உறுதி தரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவும் இன்னும் சில தினங்களில் அரசிடம் எழுத்து மூலமாக கோர வுள்ளதாக அறியக் கிடைக்கின்றது

லங்காதீப 1997 0105

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சரி-நிகர்-இயம்

அன்புடன் வாசகர்களுக்கு,
புது வருட வாழ்த்துக்கள்!

இது சரிநிகரின் ஏழாவது வருடம். ஏழு வருடங்கள் என்பது மானிட வரலாற்றில் ஒரு மணித்துணிக் கையளவு கூட அல்ல. ஆனால் சரிநிகர் போன்ற ஒரு மாற்றுப் பத்திரிகைக்கு அதுவே மிக நீண்ட ஆயுள்.

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைப் பாரம் பரியத்தில் சரிநிகருக்கு முன்னு தாரணமாக ஒரு மாற்றுப் பத்திரிகை இல்லாதது மட்டுமல்ல சமாந் தரமாகக்கூட பத்திரிகைகள் எதுவும் இன்று வரை இல்லாததும் ஒரு அவலமான சூழல் தான். இவ்வா றான பத்திரிகை ஒன்றைக் கொண்டு வரவேண்டியவர்கள் கூட கட்சிப் பிரச்சாரத்தைக் கடந்து செல்ல முடியாமல் போனதும் இன்னொரு சாரார் சுவாரசியத்தில் மூழ்கிப் போகும் சுப்பர் மாக்கற் பத்திரிகைத் துறைக்குள் (Super market Journalism) நிற்பதுவும் கூட துரதிர்ஷ்டம் தான்.

சரிநிகரை ஆரம்பிக்கிற போதே அதனை ஒரு மாற்றுப்பத்திரிகையாக ஆரம்பிப்பதும் வளர்த்தெடுப் பதுமே எமது பிரதான குறிக் கோளாக இருந்தது.

இந்த மாற்று என்பது வெறுமனே தொடர்பு சாதனம் என்றளவில் மட்டும் நின்றுவிடாது நாம் வெளிப் படுத்தும், எழுதும் விடயங்களிலும் மொழியிலும் பிரதான மைய நீரோட்டத்தையும் அதன் கருத்தியலையும் கேள்விக்குட் படுத்துவதும் அதற்கு மாற்றான திசைகளைச் சுட்டுவதும் உள்ளடங் கியுள்ளது.

இந்த அடித்தளத்திலிருந்து தான் இலங்கையின் அரசியல் குறித்த எம்முடைய கேள்விகள் எழுந்தன. உதாரணமாக இலங்கை அரசு கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இங்குள்ள ஏனைய தேசியங்களை மறுத்து, கட்டிக் காத்தும் பேணி வளர்த்தும் வருகிற ஒருமைத்துவ அரசியலை சரிநிகர் கேள்விக்குள்ளாக்கிற்று. அதற்கு மாறாகப் பன்மைத்துவத்தை வலியுறுத்தியது. அவற்றின் இருப் புக்கும் இருப்புக்கான போராட்டங் களுக்கும் ஆதரவளித்தது; குரல் கொடுத்தது.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசு கடைபிடித்துவரும் ஒருமைத்துவ கோட்பாட்டின டிப்படையில் வட - கிழக்கில் முஸ்லிம் தேசியத்தை மறுதலித்த போது அதற்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டியதும் சரிநிகரின் கடப்பாடாயிற்று. குரல் கொடுத்தது.

மலையக மக்களுடைய இருப்பு, அவர்களுடைய அரசியற் கோரிக் கைகள் பற்றியும் இதேபோலத்தான் சரிநிகர் குரல்கொடுத்தது.

இன்னும் சொல்வதானால் இலங்கை அரசின் ஒடுக்குமுறைக்குள்ளாகும் தேசியங்களுக்காகக் குரல் கொடுக் கும் அதேவேளை, ஒடுக்கு முறைக்கு ஆளான தேசியம் இன்னொரு தேசியத்தை ஒடுக்குவ தற்கும், தனக்குள்ளேயான பன்மைத் தன்மையை மறுதலிப்ப தற்கு எதிராகவும் அதன் விளைவு களான அரசியல், ஜனநாயக் கருத்து வெளிப்பாட்டு மறுப்புகளுக்கெ திராகவும் எதிர்த்து குரல் கொடுப்ப தை சரிநிகர் தன் அடிப்படைக் கடப்பாடாகக் கொண்டிருக்கிறது. இந்தக் கடப்பாட்டில் தான் நாம் கோரும் சுதந்திரத்திற்கான அர்த்தப்பாடு இருக்க முடியும் என்பது எமது நம்பிக்கை. இவ்வாறு கேள்விக்குள்ளாக்கும் போது சரிநிகரை தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்திற்கு எதிரானவர்கள் என அடையாளப்படுத்தி விட முனையும் போக்கு ஒன்றுமுள்ளது.

இதற்கான அவர்களுடைய வியாக்கி யானம் 'இத்தகைய விமர்சனங்கள் தமிழ் மக்களுடைய அரசியல் கோரிக்கைகளை பலவீனப்படுத்தி விடும்' என்பதுதான். இத்தகைய வியாக்கியானத்தின் பலவீனமே, தான் கோரும் சுதந்திரத்தை மற்றவர்களுக்கு மறுப்பதில் தங்கியுள்ளதால், இந்த வியாக்கி யானங்கள் தீவிர விமர்சனத்துக் குள்ளாக்கப்பட வேண்டும்.

000

அரசியல் தளத்தில் மட்டுமின்றி பண்பாட்டுத்தளத்திலும் இத்தகைய பார்வையையே சரிநிகர் வலியுறுத்தி வருகிறது என்பது மிகவும் முக்கிய மான அம்சம்.

பண்பாட்டுத் தளத்திலும் பண்பாட் டின் ஒரு முக்கிய கூறான இலக்கியத் தளத்திலும் பன்மைப்பாடு, சமத்து வம் என்பவற்றை சரிநிகர் தீவிரமாக வலியுறுத்தி வந்துள்ளது/ வருகிறது. கூடவே அதிகாரத்துக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரான இலக்கியப் பண்பாட்டையும் வலியுறுத்திப் பேணி வருகிறது.

சரிநிகரின் இந்தப் ''பண்பாட்டு அரசியல்'' கடந்து ஆறு வருடங் களாக அது வெளியிட்டு வந்தி ருக்கும் கவிதைகள், சிறுகதைகள் மற்றும் பண்பாட்டு விமர்சனங் களைப் படிப்பவர்களுக்குத் தெள் ளெனப் புரியும்.

அரசு இங்கு நிலவும் பலபண் பாட்டுத் தன்மையை ஏற்றுக்கொள் வதற்குப் பதிலாக சிங்கள பௌத்த பண்பாட்டை முதன்மைப்படுத்து வதையும், அவற்றிற்கிடையே ஒரு அதிகாரப்படிநிலையை கடைப் பிடிப்பதையும் நிராகரித்து சமத்துவ மான பலபண்பாட்டுத் தன்மை யையே சரிநிகர் வலியுறுத்தி வருகிறது.

அதேவேளையில் தமிழர் பண்பா டென வலியுறுத்தப்படும் ''ஈராயி ரம் ஆண்டுப் பழைய சுமையையும்' எதுவித கேள்வி விசாரணைக ளுமின்றி 'ஏற்றிப் போற்றுதலிலும்' 'பாடிப் பணிதலிலும்' சரிநிகருக்கு எதுவித உடன்பாடுமில்லை.

இன்னொரு புறத்தில் தகவல் யுகம் உலகமயமாதல் போன்ற உலகு தழுவிய போக்குகள் உலகெங்கும் பரவிக்காணப்படும் பல நூற்றுக் கணக்கான பண்பாடுகளை பாதிக் கின்றது என்பதையும் அது கவனத்தில் கொள்ளாமலிருக்க முடியாது.

000

இதேபோல பெண்களது பிரச்சினை களிலும் இலங்கை அரசு கொண்டி ருக்கும் ஒடுக்குமுறைக் கொள்கைக் கெதிராக குரலெழுப்பும் அதே வேளை, தமிழ்ச் சூழலினுள் பெண் கள் தொடர்பாக நிலவும் மைய நீரோட்டக் கருத்துக்களை கேள்விக் குள்ளாக்க வேண்டியுமிருக்கிறது. இதன் போதும் சாதீயப் பிரச்சினை களைக் கையாளும் போதும் மொழியை மீளப்படைக்க வேண் டிய நிர்ப்பந்தம் எங்களுக்கெழுந் தது. உதாரணமாக கற்பழித்தல் என்ற சொல்லுக்கு மாற்றாக ஒரு சொல்லை தர வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் பாலியல் பலாத்காரம் என்றும் பின்னர் பாலியல் வல்லுறவு என்றும் பாவித்து வருகிறோம். இது வும் ஏற்புடையது என்று சொல்வ தற்கில்லை. பாலியல் வன்புணர்ச்சி என்று பாவிக்கலாமா என்பது பற்றி கருத்துப் பரிமாறிக் கொண்டி ருக்கிறோம்.

000

சுருக்கமாகக் கூறுவதாயின் பெரும் பாலான தகவல் தொடர்பு சாதனங் களைப் போல தகவல்களையும் செய்திகளையும் வெறுமனே வழங்குவது என்பதற்கப்பால் அவை இன்று உருவாக்கி விட்டுள்ள சூழலைப் புரிந்து கொள்வதும் செய்திகள், தகவல்கள், அவற்றின் பகைப்புலம் அதனது அரசியல் ஆகியவற்றிற்கிடையேயான உறவு களைக் கட்டுடைத்துக் காட்டுவதும் அதற்குப் பதிலான மாற்று வழிகளுக்கான தேடல்களை வளர்த்தெடுப்பதுமே சரிநிகரது பணி என்று அது கருதுகிறது.

அதனுடைய இந்தப் பணியில் இதுகாலவரை பங்கெடுத்து கொண் டவர்களுக்கும், வாசகர்களுக்கும் நன்றி கூறும் அதேவேளை தொட ர்ந்தும் தன்னுடன் கைகோர்த்துக் கொள்ள வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறது சரிநிகர்.

○

# வடக்கும் — தெற்கும் வேறுபாடுதான் என்ன?


புதிய ஆண்டிலாவது சமாதானம் மலருமா என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு. அதனை வரவேற்று சிங்களத்தில் ''ஆயுபோவன்'' சொல்லவும், தமிழில் வணக்கம் சொல்லவும் எல்லோரும் காத்துநிற் கிறார்கள். எனினும், புதிய ஆண்டி லாவது சமாதானம் யதார்த்தமா குமா? நவ காலனித்துவ மூன்றாம் உலக நாடான இலங்கை மக்க ளுக்கு பௌதீக ரீதியான ஆசா பாசங்களே உண்டென எனது நண்ப னொருவன் கூறினான். எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னுக்கும் பௌதீக ரீதியிலான விருப்பு வெறுப்புக்கள் மட்டுமா உள்ளன? கீழே உள்ள அவரது கருத்தை நோக்கின் உண்மை நிலையை அனுமானிக்கலாம். (புலிகள் இயக்கத் தலைவர் பிரான்ஸ் செய்தி பிரிவுக்கு (Yearen-oer) வழங்கியதிலிருந்து)

*''விடுதலைப் போராட்டங்கள் வரலாற்றில் என்றுமே பொறிக்கப் பட்டதில்லை. போரின்றி - இரத்த மின்றி - கொலையின்றி - அழி வின்றி - உயிர்த்தியாகமின்றி பெறப்பட்ட வெற்றிகள் வரலாற்றில் இல்லை''*

அதேப்போல் சிங்கள ஆட்சியாளர் களுடன் மோத தாம் விரும்ப வில்லை எனவும் கூறியிருந்தார்.

இச்செய்தி பிரான்சிய செய்திச் சேவை மூலம் டிசெ.23 உலகம் முழுவதும் ஒலிபரப்பப்பட்டது. புலி கள் இயக்கத் தலைவரின் இக்கருத்து நிலை அபிவிருத்தியடைந்த உலகத் தில் பாவிக்கப்படும் ஜனநாயகம் தொடர்பான கருத்துடன் நோக்கும் போது ''பாஸிஸவாதம்'' எனச் சந்தேகமின்றி முத்திரை குத்தப் படலாம். எனினும் முன்னர் கூறிய தைப்போன்று மூன்றாம் உலகத்தில் வாழும் நாம் பிரபாகரனை விளங்கிக்கொள்ள வேண்டியுள் ளது. எமது சமூகப்பிரதிபலிப்புகள் ஊடாகத்தான் இருக்க வேண்டும். அவரது அறிக்கையை ஒத்த ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவினது அறிக்கை யொன்றை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.





*''... என்னுடைய கொள்கை என்னவென்றால் அடித்தால் திருப்பி அடித்தல் வேண்டும். அரசியல் புரிவது அதிகாரத்தைப் பெறவே. இதனை யாராவது தடுத் தார்களாயின் பதிலளிக்க வேண் டியது மேற்கூறிய முறையிலேயே ஆகும்.''*

*''வன்முறையைநிறுத்துவது தொடர் பாக எவராவது கூறினால், அதை நன்கு விளங்கிக் கொள்ளுங்கள். நாய்களால் இலத்தின் மொழி பேச முடியுமா?''*

*''நான் பொதுவாக அனைவருக்கும் கூற விரும்புவது 71 கிளர்ச்சியை சிறிமா அவர்கள் அடக்காவிட்டால் இன்று ஜனநாயகம் இருந்திருக்காது. சிறிமா செய்ததைத்தான் 88-89 காலப்பகுதிகளில் பிரேமதாசவும் செய்தார்.''*

**(லக்பிம பத்திரிகை 29-12-1996 தொகுப்பு)**

இலங்கை சமூகத்தின் வன்முறை ஆதாரத்தை கண்டுபிடிக்க உதவிய அனுராவுக்கு நன்றி! குறிப்பாக இடதுசாரி, லிபரல் கருத்துக்களைக் கொண்டவர் என மேற்கத்தேய நாடுகளில் தம்மை அடையாளப் படுத்துபவர். இலங்கைக்கு வந்ததும் ''தாக்கினால் தாக்கு'' என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்.

இதன்படி நமது சமூகத்தில் இருக்கும் வன்முறையை வெவ்வேறு முறை யில் அறியலாம். இதில் பிரதான இருண்டு பிரிவுகள்.

1. பெரும்பாக அரசியல் வன்முறை (Macro Political Violence)
2. நுண் அரசியல் வன்முறை (Micro Political Violence)

அனுரா ஒரு முதன்மையான அரசி யல்வாதி. அவர் இந்நாட்டில் ஏற்படுத்தியது என்ன? அரசியல் வன்முறை. பிரபாகரன் கெரில்லா தலைவர் என்ற ரீதியில் ஏற்படுத் தியது என்ன? அரசியல் வன்முறை. அவ்வாறெனின் இலங்கை அரசியல் வாதிகள் தோற்றுவித்த வன்முறை அரசிற்கு சமமாக அல்லது ம.வி.மு. யின் வன்முறை சக மக்கள் அழுத்தம் சமம். புலிகள் வன்முறை அல்லது ம.வி.மு.யின் வன்முறை அரசிற்கு சமமாக புலிகள் ஏற்படுத்தும் வன்முறையை எடுத்துக்கொண் டால், பிரபாகரனின் அறிக்கை ''பாஸிஸ வாதம் என்று முத்திரை குத்தப்படுவதற்கு அப்பாலானது. அதாவது பிரபாகரனின் அறிக் கையை பாஸிஸவாதம் என விவரி ப்பதை விடுத்து அது தரும் ஆழ மான அரசியல் கருத்தைப் பார்க்க வேண்டும். அப்பொழுது எவராவது இவ்வாறு வினவக்கூடும்'

''ஜுலை 22ம் திகதி புலிகள் தெஹி வளையில் புகைவண்டிக்கு குண்டு வைத்தது ஆழமான அர்த்தத் துடனா? என்று.

வெளிவாரியாக அரசியல் கதைப்ப வர்கள் இன்று இலங்கையில் அதிகம் உள்ளனர். அவர்களுக்கு கூறுவ தென்றால் அது ஆழமான வேலை அல்ல. ''கீழ்த்தரமான'' செயலா கும். எனினும், இச்செயலை புலிகள் ''கீழ்த்தரமான'' செயல் _ என ஒத்துக்கொண்டதும் ''பிரச்சினை'' தீர்ந்துவிடுமா? இவ்வேளையில் தான் நாம் புலிகளினால் வன்முறை யின் ''ஆழத்தை'' நோக்க வேண்டி வரும்.

பிரபாகரன் ஏற்றுக்கொண்டதன்படி, விடுதலைப் போராளியாகுவதற்கு தேவையான தராதரங்கள் அவரிடம் உள்ளன என்று தெரிகின்றது. இவ்விளக்கத்தின் கீழ் நோக்கின் அவர் தன்னை விடுதலைப் போராட் டத்தலைவர் என்று எண்ணிக் கொள் ளக்கூடும். பிரபாகரன் மக்களின் ஆதரவின்றி கெரில்லா இயக்க மொன்றை நடாத்த முடியாது என் பதை நன்கு அறிந்து வைத்திருப் பார். இதன்படி அவர் தனது மக்களுக்குப் பாதுகாவலனாகின் றார். எனவேதான். அவர் கொழும்பு அரசாங்கத்தை ''சிங்கள ஆட்சி தந்திரம்'' எனக்குறிப்பிட்டுள்ளார். (மக்கள் ஆதரவின்றியும் ஆயுதப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீகவாபி விவகாரம்: ஐ.தே.க.வின் இனவாதமும் அமைச்சர் அஷ்ரஃபின் தோல்வியும்!

தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டம் இன்று உச்சமடைந்திருக்கும் காலகட்டத்தில்; முஸ்லிம்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான தேவையும் போராட்டமும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய காலகட்டத்தில், முஸ்லிம்களின் உரிமைகளையும் நலன்களையும் அடைவதற்கு அதற்கு எதிராக இருக்கும் சக்திகளை முஸ்லிம் மக்கள் உடனடியாக அடையாளம் கண்டாக வேண்டிய நிலையிலும், முஸ்லிம்களின் உரிமைகளுக்காக அற்ப சலுகைகளை விடுத்து தீர்க்கமாகப் போராடக் கூடிய முஸ்லிம் அமைப்புக்களை இனம் காண வேண்டிய தருணத்திலும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

இத்தேவை வரலாற்றின் ஊடே கடந்த இரண்டு தசாப்த காலமாக உணரப்பட்டு இருந்தது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் என நம்பப்பட்ட முஸ்லிம் காங்கிரசின் கடந்த கால செயற்பாடுகளும் அரசியல் சலுகைகளுக்காக உரிமைகளைப் பின்தள்ளும் அதன் வழிமுறையும் தேர்தல்கள் அதனால் ஏற்படும் பதவி, அதிகாரங்களுக்காக அதன் விட்டுக் கொடுப்புக்களும் முஸ்லிம் மக்கள் அனுபவ ரீதியாக கண்டு கொண்டவை. முஸ்லிம்களின் உரிமைகளுக்காக நியாயமாக குரல் எழுப்ப வேண்டியதும் அதற்காகப் போராட வேண்டியதுமான சக்திகளின் அவசியம் இப்போது வன்மையாக உணரப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பாதையில் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பாய் அது எதனையும் பெரிதாகச் சாதிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. கப்பல் துறையால் முஸ்லிம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியதோ, முஸ்லிம் கிராமங்களின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளோ முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல. இதனை முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தோடு முஸ்லிம்கள் ஒருக்காலும் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடாது! அப்படிப் பார்க்கும் ஒரு தவறான பார்வை இருக்குமேயானால் அது மன்சூரையும், மஜீதையும், எம்.எச்.முகம்மதுவையும் புறக்கணிக்க முடியாத சக்திகளாக்கிவிடும். ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் என்ன தேவைகளுக்காக உருவாக்கப்பட்டதோ அல்லது அதன் தோற்றத்திற்கான வரலாற்றின் அவசியப்பாட்டையோ முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் நிரப்பவில்லை.

முஸ்லிம் காங்கிரசின் அரசியல் அதிகாரத்தின் உச்சகால கட்டமான இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் கூட முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாய் முஸ்லிம் காங்கிரஸ் கையாலாகத்தனமாக செயற்பட்டதற்கு இரு உதாரணங்கள் இருக்கின்றன. ஒன்று- முஸ்லிம்களின் கலாசார மத விவகாரங்களுக்கான அமைச்சர் பதவி இல்லாதொழிக்கப்பட்ட போது அதைப் பெறுவதற்கு முஸ்லிம் காங்கிரசால் முடியவில்லை என்பதற்குமப்பால் முன்பிருந்த முஸ்லிம் விவகார அமைச்சைக் கூட தக்க வைத்துக் கொள்ள முடியாமற் போனது. இரண்டு - ஹஜ்ஜுப் பெருநாள் விடுமுறை விவகாரம். இவை இரண்டும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அடிப்படை உரிமை தொடர்பான விடயங்கள். இதில் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் செயற்பாடு வெட்டவெளிச்சமாகிவிட்டது.

இந்த நிலையில் இன்று சிங்கள இனவாதிகளால் பூதாகரப் படுத்தப்படும் தீகவாபி விவகாரம் - இந்த விவகாரத்தில் முஸ்லிம்களிடமிருந்து 1982ம் ஆண்டுகளில் பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்ட நிலங்களை முஸ்லிம்களுக்கு பெற்றுத் தருவதற்காக அமைச்சர் அஷ்ரஃப் எடுத்த முயற்சி முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தில் ஒரு முதல் அடியாகும். ஆனால் இச் செயற்பாட்டில் அஷ்ரஃப் அவர்களால் ஒரு அங்குல நிலத்தைக் கூட வழங்க முடியாமல் போனதன் பின், முஸ்லிம் காங்கிரசினால் பிரச்சாரப்படுத்தப்படும் உரிமைப் போராட்ட மாயை வெளுத்துப் போயிருப்பதை ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களிலும் காண்கிறோம்.



ஆண்டாண்டு காலமாகப் பாரம்பரியமாக பெரும்பான்மை முஸ்லிம்களுக்கும் சிறு தொகையான தமிழர்களுக்கும் சொந்தமாகவிருந்த ''பொன்னன்வெளி'' வயற்காணிகள் அன்று பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரால் சூறையாடப்பட்டன. அந்நேரம் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் ரீதியாக எழுச்சி பெற்றிருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரசின் வரலாற்றுத் தோற்றத்திற்கு அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களினால் வகை தொகையின்றி ஆக்கிரமிக்கப்பட்ட ஏழை முஸ்லிம்களின் காணிகளும் - அதனால் ஏற்பட்ட ஏமாற்றங்களும் துயர்களும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது!

சிங்களக் குடியேற்றங்களை 1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி தனது முக்கிய வேலைத்திட்டங்களில் ஒன்றாக முடுக்கிவிட்ட போது சிங்கள ஆக்கிரமிப்புக்குப் பலியான கிழக்கு மாவட்டங்களில் அம்பாறையும் திருமலையும் குறிப்பிடத்தக்க மாவட்டங்களாகும். இன்று இம்மாவட்டங்களில் பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதிக்கம் நிலவுகிறது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் செறிந்து வாழும் ஒரே பெரும்பான்மை மாவட்டமான அம்பாறை மாவட்டம் சிங்களவர்களிடம் பறிபோனதானது முஸ்லிம்களை ஒரு அரசியல் நிர்வாக எல்லைக்குள் தக்க வைத்துக் கொள்வதற்காக இருந்த ஒரே வாய்ப்பையும் சிதைத்து விட்டது. இந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைவரும் அம்பாறை மாவட்டம் சிங்களவரிடம் பறிபோனதினையும் அதனை மீட்பது முஸ்லிம் காங்கிரசின் கடமை என்பதனையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அப்படி யாராவது அமைச்சர் அஷ்ரஃப் உணர்ந்து செயற்பட்டார் என வெறும் வாய்ச் சவாடல் விடுவார்களேயானால் அவர்களிடம் கேட்பதற்கான ஒரே ஒரு கேள்வி: அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் அம்பாறை மாவட்டத்தை சிங்கள இனவாத ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டுக் கொள்வதற்கு எத்தகைய போராட்டங்களை -வேலைத்திட்டங்களை இதுவரை முன்னெடுத்திருக்கிறார் என்பதேயாகும்.

அம்பாறை முஸ்லிம்களிடமிருந்து பறிபோவதற்கு திட்டமிட்டு செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் தயாரத்ன தலைமையிலான இனவாத ஆக்கிரமிப்பாளர்கள் இன்று தீகவாபி விவகாரத்தில் கச்சை கட்டிக் கொண்டு களத்தில் குதித்திருக்கிறார்கள். இவருடன் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மேலும் இரண்டு சிங்கள பாராளுமன்ற பிரதிநிதிகளும் உள்ளனர். ஆகவும் துரதிருஷ்டம் என்னவெனில் இம்மூன்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவதற்கு அம்பாறை மாவட்ட தமிழ் முஸ்லிம் வாக்குகளும் பயன்பட்டன என்பது தான். முஸ்லிம்களும் தமிழர்களும் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்காது விட்டிருப்பார்களேயானால் தயாரத்னவைத் தவிர வேறெந்த ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள பிரதிநிதிகளும் பாராளுமன்றத்திற்கு வந்திருக்க முடியாது! ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு மூன்று பாராளுமன்றப் பிரதிநிதிகளும் தமிழ் மக்களுக்கு ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியும் வந்திருப்பர் முஸ்லிம் மக்களினதும் தமிழ் மக்களினதும் வாக்குகளால் பாராளுமன்ற பிரதிநிதிகளாக இருந்து கொண்டு இன்று முஸ்லிம்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய காணி வழங்கும் விடயத்தை தீவிரமாக எதிர்க்கும் இனவாத மிக்க ஐக்கிய தேசியக் கட்சியினரை முஸ்லிம் மக்கள் இனம் காண வேண்டும். இவர்களையும், இவர்களின் ஏஜென்டுகளான முஸ்லிம் பிரதிநிதிகளையும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தீகவாபி சம்பவத்துக்குப் பின் நிராகரிப்பதைத் தவிர வேறுவழியேயில்லை.

தீகவாபியில் காணி இழந்த முஸ்லிம்களுக்கு காணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் போது தயாரத்ன தலைமையில் கொழும்பில் பௌத்த பிக்குகள், சிங்கள இனவாதிகள் மாபெரும் இனவாதப் பேரணியை நடத்தினர். இதில் தயாரத்னவின் பாத்திரம் பிரதானமானது. இந்த தயாரத்ன தான் தீகவாபி ஆக்கிரமிப்பு பிரதேசத்தின் காவலன்! இச்சம்பவத்தினூடாக ஐக்கிய தேசியக் கட்சியையும் ஏனைய கட்சிகளையும் சேர்ந்த சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் படுபிற்போக்குத்தனமான அரசியல் அம்பலத்திற்கு வந்திருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் ஏதோ சிங்கள மக்களுக்கு சொந்தமான காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமிக்கிறார்கள் என பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்பட்டனர் - அதற்கு இனவாத சாயம் பூசினர். உண்மையில் தீகவாபி மட்டுமல்ல அம்பாறை மாவட்டத்தில் இன்று சிங்கள மக்கள் வாழும் பெரும்பாலான நிலங்கள் முஸ்லிம்களினதும் தமிழர்களினதுமே.

20 வருடங்களுக்கு முன் சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக முஸ்லிம்களும் தமிழர்களும் நடாத்தியிருக்க வேண்டிய போராட்டத்தை அம்பாறைச் சிங்கள மக்கள் தாக்க நியாயத்துக்கப்பால் இன்று நடத்துகிறார்கள் என்பதே உண்மை. 1987க்குப் பின் முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் கூட நிலங்கள் தொடர்பான போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அமைச்சராக இருந்தும் கூட தீகவாபி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் இனவாத மிக்க ஆக்கிரமிப்பு வெளிப்பாட்டின் காரணமாய் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவிருந்த காணிகளில் ஒரு அங்குலம் நிலத்தைக் கூட இன்று வழங்க முடியாமல் போய் விட்டது.

அண்மையில் தயாரத்னவால் பத்திரிகைகளுக்கு விடப்பட்ட அறிக்கையொன்றில் பௌத்தர்கள் இதனால் பாதிப்படையப் போகிறார்கள் என்றும், இதற்கெதிராகப் போராடுவது தனது கடமை என்றும் நீங்கள் அரசியல் வாதியா? பௌத்தரா? என்ற கேள்வி வந்தால் தான் அரசியல் வாதியை விடுத்து பௌத்தர் என்பதே தனக்கு மேலானது என்றும் உரத்துச் சொல்லியிருக்கிறார். இதனை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். பௌத்த மக்களின் இருப்பு பாதுகாப்பு தொடர்பாய் அம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தயாரத்ன போன்றவர்கள் விட்டுக் கொடாமல் இருப்பது இந்த நாட்டின் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல. ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் அவர்களுக்கான சமத்துவத்தையும் இந்த இனவாதிகள் ஏற்றுக் கொள்ள மறுத்ததன் விளைவுதான் தமிழ் மக்களின் இன்றைய ஆயுதப் போராட்டம் என்பதை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

**தீகவாபியில் எங்களுடைய காணியை எங்களுக்குப் பகிர்ந்தளிக்க சிங்களவர்கள் விடாவிட்டால் சிங்களவர்களுடன் நாங்கள் தொடர்ந்தும் நண்பர்களாய் இருப்பது பற்றி சிந்திக்கத்தான் வேண்டும்! சிங்கள மக்களுடன் இந்த நாட்டில் சமமாக, சமத்துவமாக அனைத்துஉரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழ முடியாது என கடந்த நான்கு தசாப்தத்திற்கு மேலான தமிழ் மக்களின் அனுபவமும் அதன் விளைவுமே ஆயுதப் போராட்டச் சூழல்.**

**இன்று தீகவாபி விவகாரத்தில் எழுந்துள்ள நிலை சிங்கள இனவாத அரசியல்வாதிகளை என்றும் தங்களது இரட்சக நண்பர்களாக ஏற்றுக் கொண்டு சலுகைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் அதன் தலைவர் அஷ்ரஃப்புக்கும் நல்ல படிப்பினை தான். தயாரத்னவின் பத்திரிகை அறிக்கை அஷ்ரஃப்புக்கு நல்லதொரு பாடமாகட்டும். எமது தலைவர்களிடம் நீங்கள் அரசியல் வாதியா - முஸ்லிமா எனக் கேட்டால் நாங்கள் அமைச்சர்களாகவே இருப்பதற்கு விருப்பம் என்றே வாய் கூசாமல் சொல்வார்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை.**

முஸ்லிம் காங்கிரஸ் பொன்னன் வெளியில் காணிகள் வழங்குவதற்குப்புறப்பட்டு இன்று தீகவாபி ஆக்கிரமிப்பு புனித பிரதேசத்தை தனது அமைச்சின் புனர்வாழ்வு புனரமைப்பு ஒதுக்கீட்டின் மூலம் மூன்று மாதத்திற்குள் அபிவிருத்தி செய்து தருகிறேன் என சிங்கள ஆக்கிரமிப்பு பௌத்தர்களை தாஜா பண்ணி அவர்களிடம் சரணாகதியடைந்து கிடக்கிறது. ''பிச்சை வேண்டாம்நாயைப்பிடி'' என்ற கதைதான் இது! அஷ்ரஃபின் இக்கோரிக்கையைக் கூட தயாரத்ன நிராகரித்து விட்டார். எங்கள் புனித பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் எமக்குத் தெரியும் என்கிறார் தயாரத்ன.

ஆகவே, முஸ்லிம் காங்கிரஸ் இன்று என்ன செய்யப் போகிறது என்பது முக்கிய கேள்வியாகிறது. முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பீடத்தைச் சேர்ந்த மருதூர்க்கனி அவர்களும் மசூர் மௌலானா அவர்களும் சிங்கள இனவாதிகளுக்கெதிராக தமிழ் பத்திரிகைகளில் மாத்திரம் அறிக்கையை வாசித்துவிட்டு முஸ்லிம்களை ஏமாற்றுவதற்கு தொடர்ந்தும் முயற்சிக்கக் கூடாது! மசூர் மௌலானா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த காலத்தில் வடகிழக்கு மாகாண சிங்கள கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு மாகாண சபை நியமனப் பிரதிநிதியாக இருந்தபோது அம்பாறையில் முஸ்லிம்களின் பெரும்பான்மையை குறைப்பதற்கு திட்டமிட்டு அம்பாறையுடன் தெகியத்த கண்டியை இணைப்பதற்கு எதிராக அன்று வடகிழக்கு மாகாண அரசின் ஒரு அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு சிங்கள மக்கள் சார்பாக குரல் எழுப்பியவர் இதற்கான ஆதாரங்கள் (ஹன்சார்ட்டில்) உள்ளன. ஆகவே கட்சிக்குக் கட்சி அரசியல் செய்வதை விடுத்து விட்டு அம்பாறை மாவட்டத்தை ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து மீட்பதற்காக ஆக்கபூர்வமான போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முஸ்லிம் காங்கிரசும் ஏனைய முஸ்லிம் அமைப்புக்களும் முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஒற்றைப் பறவையும் வசந்தகாலமும்!

சேரன்



பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களாயிற்று. இந்த அரசு பற்றி ஏற்பட்டிருந்த மாய விம்பங்கள் எல்லாம் இப்போது சிதைந்து போய்விட்டன. ஒற்றைப் பறவை வசந்த காலத்தைக் கொண்டு வரும் என்று நம்பியவர்கள் விரக்தியிலும் துயரத்திலும் ஆழ்ந்து போயுள்ளனர்.

சந்திரிகா ஆட்சிப் பொறுப்பேற்ற போது இருந்த அரசு எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருந்தது என்பது எங்களுக்குத் தெரியும். நாற்பத்தெட்டுக்குப் பின்னான இலங்கை அரசு ''பெரும்பான்மைத்'' தேசிய இனத்தின் நலன்களைப் பேணுவதற்காக, பெரும்பான்மை மக்களின் பார்வைக் கோணத்திலிருந்தே கட்டி அமைக்கப்பட்டிருந்தது. அது ஒரு போதுமே எல்லா மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாக விளங்கமுடியாது. இன்னும் குறிப்பாக, ஐம்பத்தாறாம் ஆண்டுக்குப் பிற்பாடு அரசின் அனைத்து அமைப்புகளும், பணித்துறை ஆட்சி (Beaureocracy) மற்றும் அரச மூலங்களும் மிகப்பெருமளவுக்கு சிங்கள மக்களுடைய கைகளுக்குப் போய்விட்டன. அப்படிப் போக வேண்டும் என்பதும் பணித்துறையாட்சியை முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டுள் வைத்திருக்க வேண்டும் என்பதும்தான் பண்டாரநாயக்காவின் நோக்கமாகவும் இருந்தது. இன்றைக்கு, அரச சேவையிலும், பணித்துறையாட்சியிலும் எட்டு வீதமான தமிழ், முஸ்லிம் மக்கள் கூட இல்லை என்று ஆட்சி மொழிகள் ஆணைக்குழுத் தலைவர் சார்ள்ஸ் அபேசேகரா அவர்கள் கூறுகிறார். இத்தகைய அரசு, எடுக்கப்படும் எந்தத் தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தாது. எனவேதான் இந்த அரசுக் கட்டமைப்பைத் தலைகீழாக மாற்றியமைக்காத வரை பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாது என்பது உணரப்படவேண்டும். அரசியல் தீர்வுத் திட்டத்தின் மரணம் தருகிற பாடம் என்னவெனில் இந்த அரச அமைப்பை மாற்றுவதானால் மேல் மட்டங்களிலிருந்து துவங்க முடியாது; மேலும், ஒன்றிரண்டு ''நல்லெண்ணம்'' படைத்த அரசியல்வாதிகள் மட்டும் மாற்றங்களைக் கொண்டு வரப்போதுமானவர்களும் அல்ல.

இத்தகைய எந்தக் கணிப்பீடும் சந்திரிகாவுக்கு இருக்கவில்லை. அவருடைய அரசுக்கும் இருக்கவில்லை. துரதிருஷ்டவசமாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலங்களில் தான் தேசிய இனப்பிரச்சினை கருத்தியல்ரீதியாகவும், உக்கிரம் பெற்று விடுகிறது என்பதற்கு சந்திரிகாவின் ஆட்சியும் உதாரணமாகப் போய்விட்டது. ''சுத்தமான'' சிங்கள - பௌத்த மரபின் காவலர்களாகத் தம்மைக் காட்டிவந்த அரசியல், கலாசாரப் பாரமும் பாரம்பரியமும் சி.சு.கட்சிக்கு இருப்பதால் (அதுதான் அவர்களது வாக்காளர் தளமும் கூட) சந்திரிகா அரசும் இதிலிருந்து விலக முடியவில்லை. சந்திரிகா ஒரு போதுமே தமிழ், முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகிற, புரிந்து கொள்கிற தலைவராக இருக்க முடியாது. இதேநேரம் அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள ''இடதுசாரி''களின் நிலை மற்றும் கருத்தியல் பற்றியும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

2

ஐம்பத்தாறில் பண்டாரநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்த போது அவரையும் அவருடைய கட்சியையும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சுதேசியக் கலாசார, அரசியல் சக்திகளாகச் சரியாக இனங்கண்ட அதேவேளை, அந்தச் சுதேசிய அரசியலுள் உள்ளார்ந்து இருந்த பேரினவாதத்தைப் பார்க்கத் தவறிவிட்டிருந்தனர். நாட்செல்ல, நாட்செல்ல அதற்குத் துணை போயும் விட்டனர். இப்போது, சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்த போது, தேசிய இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை அது இதய சுத்தியோடு முன்வைக்கும்; முனையும் என்று நம்பிய அதே வேளை இலங்கை வரலாற்றில் இதுவரையும் இல்லாத வகையில் உலக வங்கி, சர்வதேச நாணய சபை, மற்றும் அமெரிக்காவுடன் கூட்டுச்சேர்ந்துள்ளமையைக் காண மறுக்கின்றனர். அல்லது கண்டும் துணை போகின்றனர். ஐ.தே.கட்சியின் பதினேழுவருடப் பயங்கரம் மீளவும் தலைதூக்காமலிருப்பதற்காகவே இந்த அரசுக்கு முட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது என்ற அவர்களுடைய கடைசி நியாயம் வாவிகளில் பிணங்கள் மிதக்கத் தொடங்கிய அன்றே செத்துப்போய் விட்டது. பதினேழு வருடப் பயங்கரத்துக்கு **மூலகாரணம்** அத்தகைய பயங்கரங்களைச் சாதகமாக்கிய சட்டங்களும், அரச அமைப்பும், இவையிரண்டினதும் பாதுகாவலர்களான இராணுவமும், மற்றக் காவல் படையினரும்தான். இன்னும் இத்தகைய பயங்கரங்களில் ஈடுபவர்கள் வழக்கு விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற ஜே.ஆர். ஜயவர்த்தன காலத்து Indemnity Bill எனும் சட்டம் வேறு இருக்கிறது. இவையனைத்துமே முற்றாக ஒழிக்கப்படும் வரை இருக்கின்ற, இனிவரப்போகின்ற எல்லா இலங்கை அரசாங்கங்களும் பயங்கரவாத அரசாங்கங்களாகவே இருக்க முடியும். இது மிகவும் எளிமையான இயக்க விதி. இதைப் புரிந்து கொள்ளாமல், இந்த அரசு வித்தியாசம்; இந்த யுத்தம் வித்தியாசம் என்று வாதிடும் புத்திஜீவிகள் உண்மையிலே புத்திஜீவிகள் அல்ல; சுத்தி ஜீவிகள்! மற்றவர்களைச் ''சுத்திச்'' சீவிப்பவர்கள்.

3

ஒவ்வொரு அரசாங்கமும், ஒவ்வொரு ஆளும் குழுவும் தனக்கென ஒரு கருத்தியலை உருவாக்கிக்கொள்கிறது. இந்த அரசாங்கத்தின் சமாதானத்துக்கான யுத்தம் என்னும் கருத்தியல், மிகுந்த புத்திபூர்வமாக உருவாக்கப்பட்டது. இது வளைகுடா யுத்தம், அதற்குப் பின்னரான ஈராக் மீதான அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்கள் என்பவற்றின் போது அமெரிக்க அரசும் அதனுடைய கருத்தியல் துணைவர்களான பத்திரிகைகளும் கட்டியெழுப்பிய ஒரு நாசூக்கான ஆனால் மக்களை நம்பவைக்கிற ஒரு தந்திரமாகும். சந்திரிகா அரசாங்கத்தின் இந்தக் கருத்தியலுக்கு மிகுந்த துணை புரிந்தவை பின்வரும் இரண்டு அம்சங்களாகும்:

1. புலிகளே யுத்தத்தைத் துவக்கினார்கள்; ''புலிகள் எம்மைத் தாக்கும் போது நாம் 'மாபிள்' விளையாடிக் கொண்டிருக்க முடியாது''
2. இப்போது இராணுவமும் மற்றைய அரச படைகளும் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் பொறுப்புணர்வுடனும் நடந்து வருகின்றன எனும் வாதம்.

புலிகள் யுத்தத்தை மீள ஆரம்பித்தமையை தார்மீக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் எவ்வாறு ஏற்றுக்கெள்ள முடியாதோ அதே போலவே மேற்கூறிய வாதங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் என்று பார்க்கலாம்.

4

ஏப்ரல் 19, துறைமுகத் தாக்குதல்களோடு தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் மற்றும் புத்திஜீவி, இடதுசாரி ஏனைய பத்திரிகையாளர்கள் மத்தியில் திடீரெனக் கடந்த காலங்கள், வரலாறுகளின் நினைவிழந்து போன ஒரு நிலை (Amnesia!) உருவாகி விட்டதோ என்று தோன்றியது.

ஏறத்தாழ முப்பது புத்திஜீவிகள் வரை கையெழுத்திட்ட அறிக்கையொன்று Peace, Lies and Ethnic Conflict என்ற தலைப்பில் வெளியாயிற்று. இந்த அறிக்கையில் பல முக்கிய அறிஞர்களும், புத்திஜீவிகளும் கையெழுத்திடவில்லையாயினும் ராம் மாணிக்கலிங்கம், ராதிகா குமாரசுவாமி, ராஜன் ஹூல் போன்றோர் கையெழுத்திட்டிருந்தனர். (இந்த அறிக்கை உருவாவதில் கணிசமான அளவு பங்கு வகித்த ஈ.பி.ஆர்.எல்.எப் கேதீஸ் லோகநாதன் இதில் கையெழுத்திடவில்லை!!) பயனுள்ள சில ஆய்வுக் கண்ணோட்டங்கள் இந்த அறிக்கையில் காணப்பட்டாலும் அறிக்கையூடாக மேலேழுந்த சந்திரிகா அரசு சார்பு நிலைப்பாடே இங்கு எங்களுடைய கவனத்துக்குள்ளாகிறது.

**''விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கெதிரான இலங்கை அரசின் நியாயமான இராணுவ நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம்''** என்பதுதான் இந்த அறிக்கையின் மையம். இதனைத் தொடர்ந்தே 'யுக்திய' பத்திரிகை 'தற்காப்பு யுத்தத்தை' ஆதரித்துத் தலையங்கம் எழுதிற்று. (இராணுவ இயலின்படி தாக்குதலே தற்காப்பின் உன்னதமான வடிவம் என்று இராணுவவியல் வல்லுனர்கள் வாதிட்டால் என்ன ஆவது?!)

''பிரபாகரனுக்கு யுத்தம்; தமிழ்மக்களுக்குச் சமாதானம்'' என்று தலையங்கம் எழுதிற்று 'விவரண' பத்திரிகை. Accountability in war as a Prelude to Peace என்று யுத்தத்தின் 'தவிர்க்க இயலாமை'' பற்றித் தலையங்கம் எழுதியது Counter Point. இந்தப் பத்திரிகைகள் எல்லாம் கடந்த ஆறு வருடங்களாகத் தமிழ், முஸ்லிம் மக்களின் அவல நிலையைச் சிங்கள மக்களுக்கு உணர்த்துவதில் முக்கிய பங்கு வகித்திருந்தன என்பது இங்கு நினைவூட்டப்படவேண்டியது அவசியம். சிங்களத் தேசியவாதிகளையும், தமிழ்த் தேசிய வாதிகளையும் கண்டித்து விமர்சித்த அதேவேளை, சந்திரிகா அரசை நடுநிலைமையான, இத்தகைய தேசியவாதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு அரசாக ஏற்றுக் கொண்டமைதான் இவர்கள் அனைவருடைய அடிப்படையான, மாபெரும் அரசியல் பிழையாகும். சந்திரிகா அரசும் சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் இறுக்கமாகவும் நெருக்கமாகவும் நிறுவனமயப்பட்ட அரசு என்பதை இவர்கள் வசதியாக மறந்து விட்டார்கள். அந்த மறதிதான் இலங்கை இராணுவம் நல்லபடியாக நடந்து கொள்கிறது; அது இப்போது அநியாயங்கள் செய்வதில்லை என்று நற்சான்றிதழ் வழங்கும் அளவுக்குப் பலரை இட்டுச் சென்றுள்ளது.

இத்தகைய 'நற்சான்றிதழ்களை' வழங்கியவர்களுள் முக்கியமானவர்கள் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரமும், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) அமைப்பைச் சார்ந்தவர்களும்தான். ராம் மாணிக்கலிங்கமும் வசதி வாய்க்கிற போதெல்லாம் இராணுவத்தின் நன்னடத்தைபற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை (அவருடைய Tigerism எனும் சிறுநூலைப் பார்க்கவும். இந்த நூலின் 400 பிரதிகளைச் சந்திரிகா அரசே வாங்கி விநியோகம் செய்துள்ளது என்பது பலருடைய காதுக்கும் எட்டாத சேதி!)

இந்த நற்சான்றிதழ் விஷயம் எப்படியிருக்கிறதென்றால், வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சர் சீனியின் விலையை இருபது ரூபாயால் அதிகரிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். மக்களும் எதிர்க் கட்சிகளும் கூச்சல் போடுகிறார்கள். உடனே விலையேற்றத்தைப் பத்து ரூபாயாகக் குறைக்கிறார். ஆஹா! சீனியின் விலை குறைந்து விட்டதே என்று அரசும் அமைச்சரும் அவர்களுடைய தொண்டரடிப் பொடிகளும் உற்சாகமாகப் பேசுகிறார்கள். விலை என்னவோ பத்து ரூபாயால் கூடியிருக்கின்றதென்பதை வசதியாக மறந்து விடுகிறார்கள்.

5


யுத்தம் ஆரம்பித்த உடன் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரை படையினருக்கு வலியுறுத்தப் பட்டது என்று அறியக்கிடைக்கிறது. எத்தகைய அறிவுரையும் யுத்த யதார்த்தத்தில் எடுபடாது என்பதும் படையினரின் சிந்தனை படையினரின் கட்டமைப்பு என்பன அடிப்படையிலே மாறாத வரை அப்பாவி மக்களைப் படுகொலை செய்வது என்பது ஒரு போதுமே மாறாது என்ற எளிமையான உண்மை ஏன் பலருக்குப் புரியாமல் போகிறதென்பது ஆச்சரியம். சமாதானம் கோருபவர்களும், மனித உரிமை வாதிகளும் கட்சி, அரசு, குழுச் சார்பு நிலைப்பாடுகள் எடுப்பது அவர்களது தார்மீகத்தைக் கேலிக்கும்/ கேள்விக்கும் உள்ளாக்கும். இயக்க சார்பற்ற, கட்சி சார்பற்ற, அரச சார்பற்ற ஒரு அரசியல், தார்மீக நிலைப்பாட்டையே நாம் பேண விரும்புகிறோம். இதனையே வலியுறுத்துகிறோம். சந்திரிகாவை மட்டும் நம்பி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை எடுக்கலாம் என்றால், இதே தருக்கத்தின்படி, விடுதலைப் புலிகளிலும் பிரபாகரனின் இடத்துக்கு இன்னொருவர் வந்து ''இதோ ஜனநாயகம் கொண்டு வருகிறேன்; சமாதானம் கொண்டு வருகிறேன்'' என்று சுவைப்படப் பொருள் படப் பேசினால் இவர்கள் அனைவரும் புலிகளையும் ஆதரிக்க வேண்டும். எங்களால் இரண்டையுமே செய்ய முடியாது. ஏனெனில், பிரச்சினை அமைப்பு ரீதியானது. ஒரு புதிய தலைவரால் மட்டும் இதுவரை காலமாக உருவாகி வந்திருக்கும் கருத்தியல் கட்டுமானத்தையும், கொள்கைகளையும், நடைமுறையையும் மாற்றிவிட முடியாது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள ஆணைக்குழு ஒரு பேரினவாத எழுச்சி?



என். சரவணன்

"எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு சிங்கள மக்களுக்கு அநியாயங்கள் நிகழ்ந்துள்ள இப்படியான ஒரு காலகட்டத்தில் இப்படியான ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படுவது மிகவும் அவசியம். இது சிங்கள நாடு. யார் என்ன தான் சொல்லட்டும் அன்றிலிருந்து இன்று வரை இது சிங்களவர்களின் நாடு..." (திவய்ன-19.12.96)

சிங்கள பாதுகாப்புச் சபையின் தலைவர் காமினி ஜயசூரிய ஆற்றிய உரையின் ஒரு பகுதியே அது.

கடந்த டிசம்பர் மாதம் 18ம் திகதியன்று அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தில் வைத்து 42 சிங்கள பௌத்த அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து அமைத்த "சிங்கள ஆணைக்கு"வின் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போதே மேற்படி உரையை ஆற்றியிருந்தார்.

## ஆணைக்குழுவின் பின்னணி

இந்த "சிங்கள ஆணைக்குழு"வை தேசிய ஒருங்கிணைப்பு கமிட்டி எனும் அமைப்பே முன்னின்று அமைத்துள்ளது. காலனித்துவத்துக்குப் பின்னர் சிங்கள மக்களுக்கு நடந்த அல்லது நடத்தப்பட்ட சகல அநீதிகளையும் ஆராய்வதற்காகவே இவ் ஆணைக்குழுவை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முக்கிய 14 தலைப்பில் இவ்வநீதிகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் (பார்க்க பெட்டி செய்தி) பெப்ரவரியிலிருந்து ஒன்பது மாத காலத்துக்குள் இவ்வாணைக்குழு தனது ஆராய்வுகளை முடிக்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளது இவ்வமைப்பு.

பௌத்த விபர ஆணைக்குழு என்ற ஒன்று பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலப்பகுதியில் இயங்கியது. அவ்வாணைக்குழுவின் பரிந்துரைகளை தான் நடைமுறைபடுத்துவதாக பண்டாரநாயக்கா அப்போது பௌத்த மகா சங்கத்தினருக்கு உறுதியளித்திருந்தார். ஆனாலும் அவர் அதற்குள் கொல்லப்பட்டார். (அவர் கொல்லப்பட்டதும் பௌத்த துறவியொருவரினால் என்பது தெரிந்ததே)

இன்று அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அவ்வளவு சாதாரண ஆணைக்குழுவல்ல இது 'சிங்கள ஆணைக்குழு. இதன் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.டபிள்யு.வல்பிட்ட. ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக முன்னாள் பிரதம நீதியரசர் ஏ.டீ.டி.எம்.பி.தென்னகோன், பேராசிரியர். ஏ.டி.வீ.டி.எஸ் இந்திரரத்ன (இவர் முன்னை நாள் புத்த சாசன ஆணைக்குழுவினதும் உறுப்பினர்) பேராசிரியர் பீ..ஏ.டி.சில்வா, பீ.டீ.உடுவெல (முன்னைநாள் செயலாளர்-பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு) பேராசிரியர்.திருமதி.லிலி.டி.சில்வா (ஓய்வு பெற்ற விரிவுரையாளர்-பாளி-பௌத்த, கற்கை-பேராதெனிய பல்கலைக்கழகம்) ஜீ.பி.எச்.எஸ்.டி.சில்வா (ஓய்வு பெற்ற தலைவர்-தேசிய சுவடிகள் கூடத்திணைக்களம்.)

இந்த 'சிங்கள ஆணைக்குழு'வின் தோற்றமானது நிகழ்காலச் சூழலில் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உச்ச வெளிப்பாடாகவே காண முடிகிறது என்றால் அது மிகையில்லை. இதனை அமைக்கும் நோக்கம், அமைக்கின்ற சூழல், பின்னிற்கும் சக்திகள், இவை முன்வைக்கும் கருத்துக்கள் என்பன ஆழ்ந்து அவதானிக்க வேண்டியவை. போரை நிறுத்த - சமாதானத்தை ஏற்படுத்த, குறைந்தபட்சத் தீர்வைத்தானும் கொண்டுவர இருக்கின்ற சொற்பமான வாய்ப்புகளை அடைத்துவிடும் ஒரு சூழல் இப்படி முதிர்ச்சி பெற்று வருவதை அநாயசமாக தட்டிக் கழித்துவிட முடியாது. பின்னணியில் இருக்கும் சக்திகள், பலவீனமானவையல்ல. இலங்கையில் மிகவும் முன்னணியிலுள்ள புகழ்பெற்ற சிங்கள பௌத்த பேரினவாதிகள், அவர்களது அமைப்புகள் (சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய, சிங்கள மீட்பு முன்னணி, சிங்கள பாதுகாப்புச் சபை, தேசப்பிரேமி பிக்கு பெரமுன உள்ளிட்ட பல அமைப்புகள்) எல்லாமே ஓரணி திரண்டுள்ளன என்பதும் அவை ஏனைய தமிழ், முஸ்லிம், மலையக தேசங்கள் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்துக்களும் பிரச்சாரங்களும் எவ்வகையானவை என்பதும் குறிப்பாக அவதானிக்கத்தக்கவை.

## "இனியும் சகியோம்!"

அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போது உரையாற்றிய மாதுலுவாவே சோபித்த ஹிமி

"தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏதோ வரலாற்று ரீதியான அநியாயங்கள் நடந்துவிட்டதாக பெரியளவில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. ஏதோ சிங்களவர் மிகவும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருவதாக அல்லவா மறுபக்கம் சொல்லப் படுகிறது. இப்படித்தான் சிங்களவர்களைப்பற்றி பிழையான படமொன்றையே உலகுக்குக் காட்டி வந்துள்ளனர். கதிர்காமத்தில் ஊசியால் உடலில் குத்தி நேர்த்திக்கடன் செலுத்துவதை படம்பிடித்துச் சென்று தமிழ் மக்கள் எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் பாருங்கள் என புலிகள் பிரான்ஸில் பிரச்சாரம் செய்கின்றனர்... சிங்களக் கிராமங்களில் தாங்களே படுகொலை செய்துவிட்டு அந்தப் புகைப்படங்களை தமிழ் மக்களை சிங்களவர் படுகொலை செய்ததாக அமெரிகாவில் காட்டுகின்றனர் புலிகள். எனவே பௌத்த மறுமலர்ச்சிக்கான இந்த சிங்கள ஆணைக்குழுவால் பலவற்றைப் புரிய முடியும்..."என்று குறிப்பிட்டார். (லங்காதீப-20.12.96)

குணதாச அமரசேகர உரையாற்றுகையில் "...இன்று எமது நாட்டின் சனத்தொகையில் எழுபத்தைந்து வீதமளவு வாழும், அதே போல் "இனம்" என்று அழைக்கக்கூடிய தகுதியுடைய ஒரேயொரு இனக்குழுமமான சிங்களவர் பல இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த ஆணைக்குழு ஒரு அரசியலின் அடிப்படையிலேயே முன்செல்ல வேண்டும். அது குறிப்பாக தேசிய அரசியல் நோக்குடன் இருக்க வேண்டும். அது சிங்கள இனத்தை முதன்மையாகக் கொண்ட "சிங்களத்துவத்தை" மையப்படுத்திய தேசிய நோக்காதல் வேண்டும். இதற்கு சந்தர்ப்பவாத "கட்சி அரசியல் முறை"யை கைவிட்டு விதேச அரசியலுக்குப் பின்னால் போகாமல் இருத்தல் வேண்டும்...

இந்த நாட்டின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சியிலமர்ந்து செய்ததெல்லாம் சிங்களவரின் அரசியலை பலவீனப்படுத்தியதே. சரியாக இரண்டாகப் பிரித்து பூஜ்ஜியத்துக்கு தள்ளியதே இதன் மூலம் நடந்தது. இதன் காரணமாக சிறுபான்மை இனவாதிகளின் அதிகாரம் வரவர மேலெழும்பியது. அதிகாரம் படைத்தவர்கள் தாம் அதிகாரத்தைப் பெறுவதற்கான தீர்மானகரமான சக்திகளாக சிறுபான்மையினர் ஆனார்கள். சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட சகல அநியாயங்களுக்கும் காரணமானது இதுவே. இப்போதாவது சிங்களவர் தமது இனத்தின் அழிவை நெருங்கி வருகிறார்கள் என்பதை உணர வேண்டும். அதற்கு இந்த ஆணைக்குழு பயன்பட வேண்டும்...

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் சகல கட்சிகளும் இனவாதக் கட்சிகளே என்பதை யாவரும் அறிவர். அந்த இனவாதத் தலைவர்கள், தமது இனவாத முகத்தை தயங்காது வெளிக்காட்டி வருகிறார்கள். இவர்கள். சிங்கள மக்களை இனவாதிகளாகவே உலகம் முழுதும் பிரச்சாரப்படுத்தி வருகின்றனர். இவ்வளவையும் சிங்களவன் இத்தனை காலம் பொறுமையாக சகித்துக்கொண்டிருந்தான். இவ்வாறு சிறுபான்மை இனவாத கட்சிகள் செயற்படும் வரை சிங்களத்துவத்தை முன்னிறுத்திய தேசிய அரசியலொன்றை வளர்க்க முடியாது. தொடர்ந்தும் இக்கட்சிகள் இயங்க இடமளிக்கத்தான் வேண்டுமா என்பதை இந்த ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டும்..." (29.12.96-திவய்ன)

மடிகே பஞ்ஞானசீல நாஹிமி உரையாற்றுகையில் "...சகல பௌத்த அமைப்புகளும் ஒன்றிணையாவிட்டால் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு இன்னும் நாற்பது ஐம்பது வருடங்களில் முழு இலங்கையையும் ஆக்கிரமித்து விடும். நாம் ஒன்றிணையாது போனால் இந்த ஆக்கிரமிப்பு நிச்சயமாக நடந்தே தீரும்..."

அலுத்கம தம்மானந்த அநுநாயக்க ஹிமி உரையாற்றுகையில்

"...இன்று அதிகார பூர்வமாக பதிவு செய்யப்பட்ட 32 கட்சிகள் உள்ளன. கடந்த 48 ஆண்டுகளில் 48 கட்சிகள் தோன்றாமல் இருந்தது ஆச்சிரியமானதே. இந்நாட்டில் தோன்றிய கட்சிகள் பல சிங்களவரை பிளவுபடுத்திய கட்சிகள். மகாசங்கத்தினரும், மக்களும் கட்சிரீதியாக பிளவுற்றிருக்கின்றனர். கட்சி பேதமில்லாமல் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகளையும் கலந்து கொள்ளும்படி எழுத்துமூலம் அறிவித்திருந்தோம்.

கிராமப்புறங்களில் நூற்றுக்கு 25 வீதம் சிறுபான்மையினர் வாழ்ந்தாலும் சிங்கள தமிழ் இருசாராரும் அப்பிரதேசத்தை நிர்வகிக்க வேண்டுமென கடந்த நாட்களில் செய்தி வெளியாகியிருந்தது. அப்படியானால் கொழும்பு, கண்டி போன்ற பிரதேசங்களுக்கு என்ன ஆவது? இன்று எமக்கிருப்பதோ 25ஆயிரம் மைல் பரப்பே அதிலும் கொஞ்சம் கடலில். இருக்கும் கொஞ்சத்தையும் பிரித்து போடப் போகிறார்களா...?"

பேராசிரியர் கம்புறுபிட்டியே ஆரியசேன நாஹிமி உரையாற்றுகையில் "... பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது தொடர்பாக 78ம் ஆண்டு அரசியலமைப்பில் உருவாக்கப்பட்ட விகிதாசார தேர்தல் முறையினால் சிங்களவர்க்கு அநியாயம் நடந்துள்ளது. வேறு காலங்களில் ஒரு ஆசனம் மட்டுமே கிடைக்கிற தொண்டமான், அஷ்ரப் போன்றவர்களுக்கு இதன் காரணமாக ஒன்பது , ஏழு என கிடைக்கிறது. சிங்களப் பெரும்பான்மை இனத்தை ஏமாற்றி சிறுபான்மை வாக்குகளால் ஆட்சிக்கு அமர பிரதான கட்சிகள் செயற்படுவது இந்த தேர்தல் முறையினாலேயே. இதனால் என்றாவது இனக்கலவரமொன்று வரும். சிங்களவரைப் பாதுகாக்க இந்தத் தேர்தல் முறை ஒழிக்கப்பட வேண்டும்..." (19.12.96-திவய்ன)

தேசிய ஒருங்கிணைப்பு கமிட்டியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் பியசேன திசாநாயக்க உரையாற்றுகையில்

"...பிரித்தானியர் மிகவும் சூட்சுமமான முறையில் தமிழ் மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் விசேட சலுகைகளை அளித்தனர். பெரும்பான்மை சிங்களவர்க்கு அநீதி புரிந்தனர். இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சி புரிந்தவர்கள் அனைவரும் சிங்கள மக்களின் சகல உரிமைகளையும் காட்டிக் கொடுத்து சிறுபான்மையினரை வென்றெடுப்பதனூடாக அதிகாரத்தில் அமரவே முயன்றுள்ளனர். இதனை சிங்கள மக்கள் மேலும் பொறுக்க மாட்டார்கள்..."

## பேரினவாத எழுச்சியை அலட்சியம் செய்யலாமா?

இவ்வாறான உரையாடல் சிங்கள மக்களை மேலும் சிங்கள பேரினவாத கருத்தியலை நோக்கி அணிதிரட்டவும் வளர்க்கவுமே செய்கிறது.

அண்மைய சிங்கள பௌத்த பேரினவாத எழுச்சியானது அலட்சியம் செய்யத்தக்க ஒன்றல்ல. தமிழ் மக்கள் முன்வைத்தால் அதை இனவாதமென்றும் சிங்களப் பேரினவாதம் முன்வைத்தால் அதனை உரிமையென்றும் மிகச் சாதாரணமாகவே பேசப்படும் ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது.

தற்செயலாக நடந்த பிழையொன்றினால் தீகவாபி பிரச்சினை துவேஷத்தை கிளப்பியிருந்தமையும் அது தற்செயலானது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னரும் தென்னிலங்கையில் நடந்த பேரினவாத பிரச்சாரங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் கருத்தரங்குகள் என்பன பேரினவாதம் எவ்வளவு தூரம் நிறுவனமயப்பட்டு திட்டமிட்டு முன்னேறி வருகிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

"ஈழம் படுகுழியானது" எனும் தலைப்பில் நடந்த கண்காட்சியில் காண்பிக்கப்பட்ட புகைப்படங்களும், தற்போது பல்கலைக்கழக மட்டத்தில் நடத்தப்படும் கருத்தரங்குகளும் ,சிங்கள மொழியிலான பேரினவாத நூல் வெளியீடுகளும் பக்கச்சார்பான-அதே வேளை பொய்மை மிகுந்த பிரச்சாரங்களை வெளிப்படுத்தி வருகின்றன. சிங்கள பேரினவாத சக்திகளை அணிதிரட்டுகின்ற பரந்த தேசிய முன்னணி அமைக்கப்பட்டு வருவதும் அது ஜனவரி இறுதிக்குள் தன்னை வெளிப்படுத்த இருப்பதும் கட்சி ரீதியில் பேரினவாதம் நிறுவனமய்படுவதை காட்டுகிறது.

தென்னிலங்கையில் பலர் இந்நிகழ்வுகளை அலட்சியமாகவே காண்கின்றனர். பலமற்ற சிறுகுழு மாத்திரமே இவையென்றும் இதனால் ஒன்றும் ஆகப்போவதில்லையென்றும் பேசப்பட்ட போதும் முக்கியமாக இங்கு கவனிக்க வேண்டிய ஒரு அம்சம்தான் இச்சக்திகளின் இயங்கியலுக்கும், இருப்புக்கும் தோதான சூழல் தேசிய அளவில் அதிகார மட்டத்தில் இயங்கி வருகிறது என்பது தான்.

## பேரினவாத சார்பு அரசொன்றினால் என்ன பண்ண முடியும்?

அரசினதும் அரச யந்திரங்களினதும் செயற்பாடுகள் பேரினவாதத்துக்குசார்பாகவே உள்ளன. அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களது உரைகள், அரச தொடர்பு சாதனங்களுக்கூடாக ஆட்சேர்ப்புக்கு காட்டப்படும் விளம்பரங்கள், எல்லைப்புற கிராமப்படுகொலை பற்றி வாராந்தம் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் விவரணங்கள் செய்தித் தொகுப்புகள், அரசியல் கலந்துரையாடல்கள் என்பன மறுபக்கத்தை சொன்னதே இல்லை. போதாததற்கு சகல தொடர்பூடக செயற்பாடுகளும் அதாவது அரச சார்பற்ற 'சுதந்திர' பத்திரிகைகளும் கூட பேரினவாதத்துக்கு எதிரான கருத்தூட்டலை, வழிநடத்தலை செய்வதில்லை.

ஐ.தே.க. சார்பு டீ.என்.எல் தொலைக்காட்சி சேவையோ அரச தொடர்பு சாதனங்களுடன் போட்டியிட்டு பேரினவாதத்தை கக்குகின்றன. இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

சிங்கள பேரினவாத தரப்பு முன்வைப்புகளுக்கு தமிழ்தரப்பின் நியாயமான பதில்களை ஜனநாயக மட்டத்தில் முன்வைக்கக்கூட வாய்ப்பான சூழல் தான் தென்னிலங்கையில் உண்டா? முன்வைக்கப்பட்டுள்ள அரைகுறை தீர்வை நோக்கிக் கூட சிங்கள மக்களை அணிதிரட்ட முடியாத (முயலாத) அரசாங்கம் நாளை குறைந்தபட்ச சமஷ்டிக்காகக் கூட அணிதிரட்டுவதென்றால் அது சாத்தியமாகுமா? ஏற்கெனவே சிங்கள பேரினவாதத்துக்காக தீர்வுத்திட்ட யோசனைகளிலிருந்து ஆங்காங்கு விட்டு கொடுத்து வந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்ட ஏதாவது செய்ததுண்டா?

இந்நிலைமைகளுக்கெல்லாம் மாறாக இயங்கி வரும் அரசாங்கம் புதிய பேரினவாத எழுச்சியை முறியடிக்க என்னதான் பண்ணிவிட முடியும்?

பேரினவாதம் செய்யும் எச்சரிக்கை, பயமுறுத்தல், வரலாற்றுத்திரிபு, கருத்தியலூட்டல் என்பனவற்றுக்கு பொறுப்புடன் எதிர்நிலையில் செயற்பட வேண்டிய அரசே, அதற்குத் துணை போகிறது. நாளை ஒரு சமாதானச் சூழல் தோன்றினாலும்கூட அதற்காக அது செயற்பட முனைந்தாலும் தானே வளர்த்துவிட்ட பேரினவாத சித்தாந்தமானது .எந்தத் தீர்வுகளையும் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப் போவதில்லை.

### "சிங்கள ஆணைக்குழு ஆராயவிருக்கும் 14 தலைப்புகள்:

1.காலனித்துவ காலம் தொடக்கம் இன்றுவரை குறிப்பாக அரசியல் கட்சிமுறை உட்பட பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்களின் போது சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

2.இனவாத-பிரிவினைவாத கருத்துக்களின் சித்தாந்தங்களினை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கட்சி மற்றும் குழுக்களினால் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

3.விசேடமாக தரிசு நிலச்சட்டம் விகாரை, தேவாலயங்கள் சட்டம் மற்றும் அதற்கு சமமான வேறு சட்டங்களின் கீழ் மலையகத்தில் பாரம்பரிய இடங்கள் அனைத்தும் சிங்கள மக்களிடமிருந்து பறிக்கப்பட்டதினால் சிங்களவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

4. 1815க்குப் பின்னர் சிங்கள கிராமிய மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

5.இந்திய தொடர்புள்ள-அண்மையில் இந்நாட்டுக்கு குடியேறிய தமிழ் மக்களுக்கு ஸ்ரீ லங்கா பிரஜாவுரிமை வழங்கியபோது சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

6.காலனித்துவ காலம் தொடக்கம் இன்றுவரை சிங்கள கலாச்சார பண்பாடுகளை அழிக்கும் நோக்குடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட சுதேச-விதேச அமைப்புக்களின் தந்திரோபாயரீதியிலான செயற்பாடுகளினால் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

7. காலனித்துவ காலம் தொட்டு அதிகாரம் வாய்ந்தவர்களினால் செயற்படுத்தப்பட்ட கல்விக் கொள்கை மற்றும் நடைமுறைகளின் காரணமாக சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

8.சுதந்திரத்துக்குப் பின்னர் அவ்வப்போது பதவிக்கமர்ந்த அரசாங்கங்களினால் நடைமுறைபடுத்தப்பட்ட கல்வி மற்றும் அரசியல் முறைமைகளினால் குறிப்பாக இளம் சந்ததியினருக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

9. பிழையான முறையில் தொடர்பூடகங்களை பயன்படுத்துவதன் மூலம் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

10.சிங்கள மொழிக்கு வழங்கப்பட வேண்டிய முன்னுரிமை வழங்கப்படாததன் காரணமாக சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

11. அரசியல் மற்றும் வேறு காரணங்களினால் வர்த்தக வாணிப தொழிற்துறைகளில் சிங்கள மக்களுக்கு உரித்தாக வேண்டிய நியாயமான இடம் கிடைக்கப்படாததனால் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

12.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் அதிகாரத்திலிருந்து விரட்டப்பட்டதன் காரணமாக சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

13. சுதந்திர இலங்கையின் அரசாங்கங்களினால் பின்பற்றப்பட்ட-சிங்கள மக்களிடமிருந்து அந்நியப்பட்ட வெளியுறவுக் கொள்கையினால் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட அநீதிகள்.

14. ஆணைக்குழுவின் கருத்தின்படி மேற்குறிப்பிட்ட விடயங்களில் அடங்காத-சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்பட்ட இதர அநீதிகள்.

(சண்டே ஐலண்ட் 29-12-96 அன்று வெளியிடப்பட்ட விளம்பரத்திலிருந்து...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ரீ.என்.எல். மீதான பாய்ச்சல்!

'ரீ-என்-எல்' தொலைக்காட்சி சேவையின் செய்தி முகாமையாளர் இஷானி விக்கிரமசிங்க அவர்கள் இரகசியப் பொலிசாரால் புலன் விசாரணைக்குட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்ட விவகாரம் கடந்த வாரம் சூடுபிடித்திருந்தது. புத்தாண்டு கொண்டாட்டங்களின் மத்தியில், தொடர்புச்சாதனத் துறையைச் சார்ந்த ஒருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைக்குட்படுத்தப்பட்டது, தொடர்புச்சாதனத்துறையைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் எதிர்ப்புணர்வையும் உருவாக்கிவிட்டுள்ளது.

வெல்லாவெளியில் உள்ள விஷேட அதிரடிப்படை முகாம் ஒன்றின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்த செய்தியொன்றை ஒளிபரப்பியதனைக் காரணம் காட்டியே இந்த விசாரணை நடாத்தப்பட்டுள்ளது. நள்ளிரவு நேரத்தில் இந்த தனியார் ஒளிபரப்பு சேவை அலுவலகத்துள் நுழைந்த பொலிசார் எந்தவித பிடியாணையும் இல்லாமல் அலுவலகத்தில் தேடுதல் நடாத்தியதுடன், அலுவலகத்திலிருந்த தஸ்தாவேஜுகளைப் புரட்டி அங்கு வேலை செய்யும் ஊழியர்களது குறிப்பாக தொடர்பு சாதனைத்துறை ஊழியர்களது முகவரிகளையும், அலுவலக அனுமதியின்றியே எடுத்துச் சென்றுள்ளனர். இந்த அத்துமீறல் நடவடிக்கை சட்டவிரோதமானது என்று ரீ.என்.எல். ஸ்தாபனம் ஆட்சேபித்ததைத் தொடர்ந்தே இவ்விசாரணைகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரை விசாரிக்க நீதிமன்றத்தின் முன் ஆணை பெறப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதிகாரி மட்டத்திலான பொலிசார் ஒருவரினால் விசாரணை செய்யவும், கைது செய்து வைத்திருக்கவும் இச்சட்டம் வாய்ப்பளிக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்படுபவர் 24 மணி நேரத்துள் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்படுவது அவசியமாகும்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும் ஒருவரை மேலும் விசாரிக்கவும், குற்றப்பத்திரிகைகளை தயார் செய்யவும் என 14 நாட்களுக்கு குறையாத தடுப்புக்காவல் உத்தரவு தருமாறு பொலிசாரால் நீதிபதியிடம் கோரிப்பெறமுடியும். நாட்டினைப் 'பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும்' அவசியம் கருதி நீதிபதிகள் இவ்வாறான உத்தரவை சாதாரணமாகவே வழங்கிவிடுவதுமுண்டு. உடல்நலக்குறைவு போன்ற காரணங்களல்லாத வேறெந்தக் காரணங்களுக்காகவும் ஒருவரை இத்தகைய தடுப்பு முகாம் உத்தரவிலிருந்து பாதுகாத்துவிட முடியாது; அவருக்கு பிணை வழங்கப்படுவதும் இல்லை.

இஷானி விக்கிரமசிங்கவும் கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரது உடல் நலமின்மையைக் காரணம் காட்டி (அதற்கான வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு) பிணையில் விடுமாறு கோரியதன் பேரில் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளார். இஷானி விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மருமகளும், பொ.ஐ.மு.வில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை சேர்ந்த (தேசியப்பட்டியல்) பாராளுமன்ற உறுப்பினருமான அசித்த பெரேராவின் மனைவியும் ஆவார். அரசியல் செல்வாக்கும் பிரபல்யமும் கொண்ட ஒருவரான இஷானிக்கு நடந்த ஒரு சம்பவம் இது என்பதால், இன்று அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டம் பொலிசாரால் அவ்வளவுக்கு கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்பட முடியும் என்பதற்கு உதாரணமாக இந்த விடயத்தை பலரும் எடுத்துக் கொண்டு இப்போது பேசுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு தொடர்பு சாதனவியலாளர் என்ற முறையில் வெளியான செய்தியில் தவறு இருப்பதாக அரசாங்கம் கருதும் பட்சத்தில் அவரை சாதாரண சட்டத்தின் கீழேயே விசாரித்திருக்க முடியும். அதற்கான திருத்தத்தையும் வெளியிடுமாறு தொலைக்காட்சி சேவையைக் கோரியிருக்க முடியும். உண்மையில் ரீ.என்.எல். தான் திருத்தம் இருப்பின் அதை வெளியிடத் தயார் எனவும் அறிவித்திருந்தது.



ஆனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து விமர்சிக்கின்ற ஒரு தொலைக்காட்சி சேவை இது என்பதால், ஆத்திரம் கொண்டுள்ள அரசாங்கம் பொலிசாரை ஏவிவிட்டு மிரட்டுவதற்கு முயன்றிருக்கிறது. தொடர்புசாதனவியலாளர்களை தாக்குவது, மிரட்டுவது என்பன ஒன்றும் இந்த அரசாங்கத்திற்குப் புதிய விடயம் அல்ல. தன்னைக்குறித்து விமர்சிப்பவர்களை தாக்குவதை 'ஜனநாயகம்' என்று கூறுகிறது பொ.ஐ.முவின் புதிய அரசியல் அகராதி!. அதற்கு தேவையானதெல்லாம் செய்தியிலிருந்த தவறை திருத்துவதை விடவும் (தவறு இருந்ததா என்பது வேறு விடயம்!) இந்த சேவையை எப்படியாவது மிரட்டி நசுக்கி விட வேண்டும் என்பது தான் எண்ணம். அதனால்தான் அது பொலிசாரை ஏவிவிட்டுப்பார்த்தது.

பொலிசாரும் தமது வழமையான கைங்கரியத்தைக் காட்டி விட்டிருக்கிறார்கள். விசாரணைக்காக நாலாம் மாடிவரை இஷானி விக்கிரமசிங்கவை இழுத்தடித்திருக்கிறார்கள்.

24 மணி நேரத்துள் நீதிபதி முன் நிறுத்த வேண்டும் என்பதற்காகவே வெள்ளிக்கிழமைகளில் தமிழ் இளைஞர்களை கன்னாபின்னாவென்று அள்ளிச் சென்று பொலிஸ் நிலைய கொட்டிகளில் அடைத்து வைப்பது அவர்களது வழமையான கடமைகளில் ஒன்று. வெள்ளிக்கிழமை கைது செய்யப்படும் ஒருவரை, சனி, ஞாயிறு தினங்கள் நீதிமன்ற விடுமுறையாக இருப்பதால், திங்கள்வரை பொலிஸ் நிலையத்திலேயே வைத்திருக்க முடியும். இந்த இரண்டு நாட்களில் பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களுடன் பேரம் பேசி பணம் கறப்பது, பொலிஸ் நிலையத்தில் மறியல் வைக்கப்பட்டிருப்பவர்கட்காக அரசால் வழங்கப்படும் உணவுக்கான தொகையை தாமே சுருட்டிக் கொள்வது (உறவினர்களே பெரும்பாலும் உணவு கொடுத்துவிடுவார்கள்) என்ற தமது 'பயங்கரவாத தடைக்கைங்கரியங்களை' ஆற்றிய பின் அவர்களை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்வார்கள். அங்கே ஏற்கெனவே பணம் கறக்கப்பட்டவர்களை அப்பாவிகள் என்றும், ஏனையோர் மேலதிக விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியவர்கள் என்றும் நீதிபதி முன் கூறுவார்கள். குறைந்த பட்சம் 14 நாள் தடுப்புக்காவல் வழங்கப்படும். இம்முறை இக்கைதிகள் ஏதாவது சிறைக்குள் அடைக்கப்படுவார்கள். பொலிசாரின் பேரம் தொடரும். பணம் வழங்கப்பட்டால் அடுத்த நீதிமன்ற நாளில் அவர்கள் 'அப்பாவிகளாகி' விடுவார்கள். அல்லது தொடர்ந்து இன்னொரு 14 நாள் அல்லது அது 3 மாதமாகவும் இருக்கலாம்!

நல்லவேளை, இஷானி ஒரு சிங்களவராகவும், செல்வாக்கு மிக்கவராகவும் இருந்தார். பிணை வழங்கப்பட்டுவிட்டது.

இலங்கை அரசாங்கம் தொடர்பு சாதனவியலாளர்களை எப்படி நடாத்துகிறது என்பதற்கு மட்டும் இவரது கைது உதாரணமல்ல; பயங்கரவாத தடைச்சட்டம் எவ்வளவு கீழ்த்தரமான முறையில் நறைமுறைப்படுத்தப்படுகிறது என்பதற்கும் இது ஒரு நல்ல உதாரணமாகும்.

இவரது கைதும், இவர் விசாரிக்கப்பட்ட முறையையும் எதிர்த்து அரசு சாராத எல்லாத் தொடர்பு சாதனவியலாளர்களும் குரல் எழுப்பியுள்ளார்கள். இவரது கைது ஒரு அத்துமீறிய, இலங்கை அரசியலமைப்புக்கு முரணான ஒரு நடவடிக்கையாகும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்புசாதனவியலாளர்களை மிரட்டி ஒடுக்குவது, செய்திகளுக்கு தணிக்கை கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் 'தவறாக வழி நடாத்துகிறது' என்ற காரணத்தைக்காட்டி நியாயப்படுத்தி வருகிறது. ஆனால், இலங்கை அரசாங்கத்தில் தகவல் தொடர்பு நிலையம் இந்நாட்டு மக்களுக்கு அளித்த 'பொய்த் தகவல்கள்', பிழையான வழி நடத்தல்கள்' என்பவற்றுக்காக இதுவரை எந்தக் குரலும் எழுப்பப்பட்டதில்லை. அதற்காக எத்தகைய 'விசாரணை'களும் நடந்ததில்லை.

உண்மையில் தவறான தகவலை அல்லது பொய்யான தகவலை வெளியிட்ட காரணத்திற்காக ஒரு செய்தி நிறுவனம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் விசாரிக்கப்பட வேண்டுமானால் முதலில் விசாரிக்கப்பட வேண்டியவை இலங்கை அரசாங்கத்தின் தகவல் தொடர்பு நிலையமும் லங்கா புவத்தும்தான்; கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் போடப்படவேண்டியவர்கள் பட்டியலில் பாதுகாப்பு அமைச்சர் முதல் இராணுவ பேச்சாளர் வரை ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது.

ஆனால் அதிகாரம் கையிலிருக்கும் வரை நீதித்துறை அவர்களுக்கு கைப்பொம்மையாக மட்டுமே இயங்க முடியும் என்பது இந்த நாட்டு மக்களின் தலைவிதியாக உள்ளது.

இஷானி விக்கிரமசிங்கவையும் இந்தத் தலைவிதி விட்டு வைக்கவில்லை.

ஒரு வேளை ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் அவரது தலைவிதி மாறலாம். ஆயினும் அப்போதும் இன்னொருவருக்கு இந்த தலைவிதி இருக்கத்தான் போகிறது!

எப்படியோ தொடர்புசாதனவியலாளர்களை ஒடுக்கும் பொ.ஐ.மு.வின் 'தேசியக்கொள்கை'க்கு எதிராக வன்மையான கண்டனத்தை எழுப்புவது இந்தத் தலைவிதியின் தாக்கத்திலிருந்து கொஞ்சமாவது விடுவித்து மூச்சுவிட்டுக்கொள்ள

→ 8

## திம்பிரிகஸ்யாய: ஒரு மழைநாள் மாலை

தூறி,
பெருமழை தூறி ஓயும் மெல்லென,
ஓய
வெள்ளி முலாம் கொட்டி
வழிந்தேயோடிப் பரவிய
தார் வீதி
கொட்டாவி விட்டே சோம்பல் முறித்தெழும்.

ஆகா - ஆகா
இன்று ஒன்றல்ல நிலவு - ஒன்றல்ல,
பத்துப் பதினைந்து
நீர்தேங்கிய குழிகள் தோறும் நிலவு
நிலவு நிலவு நிலவு.

தவிர,
'சில்' லென்றிரையச் சில்லூறோ,
மோகித்தே,
'மேர்க்' 'மோக்' கென்றே சோடியைக் கலவிக்காயழைக்கிற
மோக்கான் தவளையோ அற்ற
நகர வெளியில் -
ஈடுபாடு ஏதுமின்றி,
பசையற்ற மழையில்
ஒட்டாது மனமும் கழன்று,
கழன்றே வீழ
பெய்தே ஓய்ந்திற்றுப் பெருமழையும்
பெய்தே ஓய்ந்திற்று .

மண்வெட்டியும் கையுமென,
மடிச்சுக்கட்டிய சாறனொடு
தெருவில் யாரும் இறங்கிடவோ,
வசை பாடிச்
சண்டையிட்டே
அண்டை அயலவனொடு,
வீரங்காட்ட
கோதாவில் யாருங் கு திக்காத
சுவாரஸ்யமேதுமற்ற மழை.

ஊரிலென்றால்....
தெருவுக்கு நூறு சண்டை,
வாய் திறந்தால் வசை,
பத்துச்சொல்லுக்குப் பதினொரு தூஷணம்...
புதினம்.

துவங்குது,
மீளவுந் துளித்துளியாய்த் துவங்குது -
காற்றே,
பேய்க்காற்றே
என் வீட்டு வராந்தாவின்
கூரைத் தகட்டிலொன்றைக்
கொணராயோ! காற்றே,

கொடு
மழையின் கையில் கொடு
தட்டியொரு பாட்டுப்பாட
தட்டித் தட்டி.
நான் தூங்க வேண்டுமினி.



1996/12/27 இரவு 11 மணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறுதிப்பகுதி –



பெண் புலிகளும் பெண் விடுதலைப் பிரச்சினைகளும்–2

# ராதிகா குமாரசுவாமி

தமிழில்: எம்.கே.எம்.ஷகீப்

தமிழ்ச் சமூகத்தை நாம் எடுத்துக் கொண்டால் அது, புலிகளது புதிய அணுகுமுறைகளால் மாற்றம் கொண்டுள்ளமையைக் காணலாம். பெண்கள் போரிடும் ஒரு சக்தியாக மாறினர். பெண்களுக்கென தமிழ்ச் சமூகத்திலிருந்த குறியீட்டுப் பிரதிநிதித்துவம் இதன் மூலம் மாற்றம் கண்டது. பொதுவாக இந்து சமூகத்திலும், குறிப்பாக தமிழ் இந்து சமூகத்திலும் பல குழந்தைகள் பெற்று, வசதியுடைய மங்களகரமான பெண்ணே சிறந்த பெண்ணாகக் கணிக்கப்பட்டாள். இதுவே மானிடவியலாளர்களின் காலாகாலமான கணிப்பாகவும் இருந்தது. திருமணம் முடிந்த பெண்களது இந்த நிலை வெறுமனே பேசப்படுவதற்கான ஒரு 'நல்ல' கோட்பாடாக மட்டுமே இருந்தது. திருமணமாகாதவர்கள், விதவைகள் எல்லோரும் அமங்களமானவர்களாக, கட்டுப்பாடற்ற 'சக்தி'யாகக் கருதப்பட்டார்கள் என **கென்னத் டேவிட், சுசான் வேட்லி** போன்றோர் குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாணத்தின் அமைதிக் காலங்களில் திருமணமான வளம்மிகு, மங்களகரமான பெண்களே பிறப்பிலிருந்து திருமணம், இறப்புவரையான சடங்குகளின் முக்கியஸ்தர்களாகக் கருதப்பட்டார்கள். மறுபுறம் குடும்பத்தின் சந்தோஷமின்மை, கஷ்டநிலைகள் போன்றவற்றுக்காகப் பெண்ணின் சக்தியே தூற்றப்பட்டது. தீய சக்தியை விரட்டியடிப்பதற்கான போதிய சக்தி அவளிடம் இல்லாமல் போனதாகக் கருதப்பட்டது. இவ்வாறான திருமணம் முடித்த பெண்கள் பற்றிய 'ஒரு அதீத விருப்பு நிலை' இளம்பெண்களது உணர்வு, கோட்பாட்டுத்தளங்களில் முக்கிய் பதிவுகளை ஏற்படுத்தியது.

மோசமான முறையிலோ அல்லது மோசமான மாற்றங்களையோ புலிகள் அனைத்து விடயங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பெண் போராளிகள் பற்றிய புலிகளது கட்டுரைகளை, கண்ணோட்டங்களை ஆய்ந்த சில தனிநபர்கள் குறிப்பான சில விடயங்களைக் கூறுகிறார்கள். அதாவது, புலிகளிடம் இரண்டு வகையான பெண்களே சிறப்புரிமை பெறுகிறார்கள். ஒன்று: போராளித்தாய், மற்றது ஆயுதமேந்திய கன்னி. இந்த இரண்டு இலட்சிய மாதிரிகளும் தமிழ்சமூகத்தின் மரபார்ந்த (பிள்ளைகள், நல்வாழ்வுடன் கூடிய) பெண்மைத்தன்மையுடன் இயைந்ததாக இல்லை. மாலதி டி அல்விஸ் போன்ற ஆய்வாளர்களின் படி தீவிரத்தன்மைமிகு போராளித்தாய்மார்கள் என்பது தேசியவாத நிலைப்பாட்டில் அல்லது சிந்தனையில் ஒரு பொதுவான மாதிரி. தேசியவாதங்களுக்கிடையில் முரண்பாடு எழுகையில் இது இன்னும் முக்கியத்துவமாகிறது. போராளித் தாய்மார்கள் என்ற விம்பம் சங்ககால போர்க் கவிதைகளில் கூட பொதுவிம்பமாக இருந்திருக்கிறது என வேறு பல எழுத்தாளர்களும் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். தங்கள் புதல்வர்களின் வீரமரணச் செய்திகளைக் கேட்டு தாய்மார்கள் புளகாங்கிதம் அடைவதாக இக் கவிதைகள் பேசுகின்றன. புலிகளின் வீரத்தியாகி மில்லர் பற்றிய BBC தயாரிப்பொன்றிலும் இது போன்ற நிகழ்வு வருகிறது. அவரின் தாயார், தன்மகனின் வீரச்சாவுக்காய் சந்தோஷப்பட்டு வீர வார்த்தைகளை உதிர்க்கிறார். இது சங்ககாலக் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கத்தின் தொடர்ச்சியாகவேயுள்ளது. டி. சிவராம் தனது கட்டுரைகளின் பல இடங்களில் புலிகளின் தற்போதைய கருத்தியல் சங்ககால இலக்கியங்களின் செல்வாக்கிற்குட்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார். எனினும் தீவிரத்தன்மைமிகு போராளித் தாய்மார்களைப் பார்க்கையில் அவர்கள் நேரடிச் செல்வாக்கிற்குட்பட்டிருப்பதை அவர்கள் பாவிக்கின்ற வார்த்தைகளிலிருந்து குறிப்பாக அறியமுடியுமாகவுள்ளது.

''ஆயுதமேந்திய கன்னி'' நிலைப்பாடு தமிழ் இலக்கியத்திலோ பண்பாட்டிலோ இல்லாத ஒன்று. கன்னிகள் எல்லோரும் தீங்கு தருகிற அனைத்துச் ''சாத்தான்'' களிலிருந்தும் தூரமாய், பாதுகாப்பாய் வீட்டிலேயே இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆயுதமேந்திக் கொலை செய்கிற எந்தக் கன்னிப் பெண் மாதிரிகளும் தமிழிலக்கியத்தில் எங்குமேயில்லை.

இது முழுக்க முழுக்க புலிகளின் கண்டுபிடிப்பு. தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்ட திருப்பம். இந்தத் திருப்பத்தை அடேல் பாலசிங்கம் பெண் விடுதலைக்கான ஆரம்பப் படி என்கிறார். ஆனால் இதை நாம் சற்றுக் கருத்திலெடுத்துப்பார்க்க வேண்டும். இவ்வாறான பார்வை மொத்தத் தமிழ்ப் பெண்களிடத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றி நாம் கரிசனைப் படவேண்டும். 'ஆயுதமேந்திய கன்னி' நிலைப்பாடு தமிழ்ப் பெண்களது அடையாளங்கள், உடைகளில் முற்றுமுழுதான மாறுதல்களை ஏற்படுத்தியதென்பதற்கில்லை. நாம் முன்பு சொன்னது போல், தமிழ்க் கலாசாரத்தில் பெண்களது அடையாளம் எப்போது திருமணமான பெண்களுடனேயே தொடர்புபடுத்தப்பட்டது. பகட்டான சேலைகள், ஆடம்பர நகைகள், கூந்தல் நிறையப் பூக்கள், வெள்ளிக் கொலுசுகள், ஜிமிக்கிகள், நெற்றியில் செம்பொட்டு எனத்தான் திருமணமான தமிழ்ப்பெண் இருப்பாள். இப்படித்தான் தமிழ்ப் பண்பாட்டுப் பெண்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். இன்று நாம் பேசுகின்ற போராளிப் பெண்களைப் பார்ப்போம். அலங்காரமோ, நகைநட்டோ இல்லாது கழுத்தில் 'சயனைட்' குப்பியும், ஆண்களைப் போல் வெட்டப்பட்ட தலைக்கேசத்துடனும் அவர்கள் இருக்கின்றனர். இந்தப் பெண் 'மாதிரிகள்' பற்றிக் கருத்துத் தெரிவிப்போர் சில விடயங்களை குறித்துக்காட்டுகினறனர். அதாவது இது ஆண் பெண் ஒருமை நிலைக்கு இட்டுச் செல்கிறது. இங்கு இலட்சியமும், வழிமுறைகளும் தான் முக்கியம். இலட்சியம்தான் அடையாளம். ஆண், பெண் என்றதல்ல என்பதே இந்தப் போக்கு. ஆனால் இந்த ''பாலற்ற நிலை (Androgyny) ஆண் நோக்கிலேயே உள்ளது. ஆண்மை, பெண்மையை முற்றாக துடைத்தழித்துச் செல்கிறது. இதுதானா புலிகள் இயக்கத்தின் பெண்களுக்கான சிறப்புரிமை? இவர்களா சிறப்புத்துவம் பெற்ற பெண்கள்? இதுதான் விடுதலையா?

இது சில வழிகளில் விடை சொல்லக் கஷ்டமான கேள்விதான். பகட்டான அணிகலன்கள், நகைநட்டுக்கள், தலை நிறைந்த பூக்களிலிருந்து கிடைககும விடுதலையை அனேக இளம்பெண்கள் ஒரு தப்பித்தலாகவே கருதுகிறார்கள். அதாவது, முன்னைய தமிழ் சமூகத்தின் சமூக வாழ்வியலிலிருந்த 'விறைப்பான கட்டுப்பாடுகளிலிருந்து தப்பிச் செல்வதாகவே இதை அவர்கள் கருதுகிறார்கள். தற்போது பெண் (புலி)களுக்கு ஏதோவொரு காரணத்திற்காய் ''இயக்கச்''சுதந்திரமும், சமநிலைப்பட்ட சமூக, அரசியல் ஒப்படைப்பும் காணப்படுகிறது. தனது 'பெண்' விம்பத்தில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை அவள் காண்கிறாள். வீட்டில் வைத்து பூட்டிப் பாதுகாக்கப்பட்ட காலம் இப்போது மலையேறுகிறது. அவள் தன் எதிர்ப்பால் சகாக்களுடன், கையில் ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டும், கட்டளையிட்டுக் கொண்டும் சுதந்திரமாய் நடமாடுகிறாள், இவ்வாறிருந்தும் நாம் புலிகளிடத்தில் குறிப்பான ஒன்றை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது இலட்சியப் பெண் என்பவள் எப்போதும் கன்னியாகவே இருப்பாள். இதில் அவர்கள் அதிக கரிசனையுடன் இருக்கிறார்கள். பாலியலை தளர்வூட்டுகிற கெட்ட சக்தியாகவே அவர்கள் பார்க்கிறார்கள்.

சில விடயங்களையிட்டு எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக, முன்னைய தமிழ்ச் சமூகத்தின் இலட்சியப் பெண் மாதிரிகளுக்கு மாற்றிலும் எதிர்மறையாக இன்றைய பெண் மாதிரி கொள்ளப்படுகிறாள். அந்தப் பெண் எப்படி வாழ்வை அனுபவித்தாளோ அதற்கு மாற்றாகவே இந்தப் பெண் தன் வாழ்வைக் கழிக்கிறாள். வளமான வாழ்வு, பாலியலின்பம், கலைகளின் மீதான காதல் - இதெல்லாம் கல்யாணமான முன்னைய தமிழ்ச் சமூகத்துப் பெண்ணின் முக்கிய விடயங்களாய் இருந்தன. ஆனால், இந்த கலைத்துவ அம்சங்கள் புலிகளின் இலட்சியப் பெண் மாதிரியில் இல்லாத விடயங்களாகவுள்ளன. தன்னழிவும், சிக்கனமும், பால் கடந்த தன்மையுமே இலட்சிய மாதிரிகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. வாழ்வன்றி, மரணமே கொண்டாடப்படுகிறது, ஒரு பெண்ணின் மாபெரும் வீரச்செயல் அவள் தியாகியாய் மரணிப்பதே எனப்படுகிறது. தேசியவாத இயக்கங்களில் வீரச்சாவு கொண்டாட்டத்திற்குரிய ஒன்றுதான். எனினும் புலிகளிடம், ஓர் இயக்கப் பெண்ணின் வாழ்வைத் தீர்மானிக்கிற மிக முக்கிய காரணியாக இந்த வீரச்சாவே கொள்ளப்படுகிறது. முன்னைய 'சக்தி' எனும் பெண்ணிலையிலிருந்து, இன்றைய 'மரணப் பெண்' நிலை எவ்வாறோ மாறுதலானதுதான். வாழ்வை நீட்டிக் காக்கிற ஒரு 'சக்தி'யாகவே அன்றைய பெண் செயற்பட்டாள். ஆனால் புலிகளின் கருத்தியலில் இது இல்லாத ஒன்றாகி, வாழ்வை விரைவில் முடித்துப் போகிறவளே 'சக்தி'யாக உள்ளாள். 'வாழ்வைப் பேணிக் காக்கிறவர்களாக' பெண்களைக் காண்கிற போக்கு உலகிலுள்ள பெண்கள் இயக்கங்களின் போக்காக உள்ளது. இதுவே ஒருமைப்பாட்டுக்கான காரணியாகவும் கொள்ளப்படுகிறது. இந்தக் காரணி புலிகளின் கருத்தியலில் இல்லை என்பது அவதானத்துக்குரியவிடயம்.

இரண்டாவதாக, புலிகளின் ஆண் - பெண் ஒருமை நிலைத்தன்மையை குறிப்பிடலாம். அதாவது ஆணையும், பெண்ணையும் ஒரே விதமாக செயற்றுவித்தல். இது பெண்மைக்கான சாவுமணியென்றே கூறலாம். பெண்மையின் சமூகக் கட்டமைப்பு பல பெண்ணியவாதிகளால் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளதுதான். எனினும் அவர்கள் கூட பல இடங்களில் அதன் சாதகங்களை அனுபவித்திருக்கிறார்கள். இரக்க சுபாவம், சகிப்புத்தன்மை, சமூக உறவு பேணுதல், சாந்தம் இது போன்ற குணங்களையெல்லாம் மனிதர்களுடன் இணைந்து செயற்படுகையில் அவர்கள் பாவித்திருக்கிறார்கள். இந்தப் பண்புகள், குணங்கள் எல்லாம் நீண்ட நெடுங்காலமாக பெண்மைப்பண்புகளாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டு வந்தவை. இவை எல்லா நிலைமைகளிலும் மானுட ஆளுமைகளாக திகழவேண்டிய முக்கிய பண்புகள். இந்தக் கண்ணோட்டத்தில் புலிகளை நோக்கினால் அங்கே இந்தப் பண்புகள் அழித்துச் செல்லப்படுகின்ற நிலையிலேயே உள்ளது. இவ்வாறு பெண்மைக் குணாம்சங்களை முற்றாக இல்லாதாக்குகிற நிலை பெண்ணின் வெற்றியாக இருக்காது. மாறாக, ஆதிக்கம், அதிகாரம், உயர்நிலை எண்ணம் கொண்ட 'ஆண் உலகத்தின்' வெற்றியாகத்தான் இருக்கும். பெண்ணிய இயக்கங்கள் எப்போதும், இந்துக்களின்

→14

7→

## ரீ.என்.எல்...

அவசியமான ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை 'வாய்ப்பாக' பயன்படுத்தும்பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஒரு போதும் நடக்கப் போவதில்லை. ஏனென்றால், அவர்களுக்கு உத்தரவிடுவதே அரசாங்கமாக இருக்கிறது'

சட்டத்தை இல்லாதொழிப்பது மட்டுமே இதற்கு உரிய பயனுள்ள ஒரே வழியாகும்.

குரலெழுப்பும்பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், ஜனநாயகவாதிகள் இதுபற்றி எப்போது சிந்திக்கப் போகிறார்கள்? ○

3→

## வடக்கு...

போராட்டத்தை நடாத்த முடியும்!)

இதேபோன்று கீழான ''தந்திரம் வாய்ந்த விடுதலை நியாங்களை'' இடைக்கிடையே அவர் முன்வைத்துள்ளார். இதற்குப் பிரசித்தமான உதாரணமொன்றை முன்வைக்கிறேன். தமிழ் பேசும் மக்களின் சுய ஆட்சி பற்றிப் பேசும் அவர் வடக்கு வாழ் முஸ்லிம்களை விரட்டினார். அவ்வாறெனின் மொழியினை அடிப்படையாகக்கொண்ட அவரது விடுதலைப் போராட்டத்தின் அர்த்தம்தான் என்ன? தேசியவாதத்தையும் இனவாதத்தையும் கொண்டிருக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் போன்று பிரபாகரனும் உயிர்களுடன் விளையாடுகின்றார். வன்முறையை தமது சுயநலன்களுக்காக அரசியலில் பயன்படுத்திக் கொள்ளும் அரசியல் முறையானது ஜீவனில்லாத உடலைப்போன்றது.

அரசியல் வெளிப்பாடு காணப்படாத கெரில்லா அமைப்பினது வெற்றியின் பலன் என்ன? புலிகளை நாகரீகமான கெரில்லாப் பிரிவு என்றோ அல்லது வனாந்தரத்து கெரில்லா பிரிவுஎன்றோ கூற முடிந்த போதும், இவ் அனைத்தும் எதிர்கால அரசியல் தூர நோக்கற்று மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களிடம் அரசியல் தூர நோக்கின்மை வெளிப்படுவதற்கான உதாரணமாக இதனைக் குறிப்பிடலாம்.

அன்ரன் பாலசிங்கத்திடம் பத்திரிகையாளர்கள் இவ்வாறு வினவினர். ''... நீங்கள் எல்லைக்கிராமத்தில் இருக்கும் அப்பாவி சிங்கள மக்களை கொலை செய்வதன் நோக்கம் என்ன?''

''அவ்வாறான முடிவுகள் சம்பவங்களின் அடிப்படையைக் கொண்டவை'' என பதில் வந்தது.

சம்பவங்களின் அடிப்படையை மாத்திரம் கொண்ட அரசியல் இயக்கம் ஒன்று மக்களுக்கு எவ்வாறான சேவையை வழங்கப்போகின்றது? நான் இந்த விமர்சனத்தை புலிகள் முன்வைப்பது வெளிப்பாங்கான அரசியலைக் கருத்திற் கொண்டல்ல. நிகழ்காலத்தில் இலங்கையில் ''கௌரவமான சமதானத்தை'' ஏற்படுத்த வேண்டுமாயின் புலிகள் இயக்கத்தின் பங்களிப்பு அத்தியாவசியமானதாகும். மேற்கூறிய நிகழ்வின் கீழ் முக்கியமான பங்காளரான புலிகள் இயக்கம் ''தமிழ் பேசும் மக்களின் விடுதலையை'' பிறந்த புதிய ஆண்டிலாவது பெற்றுக் கொடுக்குமா? என்பதை நாம் கவனமாக கண்காணிக்கின்றோம். பெரும்பான்மை சிங்கள மக்களின் கருத்து எவ்வாறாயினும் தெற்கின் சிங்கள முற்போக்குவாதிகளின் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும் என்றும் நாம் நம்புகின்றோம்.

*நிர்குண* ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ரத்னா

# முளையிலே மொட்டுக்கள் கிள்ளியெறியப்படுகின்றன:

''ஆண்டுக்கு சுமார் 5 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றுத் தரும் தொழிலாக இத் தொழில் உள்ளது. தாய்லாந்தில் இத்தொழிலாளர்களின் எண்ணிக்கை எட்டு லட்சம், இலங்கையில் 20,000 - 30,000 வரையில் உள்ளனர். நேபாளத்திலிருந்து இத்தொழிலுக் காக இந்தியாவிற்கு வருடத்திற்கு 12,000 பேர் வரையிலும் அழைத்து வரப்படுகின்றனர்.''

மேற்குறிப்பிட்ட விளக்கம் எத்தொழில் பற்றியது? இப் புள்ளி விபரம் எதைச் சுட்டுகின்றது? என்பது தொடர்பாக நீங்கள் கேள்வி எழுப்பக் கூடும். இது பெருமையுடன் சொல்லிக் கொள்ளக்கூடியவாறான ஒரு மகத்தான தொழில் அல்ல. மாறாக இது சிறுவர் பாலியல் வியாபாரம் எனும் 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியின் நவீன தொழில் வாய்ப்பான சிறுவர் விற்பனையாகும்.

சிறுவர் பாலியல் வியாபாரத்தின் மத்திய நிலையம் தாய்லாந்து. மேற்கு ஆபிரிக்கா, தென்அமெரிக்க நாடுகளுக்கு சிறுவர்களை வழங்கும் மத்திய நிலையம் ஆகும். பிரேசில், டொமினியன் குடியரசு ஆகியன சிறுவர்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கொள்ளை இலாபம் பெறுகின்றன. குறைந்த விலையில் சிறுவர்களை பாலியல் இன்பத்திற்காக பெற்றுக்கொள்ளக் கூடிய நாடுகளாக தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தான் பிரபல்யம் பெற்று வருகின்றன. தாய்லாந்துக்கு அடுத்து சிறுவர் விபச்சாரத்தில் இலங்கை இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

நெதர்லாந்தின் அம்ஸ்ரர்டாம் (Amsturdam) நகரத்தில் இருந்து வெளியாகும் ''ஸ்பாட்டகஸ்'' (Spatacus) எனும் உல்லாசப்பயண சிறு சஞ்சிகை இலங்கை பற்றி குறிப்பிடும் பொழுது ''சிறுவர் விபச்சாரத் தின் சுவர்க்கம்'' எனக் குறிப்பிடு கின்றது. ''லிட்டில் ஜோன்'' (Little John) எனும் சிறு சஞ்சிகை ''விபச்சாரிகள் எனின் தாய்லாந்து, சிறுவர் விபச்சாரம் எனின் இலங்கை'' என்று குறிப்பிட்டுள்ளது.

உல்லாசப்பயணத்துறைக்கு பெயர் பெற்ற ஒரு தீவாகவும், சுவர்க்கம் என்றும் வியக்கப்பட்ட இலங்கைத்தீவு இன்று சிறுவர் விபச்சாரத்தின் களமாகி விட்டது துரதிருஷ்டம் என்றே கூறவேண்டும். சிறுவர் விபச்சாரத்தை எதிர்க்கும் முதல் சர்வதேச மாநாடு ஒன்று ஸ்வீடனில் நடைபெற்ற பொழுது இலங்கை சார்பாகக் கலந்து கொண்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உறுப்பினருக்கு அங்கு இலங்கைச் சிறுவர்களின் பாலியல் உறவுகள், நிர்வாண நிலைகள் என்பன அடங்கிய 300 வீடியோ திரைப்படங்களைப் பார்க்க நேர்ந்திருக்கிறது. இது மிகவும் கவலைக்குரிய ஓர் விடயமாகும். இது இலங்கைச் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்தின் எதிரொலி என்று கூறின் தவறில்லை. மேலும் இவ்வீடியோ திரைப்படங்களைக் கைப்பற்றிய இன்டர்போல் பொலிசார் ஸ்வீடன், பெல்ஜியம் போன்ற நாடுகளில் இயங்கிவரும் துஷ்பிரயோகக் குழுவுக்கு இலங்கையுடன் நேரடித் தொடர்பு உண்டு எனக் குறிப்பிட்டிருந்தது மற்றுமொரு அதிர்ச்சி தரும் தகவலாகும். (பெல்ஜியம் எனும் போது 95 - 96 காலப்பகுதியில் காமுகன் ஒருவனால் சிறுமிகள் பாலியல் வதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.)


குறிப்பாக பெந்தோட்டை, காலி போன்ற கடற்கரையோரப் பிரதேசங்களில் உல்லாசப் பயணிகள் வருகையுடன் பல தசாப்தங்களாக விபச்சாரம், சிறுவர் விபச்சாரம் என்பன மறைமுகமாக வளர்ச்சியடைந்தே வந்துள்ளன.

நீச்சலுடையுடன் கடற்கரையோரம் கைகோர்த்துச் செல்லும் வெள்ளையினருக்குப் பின்னால், நம் சிறுவர்கள் துவாய்களையும் செருப்புகளையும் தூக்கிக் கொண்டு செல்வதையும், முத்துமாலைகள், சிற்பிகள், சிலைகள் இவற்றை விற்பனை செய்வதற்காக அவர்களுடன் தர்க்கமிடும் சிறுவர்களையும் நாம் அனேக கடற்கரையோரங்களில் காணலாம். இவ்வாறு மறைமுக வளர்ச்சி கண்டிருந்த இச்சிறுவர் விபச்சாரம் எனும் அரக்கன் பள்ளிகளிலும், சிறுவர் விடுதிகளிலும், சிறுவர் ஆதரவு நிலையங்களிலும் கன்னம் வைப்பதற்கான காரணம், உல்லாசப் பயணக்கைத்தொழில் வீழ்ச்சியடைய உதவிய இலங்கையின் அரசியல் சூழ்நிலையாகும். மற்றையது சட்டத்தில் இருக்கும் ஓட்டைகள்.

அண்மையில் நிகழ்ந்தேறிய பல சம்பவங்கள் இவ் அவல நிலையை பிரச்சாரப்படுத்தி மக்களையும் நலன் புரிநிலையங்களையும் விழிப்புறச் விளக்கப்பட்டு அதற்கு இலகுவான வழி வெளிநாட்டினருடன் விபச்சாரம் புரிவதும், நிர்வாணமாக திரைப்படத்தில் தோன்றுவதுமே எனக்கூறப்பட்டு அதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது. இக்கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கு பெருமளவு தரகுப்பணம் கிடைக்கும். இது அதிபர் ஆசிரியர்கள் அனைவரையும் விலைக்கு வாங்கும் சாத்தியத்தையும் ஏற்படுத்தி விடுகின்றது. அதே நேரம் இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் கிடைக்க வழி ஏற்படுகிறது.

1. போதைப்பொருள் விற்பனை.
2. சிறுவர் விபச்சாரம்.

காலி மகிந்த வித்தியாலயம் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். மற்றும் முதன் முதல் (?) பாடசாலை ஒன்றில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெற்று பகிரங்கப் படுத்தப்பட்டதும் இதுவே முதல்முறை. இப்பாடசாலையின் சங்கீத ஆசிரியர்





செய்துள்ளன.

குறிப்பாக பாடசாலைகளில் 14 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளை பாலியல் வக்கிரங்களுக்குப் பயன் படுத்தும் நடவடிக்கைகள் சர்வதேச ஆதரவுடன் கூடிய உள்நாட்டு அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரப் படுகின்றது. இதற்கு குறிப்பிட்ட அப்பாடசாலையைச் சேர்ந்த ஓரிரு ஆசிரியர்கள் உடந்தையாக உள்ளனர். இந்நடவடிக்கைகள் படிப்படியாக திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முதல் படியாக சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமை யாக்கப்படுகின்றனர். அத்துடன் உணர்ச்சிகளை தூண்டக்கூடிய வகையிலான படங்கள், கட்டுரைகள், நீலத்திரைப் படங்கள் என்பனவும் சிறுவர்களிடையே விநியோகிக்கப் படுகின்றது. பின்னர் போதைப் பொருளுக்கு அடிமையான சிறுவர்களுக்கு தமது போதைப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்ய பணம் தேவைப்படும் என

மேற்போந்த நடவடிக்கைக்கு உதவிபுரிய போசன சாலை ஊழியர் சிறுவர்களுக்கு போதைவஸ்தை விநியோகித்துள்ளார். இச்சம்பவம் வெளியானதும் தற்செயல் நிகழ்வே வகுப்பில் பாடம் படித்துக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் இயற்கைக்கடனைக் கழிக்க ஆசிரியரிடம் அனுமதி கோரிவிட்டு மலசல கூடத்துக்குச் சென்றுள்ளனர். நேரம் அதிகம் கடந்தும் மாணவர் இருவரும் வராததால் மலசலகூடத்துக்குச் சென்ற ஆசிரியர் அங்கு அசாதாரண முறையில் மாணவர்கள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு மிரட்டியுள்ளார். அதன்பின்னரே அப்பாவிச் சிறுவர்கள் தாம் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது தொடக்கம் அனைத்தையும் கூறியுள்ளனர். சமீப காலத்தில் மக்களின் கவனத்தை ஈர்த்த இச்சம்பவத்தின் அபாயத் தன்மை தொடர்பாக நம் நாட்டு சட்ட நிறுவனங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்தன என்பது கேள்வியாகும்.

அடுத்து பௌத்த நிலையம் ஒன்றில் இடம்பெற்ற சிறுவர் விபச்சாரம் மத நிலையங்களிலும் கூட சிறுவர்களுக்குப் பாதுகாப்பின்மையை நிரூபணப்படுத்தியுள்ளது. அகில இலங்கை பௌத்த சம்மேளனத்திற்குச் சொந்தமானதும், பேருவளை ஹோட்டல் சங்கத்தின் அனுசரணையுடனும், பேருவளையில் நடத்தப் படுகின்ற விஜித சிறுமிகள் நிலையத்தைச் சேர்ந்த 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளை விபச்சாரத்திற்கும், நிர்வாண புகைப்படங்களுக்கும் பயன்படுத்திய சம்பவம் மிக அண்மையில் வெளியாகியது. அனாதைகளாகவும், கவனிப்பாரற்றும் இருந்த சிறுமிகளுக்கு ஆதரவு அளிக்கும் இந்நிலையம் பௌத்த சம்மேளனத்திற்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையத்தின் முன்னாள் பொறுப்பாளராகவிருந்த ராணி திலகரத்ன என்பவர் தற்கொலை செய்து கொண்டதன் மூலமே இந்நிகழ்வுகள் வெளித் தெரிய வந்தன. முன்னாள் பிரதான உப பொறுப்பாளராகவிருந்த சோமலதா ஹேவாரத்ன முன்னாள் பொறுப்பாளராகவிருந்த சாலட் என்பவரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

''...சாலட் என்னையும் இரண்டு மூன்று சிறுமிகளையும் அழைத்துக்கொண்டு ஹோட்டலுக்குச் செல் என்பார். எங்களை அழைத்துச்செல்ல சிவப்பு நிற வான் ஒன்று வரும். வானில் ஏற்றப்படுவதற்கு முன்னர் சாலட்டின் ஆணையின்படி அச்சிறுமிகளின் கண்கள் கட்டப்பட்டு ''வார்ணன் ரீவ்'' ஹோட்டலின் 120ம் இலக்க அறைக்குள் எம்மை அழைத்துச் செல்வர். என்னுடன் வந்த மூன்று சிறுமிகளும் 13 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள். அங்கு சென்ற எங்களை வேறு வேறாகப் பிரித்து அழைத்து சென்றனர். அங்கு வீடியோ கெமராவை வைத்துக்கொண்டிருந்த ஒருவன் என்னை பிறிதொருவனுடன் உறவு கொள்ளச்செய்து படம் பிடிப்பான். என்னுடன் வந்த சிறுமிகளுக்கும் அதே நிலையே''

இக்குறிப்பிட்ட ஹோட்டல்களுக்கும், இச்சம்பவங்களுக்கும் பொறுப்பானவர் ஓர் வெளிநாட்டவராவார். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்ற போதும் சட்டத்தின் ஓட்டைகள் இவர்களை விடுவித்து விடாது என்பதற்கு உத்தரவாதமில்லை.

இதேபோன்று காலி மகிந்த வித்தியாலய சம்பவத்திற்கும் வெளிநாட்டவர் ஒருவரின் ஆசி பெற்ற உள்நாட்டு செல்வந்தர் ஒருவரே பொறுப்பாக இருந்துள்ளார் எனத் தெரியவருகின்றது. குறிப்பாக இச்சிறுவர் துஷ்பிரயோகக் குழுவினருக்கு அதிகாரம் வாய்ந்தோர், உயர் வர்க்கத்தினர், பொலிசார் என உயர் மட்டங்களின் ஆசி அதிகளவில் இருப்பதனாலேயே இவ்விடயம் பாராமுகமாக்கப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு நீர்கொழும்பு பிரதேசச் சிறுவர் விபச்சாரத்துக்கு உடந்தையாக இருந்த விக்டர் பஹுமன் எனும் சுவிஸ் வாசி கைது செய்யப்படுவதை எதிர்த்தமை இவ் உயர் மட்டத்தின் கைங்கரியமே.

காலி மகிந்த வித்தியாலய சம்பவத்திற்கு பின் கைதான சங்கீத ஆசிரியரை பிணையில் விடுவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் விசாரணைக்கென இரு பொலிசார் அனுப்பப்பட்ட போதும் அவர்கள் ஆக்கபூர்வமான விசாரணைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

குறிப்பிட்ட சந்தேக நபரின் வாக்குமூலம் 5 வரிகளை மட்டுமே கொண்டுள்ளது. இச்சம்பவத்தினை அக்கறையுடன் விசாரணைக்குட்படுத்திய பொலிஸ் அதிகாரி திடீரென அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது திடீர் திருப்பம் எனலாம். குறிப்பாக இவ்வாறான சிறுவர் விபச்சாரம் மேற்கொள்ளப்படும் விடுதிகளுக்கு ''உயர் மட்டத்தினரும்'' வருகை தருகின்றனர். அவர்களின் பெயர் விபரங்கள் என்பன விடுதி லெஜர் புத்தகங்களில் பதிவும் செய்யப்பட்டுள்ளது.

திம்பிரிகஸ்யாய, ஹவ்லொக் வீதியில் அமைந்திருக்கும் லும்பினி வித்தியாலயத்திற்கு சமீபமாக அமைந்திருக்கும் Unic Health Centre என்ற அமைப்பின் போர்வையில் நடந்துவரும் விபச்சாரம் குறிப்பிட்ட அப்பாடசாலைக்கு குந்தகம் விளைவிக்கின்றது என பாடசாலை அதிபரினால் கல்வித் திணைக்களம் பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு அறிவித்த பொழுதும் எதுவித எதிர் நடவடிக்கையும் எடுக்காதது பொலிசாரின் பாராமுகத்துக்கு இன்னுமொரு உதாரணமாகும்.

இவ்வாறான கண்துடைப்புகள் பல துஷ்பிரயோகங்களை மூடி மறைக்கவும் உதவுகின்றன. இவ்வாறான பல சம்பவங்களில் ஒரு சில;

0 அனுராதபுரம் கன்னியர் மட ஆசிரியை ஒருவர் மாணவிகளின் அரை நிர்வாண புகைப்படங்களை எடுத்து வியாபாரம் செய்துள்ளார்.

0 காலிரிச்மண்ட் பாடசாலையின் ஆசிரியர் மாணவன் ஒருவனை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதன் காரணமாக மாணவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் ஆசிரியர் விசாரணைக்குட்படுத்தப்படவில்லை.

0 கரந்தெனிய பிரதேசத்தில் ஆசிரியரொருவர் மாணவர்களை நிர்வாணப்படம் எடுத்ததன் காரணமாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறு தண்டனை வழங்கப்பட்டது. எனினும், அவர் இன்னமும் ஆசிரியத்தொழிலேயே இருக்கிறார்.

0 காலி அத்திலி பிரதேசத்தில் சுற்றுலாச் சென்று விட்டு இரவு பாடசாலையில் மாணவிகள் தங்கியிருந்த வேளை அங்கு உட்பிரவேசிக்க முனைந்த இரு ஆசிரியர்களை எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்ட போதும், ஆசிரியர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

0 எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் ஒரு ஆசிரியர் மாணவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதால், பாதிக்கப்பட்டவர் தற்கொலைக்கு முயற்சித்த போதும், ஆசிரியருக்கு எதிராக சட்டரீதியாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1989 நவம்பர் 29ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ''சிறுவர் உரிமை தொடர்பான சட்டத்திற்கு'' ஆதரவாக 187 நாடுகளுடன் இலங்கையும் ஒப்பமிட்டாலும் இன்னும் அவை எழுத்தளவிலேயே உள்ளன. ''சிறுவர்களை சட்ட விரோதமாக பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதை தவிர்க்கவே'' இவ்வுடன்பாடு காணப்பட்டது.

யுத்தம், மந்தபோசனம், கல்விக்குறைமை மற்றும் சுகாதாரப் பாதிப்பு என்பன இலங்கைச் சிறுவர்களை ஆக்கிரமித்துள்ளன. இவ்வரிசையில் சிறுவர் விபச்சாரம் ஓர் தவிர்க்க முடியாத அங்கமாக இணைந்து விட்டது.

பெரும்பாலும் இலங்கையின் வறுமை நிலை இதற்கு ஆதாரமாக உள்ளது. பணத்திற்காக எதையும் செய்யும் நிலையில் பெற்றோர்கள் கூட இந்த இழிந்த தொழிலில் பிள்ளைகளை சுய விருப்பத்துடன் சேர்க்கின்றனர். இன்டர்நெட் உதவியுடன் இலங்கையின் எந்த மூலையில் ஓர் விபச்சாரச்சிறுவன் உள்ளான் என்பதை ஒரு நொடியில் அறிந்து கொள்ளலாம் என்பது மிகவும் கீழ்த்தரமானது.

மொட்டுக்கள் கருணையின்றி கிள்ளி நாசமாக்கப்படுகின்றன. நாளை உலகத்தை ஆளப்போகின்றவர்களுக்கு கல்விச் சாலைகள், பொலிஸ் நிலையங்கள், மத நிறுவனங்கள் ஏன் பெற்றோர்கள் கூட பாதுகாவலர்களாக இல்லை. நம் சந்ததியினருக்கு சுபீட்சமான நாட்டை வழங்குவதை விடுத்து இரத்த வாடை வீசும் நாட்டையும் எய்ட்ஸ் அரக்கனையுமே கையளிக்க தயாராயுள்ளோம்.

சிறுவர் விபச்சாரத்தையும் பாலியல் துஷ்பிரயோகங்களையும் அடக்க வேண்டிய சந்தர்ப்பமிதுவே. ஏனெனில், இவ் அபாயங்கள் நம் வாசல் வரை வந்து விட்டன. ஆகக்குறைந்த பட்சம் சட்டத்தின் ஓட்டைகளை அடைத்து நீதியான நடவடிக்கைகளை இனியாவது சட்ட நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது அனைவரதும் அவசரமான அவசியமான கோரிக்கையாகும். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குழந்தைகளும் உங்களுக்குமிடையே... 2

# குழந்தைகளை அடிக்கலாமா?

மூலம்: டொக்டர் ஜெயிம் ஜீ ஜினோல்ட்
தமிழில்: அருண்

## கட்டுப்பாட்டொழுங்குப் பிரச்சினைகளும், நடவடிக்கைகளும்

பெரும்பாலான கட்டுப்பாட்டொழுங்குப் பிரச்சினைகள் பிள்ளைகளது நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முனைவதிலிருந்து உருவாகின்றன. ''ஓடாதே! உன்னால் ஒரு சாதாரண பையனைப் போல நடக்க முடியாதா?''
''எல்லா இடமும் துள்ளிக் குதிக்க வேண்டாம்'', ''ஒழுங்காக இரு பார்ப்பம்''
''ஏன் ஒற்றைக் காலிலை நிற்கிறாய், உனக்கு இரண்டு கால்கள் இல்லையா?''
''விழுந்து காலை முறிக்கப் போகிறாய்'' போன்ற கட்டுப்பாடுகள் இப் பிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன.

குழந்தைகளது இத்தகைய நடவடிக்கைகள் அளவுக்கு மீறி மட்டுப்படுத்தப்படக் கூடாது. மன மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு குழந்தைகள் ஓடுவது, குதிப்பது, மரமேறுவது போன்றவை அவசியமாகும். தளபாடங்கள் உடைந்து விடாமல் கவனமாக இருப்பது அவசியம்தான். ஆனால் அவை குழந்தைகளின் ஆரோக்கியத்தைவிட முக்கியமானவை அல்ல. குழந்தைகளின் இத்தகைய இயக்கங்களைக் கட்டுப்படுத்துவது அவர்களுடைய மன உணர்வுகள் மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றது. இந்த மன அழுத்தத்தை அவர்கள் மூர்க்கத்தனமாகவும், மோசமான விதத்திலும் வெளிப்படுத்துகின்றார்கள்.

உடல் ரீதியான நடவடிக்கைகள் மூலமாக சக்தியை வெளிப்படுத்துவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்குவது சிறப்பான கட்டுப்பாட்டொழுங்கைப்பேணுவதற்காகப் பெற்றோர்கள் செய்ய வேண்டிய முக்கிய ஒரு விடயமாகும். ஆயினும் இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கவனிக்கப்படுவதில்லை.

குழந்தைகளுக்கான கட்டுப்பாடு குறித்த பெற்றோரது உணர்வு தெளிவானதாகவும், அது தாக்கத்தை ஏற்படுத்தாத வார்த்தைகளால் தெரியப்படுத்துவதாகவும் இருப்பின் குழந்தைகள் இயல்பாகவே அக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்வார்கள். ஆயினும் குழந்தைகள் இச்சட்டத்திட்டங்களை அடிக்கடி மீறவே செய்வார்கள். கேள்வி என்னவென்றால் ஏற்கெனவே சொல்லப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை ஒரு குழந்தை மீறும் போது என்ன செய்ய வேண்டும் என்பதுதான். பெற்றோர் இந்த விடயத்தில் மிகவும் கனிவாக இருக்கவேண்டும் என்றே குழந்தை உளவியல் கல்வி கூறுகின்றது.

பெற்றோர் தாம் விதித்துள்ள கட்டுப்பாடு எவ்வளவு நியாயமானது அல்லது நியாயமற்றது என்பது குறித்த கலந்துரையாடலுக்குப் போகக் கூடாது. அல்லது அந்த விதி தொடர்பாக நீண்ட விளக்கம் அளிக்கவும் தேவையில்லை. ஒரு குழந்தைக்கு அது தனது சகோதரியை/சகோதரனை ஏன் தாக்கக்கூடாது என்று பெரிய விளக்கம் அளிப்பது அவசியமில்லை. மனிதர்கள் அடிப்பதற்குரியவர்கள் அல்லர் என்ற ஒரு வார்த்தையே போதும். அல்லது, ஜன்னல் கண்ணாடியை ஏன் உடைக்கக்கூடாது என்பதற்கு அளிக்கப்படும் எந்த விளக்கங்களையும் விட 'ஜன்னல் கண்ணாடி உடைக்கிற சாமான் இல்லை.' என்ற ஒரு வார்த்தையே போதுமானது.

இத்தகைய ஒரு கட்டுப்பாட்டை ஒரு குழந்தை மீறும் போது அது ஒரு சண்டையையும் தண்டனையையும் எதிர்பார்த்துப் பரபரப்படைகிறது. பெற்றோர் அதன் பரபரப்பை அதிகரிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது. பெற்றோர் இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகம் கதைப்பது அவரது பலவீனத்தையே காட்டும். அவர் இந்த நேரத்தில் தனது உறுதியைக் காட்டவேண்டும். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், குழந்தை தான் அவமானப்படாமலேயே தன்னை சுதாகரித்துக் கொள்வதற்கு ஒரு பெரியவரின் உதவியை எதிர்பார்க்கிறது. கீழுள்ள உதாரணம் ஒரு புரிதலுடன் கூடிய அணுகுமுறையைத் தெளிவுபடுத்துகிறது.

தாய்: (உரத்து) ''உன்னை ஏசாவிட்டால் நீ சரிவரமாட்டாய் போலிருக்கிறது என்ன?'' என்றோ, அல்லது இன்னொரு தடவை ''எறிந்தாயோ உன்ரை கன்னமமின்னும்... நான் என்ன செய்வேன் என்று அப்பதான் விளங்கும்...''



இவ்வாறான மிரட்டலை செய்வதைவிட தாய் தனது உண்மையான கோபத்தை மிகவும் வினைத்திறனுடன் இப்படி வெளிப்படுத்தலாம்.
''உதைப்பார்க்க எனக்கு விசர் வருது''
''உதைப் பார்க்க எனக்கு பத்திக்கொண்டு வருகுது''
''எனக்குக் கெட்ட கோபம் வருகுது''
''இவை எறியிற சாமான்கள் அல்ல... பந்துதான் எறியிற சாமான்...''

கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதற்காக, பெற்றோர் ஒரு சண்டையை உருவாக்குவது கூடாது. ஒருவரின் உறுதியை சவாலுக்கு அழைப்பதாக அது அமைவதைத் தவிர்ப்பது நல்லது.

உர்சலா (விளையாட்டு மைதானத்தில்): ''எனக்கு இங்கே இருக்கவே விருப்பமாய் இருக்கிறது. நான் இப்ப வீட்டை போகமாட்டேன். இன்னும் ஒரு மணி நேரம் இங்கேயே இருக்கப் போகிறேன்.''
தகப்பன்: ''நீ சொன்னால் சரியா? நான் சொல்கிறேன் இப்ப போகவேண்டும்.''

இத்தகைய ஒரு பதில் இரண்டு விளைவுகளைத் தரலாம். ஒன்றில் தகப்பன் தோல்வியடைவார். அல்லது குழந்தை தோல்வியடையும். இரண்டுமே நல்லவையல்ல.

குழந்தை தகப்பனின் அதிகாரத்தை மீறுகிறது என்ற கோணத்தில் இவ்விடயத்தைப் பார்க்காமல், அதன் விருப்பம் என்ன என்ற கோணத்தில் இதனை அணுகுவதே நல்ல அணுகு முறையாகும். உதாரணமாக தகப்பன் இப்படிக் கூறலாம்.
''உனக்கு இங்கு இருப்பது விருப்பமாயிருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. நீ ஒரு மணி என்ன 10 மணித்தியாலமும் இங்கே இருக்கலாம். ஆனால் இண்டைக்கு நேரம் போயிட்டுது. இப்ப நாங்கள் போகவேணும்''

இதற்குப் பிறகும் குழந்தை பிடிவாதமாக இருந்தால், குழந்தையை கையைப்பிடித்து தூக்கிச் செல்லலாம். சின்னக் குழந்தைகளைப் பொறுத்தவரை வார்த்தைகளை விட செயல் அதிகம் பயன்பாடு மிக்கதாக இருக்கிறது.

### பெற்றோர்களை அடிக்கலாமா?

குழந்தைகள் பெற்றோரை அடிக்க அனுமதிக்கக் கூடாது. இத்தகைய தாக்குதல்கள் பெற்றோருக்கும் குழந்தைகட்கும் ஆபத்தானவை. இது குழந்தைகளை பரபரப்புக்குள்ளாக்குவதுடன், எதிர்த் தாக்குதல் குறித்து அச்சத்தையும் வளர்த்து விடுகிறது. இது பெற்றோரை கோபமும் வெறுப்பும் கொள்ள வைக்கிறது. அடிப்பதை தடை செய்வது குழந்தையின் குற்றத்தையும் பரபரப்பையும் தவிர்க்க அவசியமானது. தவிரவும் குழந்தை குறித்து பெற்றோர் அன்பான அணுகுமுறையைத் தொடர்ந்து கொண்டிருக்க அவசியமானதும் ஆகும்.

ஒரு தாயார் தான் தப்பித்துக் கொள்வதற்காக, தனது கன்னத்தில் அடிக்காமல் தனது கையில் அடிக்குமாறு குழந்தையிடம் கேட்டுக்கொள்வதை ஒருவர் கண்டிருக்கக்கூடும். 34 வயதான தாய் தனது 4வது பிள்ளையிடம் ''மெல்லமாக அடி... நோக அடிக்காதே'' என்று கேட்டு தனது கையை நீட்டி மன்றாடினார்
''அப்படிச் செய்யவேண்டாம். குழந்தை உனக்கு அடிப்பதை விட நீ குழந்தைக்கு அடிப்பது பரவாயில்லை'' என்று சொல்ல வேண்டும் போல் இருக்கிறதல்லவா?

உண்மையில் தாய் இந்த தாக்குதலை உடனடியாக . நிறுத்தியிருக்க முடியும்.
''அடிக்கிறேல்லை... நான் உன்னை அடிக்க விடமாட்டேன்...''
''உனக்கு கோபம் என்றால் வாயாலை சொல்லு''

பெற்றோருக்கு அடிப்பது தொடர்பான கட்டுப்பாடு எந்தச் சந்தர்ப்பத்திலும் மெருகு படுத்தப்படக் கூடியதல்ல. சிறப்பான வளர்ப்பு என்பது குழந்தையும் பெற்றோரும் ஒருவரை ஒருவர் மதிப்பதில் ஆரம்பிக்க வேண்டும். அது பெற்றோரின் 'பெரியவர்' தன்மையினால் உருவாக்கப்படக் கூடாது.

'அடி, ஆனால் நோக அடிக்காதே' என்பது குழந்தையை, அந்தச் செயலை திருத்தமாகச் செய்ய உபதேசிக்கிறதே ஒழிய அதை நிறுத்த வில்லை. இதன் மூலம் குழந்தை தனக்கு விதிக்கப்பட்டுள்ள அடிப்பதற்கான தடையை விளையாட்டுக்கு அடிப்பது, தாக்குவதற்காக அடிப்பது என்று பாகுபடுத்தி பரிசோதிக்க அனுமதிக்கப்படுகிறது.

### அடித்தல்

குழந்தைகளை அடிப்பது, ஒரு மோசமான விடயமாக இருப்பினும், அவர்களை ஒழுங்குபடுத்த பயன்படும் ஒரு பிரபல்யமான முறையாக அது உள்ளது. எல்லா விதமான வழமையான முறைகளும் பயனற்றுப் போகின்ற போது இந்த வழிமுறை பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் இது திட்டமிட்டு நடப்பதில்லை. ஆனால் ஆத்திரம் மேலிடும் போது, நாம் எமது பொறுமையை இழந்து விடுகையில் இது நடக்கிறது. இது அந்தக் கணத்தில் நிலைமையைத் தீர்த்து வைக்கிறது குழந்தையை அந்தக் கணத்திலாவது கீழ்ப்படிய வைக்கிறது. பெற்றோரது உணர்ச்சிக் கொந்தளிப்பை தணிக்கிறது. சிலர் சொல்வது போல அது நிலைமையை உடனடியாகச் சீராக்குகிறது. அடிப்பது இவ்வளவு வினைத்திறனுள்ள ஒரு முறை என்றால் நாம் ஏன் அது தொடர்பாக அதிகம் அசௌகரியமாக உணர வேண்டும்? உள்ளூர உள்ள அடித்தல் தண்டனையின் நீண்ட காலத் தாக்கங்கள் தொடர்பான சந்தேகங்கள் எம்முள் எழவே செய்கின்றன. அடிக்கும் போது நாம் எமக்குள்ளேயே சங்கடப்படுகிறோம். 'இதற்கு வேறேதாவது நல்ல வழி இருக்கலாம்' என்று கூறிக்கொள்கிறோம்.

அடித்தலில் உள்ள தவறு என்னவென்றால், அது விளக்கும் பாடம் தான். அது உனக்கு எரிச்சல் வரும் போது சரியற்ற வழிமுறைகளையும் கடைப்பிடிக்கலாம் என்று போதிக்கிறது. அடித்தல் அவர்களுக்கு சொல்கிறது. 'உனக்கு கோபம் வந்தால் - அடி!''

உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான நாகரிகமான வழிமுறைகளை காட்ட விரும்பும் நாம் அதற்குப் பதிலாக இதன் மூலம் ஒரு அநாகரிக வழிமுறையை கற்றுக் கொடுக்கிறோம்!

இத்தகைய தண்டனையின் இன்னொரு மோசமான பக்க விளைவு என்னவென்றால், அது குழந்தையின் உணர்வுபூர்வமான வளர்ச்சியைக் குழப்புகிறது. தண்டனை குற்ற உணர்விலிருந்து குழந்தையை விடுவித்துவிடுகிறது. தான் செய்த தவறுக்கு தண்டனை கிடைத்ததன் மூலம் தான் விடுவிக்கப்பட்டு விட்டதாக அது உணர்கிறது. எனவே அதே தவறை திருப்பிச் செய்ய எந்த வித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லை என்று அது நினைக்கிறது. செல்மா ஃபயர் பாரிக் சொல்வது போல குழந்தைகள் இத்தண்டனை குறித்து ஒரு ''கணக்குப் பதிவு'' அணுகுமுறையை தம்முள் வளர்த்துக் கொள்கின்றனர். தாம் தவறுகளைச் செய்து அவற்றை கணக்குப் பதிவேட்டில் வரவு வைத்துக் கொள்கின்றனர். தண்டனை கிடைக்கும் போது வாராந்தம் அல்லது மாதாந்தம் அதை செலவுப் பக்கத்தில் பதிவு செய்து தம்மை சமப்படுத்திக் கொள்கின்றனர். சிலவேளைகளில் அடி வாங்குவதற்காகவே பெற்றோரை அவர்கள் சீண்டுவதுண்டு. அல்லது சிலவேளைகளில் தம்மைத் தண்டிக்குமாறு தாமாகவே அவர்கள் கோருவதும் உண்டு என்கிறார்கள் பெற்றோர்கள்.

தன்னைத் தண்டிக்குமாறு கோரும் ஒரு குழந்தை தனது குற்ற உணர்வுக்கும் கோபத்துக்கும் இடையில் தன்னை சமப்படுத்திக் கொள்ள உதவி கோருகிறதே ஒழிய தண்டனையை அல்ல. இது ஒன்றும் இலகுவான காரியம் அல்ல. சில சந்தர்ப்பங்களில் குற்றங்களை மனந்திறந்து கலந்துரையாடுவதன் மூலம் கோபத்தையும் குற்ற உணர்வையும் தவிர்த்துக் கொள்ள முடியும். வேறு சில சந்தர்ப்பங்களில், குழந்தையின் விருப்பங்கள் விமர்சனமில்லாமல் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். ஆனால் அதன் நடவடிக்கைகளுக்கு எல்லைகள் போடப்பட வேண்டும். குழந்தையின் விருப்பங்கள் வேறு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வழிவகைகளை நோக்கி திருப்பி விடப்படலாம். குழந்தை தனது குற்ற உணர்வையும் கோபத்தையும் வெளிப்படுத்த வேறு வழிகளை கண்டு கொள்ளுவதுடன் பெற்றோரும் கட்டுப்பாடுகளை விதிப்பதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் புதிய வழிமுறைகளை புரிந்து கொள்ளும் போது, அடித்தல் போன்ற உடல் ரீதியான தண்டனைகளுக்கான தேவை குறைக்கப்பட முடியும்.

**அடுத்த இதழில்**
**குழந்தையின் வாழ்வில் ஒரு நாள்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காற்றின் மௌனம்: "...இன்னுமொரு மொழியாக்கம்..."

**'காற்றின் மௌனம்'**
**(மொழிபெயர்ப்புக் கவிதைகள்)**
**பண்ணாமத்துக் கவிராயர்.**
**வெளியீடு:**
**மலையக வெளியீட்டகம்**
**57, மகிந்த பிளேஸ்,**
**கொழும்பு - 6.**
**விலை: 80/=**

ஈழத்து மொழிபெயர்ப்பிலக்கியத்தில் குறிப்பாக கவிதையிலக்கியத்தில் எம்.ஏ.நுஃமான், முருகையன் ஆகியோர் மொழிபெயர்த்து வெளியிட்ட பலஸ்தீனக் கவிதைகள் பல வழிகளிலும் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

இதற்கு முன்பாக அறுபதுகளில் ''ஒரு வரம்'' எனும் தலைப்பில் ஷேக்ஸ்பியரின் சில சொனற்றுகள் (சொனற் என்பது ஒரு ஆங்கிலப் பாவடிவம்) உட்பட ஜோன் டண் போன்றோரின் ஆங்கிலக் கவிதைகளைச் சுவையாகவும் நளினமாகவும் முருகையன் தொகுத்து வெளியிட்டிருந்தார். அக் கால கட்டப் பகுதியில் வெளியான ''நோக்கு'' இதழ்களிலும் பின்னர் நுஃமான் வெளியிட்டகவிஞன் இதழ்களிலும் பல மொழிபெயர்ப்புகள் வெளியாயின. அன்னா அஃமத் தோவா உட்படப் பலரின் கவிதைகளை அ.யேசுராசா மொழிபெயர்த்திருந்தாலும் மொழிபெயர்ப்புக்கள் நூலானமை குறைவே. மாஓவின் கவிதைகளைச் சி.சிவசேகரம் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார். இவரது இன்னொரு மொழிபெயர்ப்புத் தொகுதியான ''பணிதல் மறந்தவர்'' என்பதும் அண்மையில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. கே.கணேஷ் மொழிபெயர்ப்பிலக்கியத்தில் நீண்டகால, ஆழமான தடம் பதித்தவர். சுமார் பதினைந்து மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். கவிதை, சிறுகதை, குறுநாவல் என மொத்தமாக இருபத்தியொரு மொழிபெயர்ப்புத் தொகுதிகளை கொணர்ந்திருக்கிறார்.

மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கான நல்ல முன்னுதாரணமாகப் பலஸ்தீனக் கவிதைகள் ஈழத்திலும், தமிழகத்திலும் வெகுவாகச் சிலாகிக்கப்பட்டமைக்கான காரணங்களில் அரசியல் சூழலும் ஒன்று. இது தவிரவும் பலர் சிற்றிதழ்கள், பத்திரிகைகளில் மொழிபெயர்ப்பாக்கங்களைச் செய்து வந்தனர். இவ்வாறு செய்தவர்களில் நீண்ட காலப் பாரம்பரியமுடையவர் ஸெய்யத் முஹம்மது பாறூக் எனும் பெயருடைய பண்ணாமத்துக் கவிராயர். இவரின் மொழி பெயர்ப்புக் கவிதைகளடங்கிய தொகுதி ''காற்றின் மௌனம்'' எனும் தலைப்பில் அழகான அட்டைப் படத்துடனும், பேராசிரியர் சிவத்தம்பியின் ''தமிழ்க் கவிதையின் தரிசன விஸ்தரிப்புகள்'' எனும் முன்னுரைக் குறிப்புடனும் வெளிவந்துள்ளது.



பலஸ்தீனின் புகழ் பெற்ற கவிஞர்கள், சிலி நாட்டுக் கவிஞன் பாப்லோ நெரூடா, உருதுக் கவிஞர் பைஸ் அஹ்மத்பைஸ் உட்பட பலரது கவிதைகள் இங்கு மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. ''பலஸ்தீனக் கவிதைகள்'; ''பாப்லோ நெரூடாவின் கவிதைகள் அடங்கியதொகுதி, (இந்தியாவில் வெளிவந்தது) பய்ஸ் அஹ்மத் பய்ஸின் ''துரோகத்தின் தருணம்'' (மொழிபெயர்ப்பு:ராஜன்) ஆகிய கவிதை நூல்கள் தந்த மொழிபெயர்ப்புத் தாக்கம் பண்ணாமத்துக் கவிராயரின் மொழிபெயர்ப்புத் தரவில்லை.

இவர் பற்றிய பின்னட்டைக் குறிப்பில் இவரை ''புதுக்கவிதைச் சந்தக்காரர்'' என அறிமுகப்படுத்துகின்றார் மலரன்பன். சில கவிதைகள் தமிழ் மரபுக் கவிதை வடிவில் (எதுகை, மோனை சந்த ஒழுங்குகள்) மொழிபெயர்க்கப்பட்டதிலிருந்து நாம், கவிஞர் மரபு சார்ந்த ஓசை நயங்களுக்குள் தன்னை இழந்தவர் என்பதை அறிய முடிகிறது. இதனையே மொழிபெயர்ப்பிலும் பிரயோகித்திருக்கிறார். இந்தப் பிரயோகம் கவிதையைச் சிதைத்து விடுகிறது. கவிதைகளை வாசிப்பவர்களுக்கு பிற அனுபவங்களுடனான பிறநாட்டுக் கவிதைகளை வாசிப்பதான உணர்வு ஏற்பட மறுக்கிறது. ஒரு கவிஞரால் எழுதப்பட்ட மரபுக் கவிதைகள் எனத்தான் எண்ணத் தோன்றுகிறது. புதுக்கவிதைப் பாணியில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கவிதைகளிலும் சந்த நயங்களுக்காகச் சொற்கள் தேடப்பட்டுள்ளது. உ+மாக;

*மரமடர்ந்த காட்டினிலே*
*மாமரங்கள் பலவுண்டு*
*பால்நிலவின் கழுத்தினிலே*
*பாய்ந்துள்ளது கட்டாரி;*
*வானம் பாடியின் ரத்தம்*
*வடிந்துள்ளது கல்லினிலே..*

இதைத்தான் பேரா.சிவத்தம்பி நாசூக்காக இவ்வாறு சொல்லியிருக்கிறாரோ தெரியாது. ''கவிதை மொழிபெயர்ப்பு என்பது உண்மையில் மொழிபெயர்ப்பு அல்ல, அது இன்னொரு மொழியாக்கமே, இன்னொரு படைப்பே...''

இந்தப்பதிவுகள்வாசகர்களுக்கேற்ப வேறுபடவும் கூடும். ''ஒரு புதிய கவிதையுலகைத் தந்துள்ளதாக'' சிவத்தம்பி கூறுவது போல் இருக்கவும் கூடும். எனினும் மேற்கூறிய தாக்கங்கள் பொதுவாசகனை மொழிபெயர்ப்பிலக்கிய வாசிப்பிலிருந்து தள்ளியே வைக்கும். ஒரே கவிஞர்களை, கவிதைகளை பல்வேறு மொழிபெயர்ப்பூடாக வாசிக்கும் பொழுதும் மனது அலைக்கழிக்கப்படுகிற போக்கு நிகழ்கிறது. உதாரணத்திற்கு பைஸ் அஹ்மத் பைஸின் ''இன்னும் சில நாட்கள்'' எனும் கவிதையின் இரு மொழிபெயர்ப்புகளைப் பார்ப்போம்.

*இன்னும் சில நாட்கள் - அன்பே*
*இன்னும் சில நாட்கள்!*
*பாட்டன் பூட்டன் பிழைகள்*
*பட்டுத் தொலைத் திடுவோம் ...*
*ஒடுக்குமுறை நிழலில்*
*ஒடுங்கிக் கிடந்திடுவோம்*
*படுத்தும் துயர்க் கண்ணீர்ப்*
*பாரம் தாங்கிடுவோம்...*
*கைகளிலும் விலங்கு,*
*கால்களிலும் விலங்கு;*
*சிந்தனை சிறைப்பட்டு*
*வாய்களிலும் பூட்டு!*
*பிச்சைக்காரன் அங்கி போல்*
*பிய்ந்திடும் கந்தலுடை*
*மூளும் வேதனைத் துண்டுகள்*
*முட்டிப் புதுக்கிடுவோம்!*
*துணிச்சல் இருப்பதால் தான்*
*துடியாய்த் துடித் திடுகிறோம்*
*ஒரு முடிவைக் காண*
*ஒரு சில நாளிருக்கு!*
*அடக்கு முறை வீழ*
*அதிகம் நாட்களில்லை -*
*வெம்மைப் புழுக்கத்திலே*
*வெந்திடுவோம் அது வரை!*
*அந்நிய நுகத் தடியின்*
*அடிமைச்சுமை யழுத்த*
*நசுங்கி யினிக் கிடக்கும்*
*நாட்கள் ஒரு சில தான்.*
*வாலிப வைகறையை*
*வருத்தும் சிலுவைகளும்*
*தாரகை யிரவுகளின்*
*தாபமும் தாங்கிடுவோம்*
*இன்னும் சில நாட்கள் - அன்பே*
*இன்னும் சில நாட்கள்.*

**- பண்ணாமத்துக் கவிராயர்.**

*இன்னும் சில நாட்கள்*
*என் அன்பே, ஒரு சில நாட்கள் தான்*
*ஒடுக்குமுறையின் திக்குத் தெரியா*
*கானகத்தில்*
*நச்சுக் காற்றை சுவாசிக்கும்*
*நிர்ப்பந்தம்*
*இன்னும் சில நாட்கள்தான்*
*தாங்கி நிற்க முயற்சிப்போம்*
*ஓநாய்களிடம் படும் துன்பத்தை*
*நச்சுப் பாம்புகளிடம் படும்*
*அவதியை*
*அதுவரையில் தாங்கி நிற்க்*
*முயற்சிப்போம்.*
*துயரம் நமது பாரம்பரியம்*
*மூதாதையர் வீட்டுச் சென்ற*
*பாரம்பரியம்*
*சிறையுண்ட உடல்கள்*
*கட்டுண்ட உணர்வுகள்*
*விலங்கிடப்பட்ட மனங்கள்*
*நெரிக்கப்பட்ட குரல்கள் ...*
*இருந்தும், எல்லாம் மீறி*
*வாழ்க்கை நடைபோடுகிறது*

*பிச்சைக்காரனின் கந்தல்*
*ஆடைபோல வாழ்க்கை*
*அதில் தினமும் ஒரு ஒட்டுத்*
*துணியாய்*
*வேதனை வந்து சேரும்*
*கொடூர யுகம் முடிவை*
*நெருங்குகிறது*
*அதுவரை கொஞ்சம்*
*பொறுத்திருப்போம்*
*விடியல் கைக்கெட்டும் தொலைவில்*
*நிகழ்காலம் எரிந்துபோன*
*குருட்டுத்தனம்*
*வாழவேண்டும்தான்; ஆனால்*
*இங்ஙனமல்ல*
*அடக்குமுறையின் இரக்கமற்ற*
*கொடுமையை*
*தாங்கவேண்டும் தான்; ஆனால்*
*இங்ஙனமல்ல*

*உனது அழகை மூடித் திரையிடும்*
*அநீதியின் தூசி*
*எனது இளமையின் அளவற்ற*
*விரக்தி*
*நிலவு ஒளிரும் இரவுகளுக்கான*
*நமது தாகம்*
*சாம்பல் படிந்த விளிம்புகளோடு*
*நமது இதயம்*
*சித்ரவதை பீடத்தில் கிடக்கும் நமது*
*உடல்*
*எல்லாம் சில நாட்கள்தான்*
*என் அன்பே! இன்னும் சில*
*நாட்கள்தான்.*

**ராஜன்**
**''துரோகத்தின் தருணம்''**

பல பரிமாணங்களை, விமர்சன அணுகுமுறைகளைத் தோற்றுவிக்கும் இக்கவிதை நூல் ஈழத்து நூலுலகுக்கு புதுவரவாயும், முன்னுதாரணமாயும் நிற்க வேண்டும் என எதிர்பார்க்கலாம். கவிஞரின் நீண்டகால உழைப்பும் முயற்சியும், தேடலும் நல்ல தாக்கங்களை வாசகர்களுக்கு இன்னுமின்னும் ஏற்படுத்தியிருக்கலாம் என்பது தாழ்மையான அபிப்பிராயம்.

**— சத்யா —**

# ஏறுவெயிலும் கவிதை வரட்சியும்!

**சேரமான் கணைக்கால் இரும்பொறை**

**'ஏறுவெயில்'**
**(கவிதைகள்)**
**மஜீத்**
**வெளியீடு:**
**மூன்றாவது மனிதன்**
**வெளியீட்டகம்**
**விலை 50/=**

90களின் ஆரம்பத்தில் இருந்து எழுதிக் கொண்டிருக்கும் மஜீதின் முதலாவது கவிதைத் தொகுதி ஏறுவெயில். மொத்தமாக 15 கவிதைகளைக் கொண்டு நேர்த்தியான அச்சமைப்பில் வெளியாகி இருக்கிறது.

நான் அறிந்தவரையில் தமிழகத்தின் மேத்தா - வைரமுத்து பாதிப்பில் எழுதிக் கொண்டிருந்த கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் இளங்கவிஞர் அணியைச் சேர்ந்த ஒருவர் இவர். இடையில் சில காலம் அத்தகைய எழுத்துக்களைத் தவிர்த்து, நவீன கவிதைப் போக்குகளைச் சார்ந்து அதன் அரும்பு நிலைகளைக் காண்பிக்கும் கவிதைகள் சிலவற்றை உதிரிகளாக அவ்வப்போது எழுதிக் கொண்டிருந்தார். அவரது கவிதை தொடர்பான கருத்தியல்களிலும்; அவை எனக்கு உடன்பாடற்றவையாயிருப்பினும் கூட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

எனினும் என்னைப் பொறுத்தளவில் அவர் தொடர்பில் இத் தொகுதி ஒரு திடீர்ப் பாய்ச்சல் என்றே நினைக்கிறேன். உண்மையில் மஜீதினால் இந்தளவுக்கு எல்லை தாண்ட முடிந்திருக்கிறதென்பது எனக்கு வியப்பையே தருகிறது. அவருடைய மூடுண்ட, நவீன இலக்கியப் போக்குகளை அனுசரித்துச் செல்லாத இறுகிய சூழலில் இத்தகைய எழுத்துக்கள் சாத்தியப்பட்டிருப்பதானதும் சமீப காலத்தில் மொழியைக் கையாள்வதில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் தேர்ச்சியும் அவர் பற்றிய நம்பிக்கைகளை விதைத்துச் செல்கின்றன.

இனி கவிதைகளுக்கு வருவோம். இரண்டு அல்லது மூன்று தடவைகள் மொத்தத் தொகுதியைம் வாசித்து முடித்ததில் (ஆர்வத்தினால் அல்ல; மனதில் ஒட்டாததால்) புலப்பட்ட ஒரு முக்கிய விடயம் மஜீதிற்கு கவிதை இன்னமும் இயல்பாகத் தோன்ற ஆரம்பிக்கவில்லை என்பதே. அதாவது கவிதை பீறிட்டுக் கொண்டு வரவில்லை. தொகுப்பை வாசித்து வாசித்து பக்கங்கள் யாவற்றையும் கடந்து நினைவு செய்வதற்குள் ஏராளமான கவிஞர்கள் என் மனக் கண்ணுக்குள் தோன்றி புன்னகைத்து விட்டுப் போய்விட்டார்கள். மஜீதின் கவிதைகளில் தென்படும் தொய்விற்கும் மற்றைய கவிஞர்களின் கவிதைகள் ஏற்படுத்திய பரவலான ஆனால் அழுத்தமான தாக்கங்களே காரணம் என்பேன் நான்.

மஜீதை மிக உக்கிரமாகப் பாதித்திருக்கும் கவிஞர் அவரது பிரதேசத்தையே சேர்ந்த கவிஞர் சோலைக்கிளியே ஆவார். தொகுப்பிலிருக்கும் மஜீதின் பெயரைக் கவனியாமல் இக் கவிதைகளைப் படிக்கும் ஒருவருக்கு இது சோலைக்கிளியின் தொகுப்போ என்ற எண்ணம் ஏற்படுவதற்கு அதிக நேரம் எடுக்காது. ''என்னருகில் வீழ்ந்த அழகின் முட்டை'', ''என்நரம்பெங்கும் ஊர்ந்து திரியும் பெண்புழு'', ''நிலாச்சோறு'', ''காகங்கள் பூக்கும் தென்னை'' ஆகிய கவிதைகள் முழுக்க முழுக்க சோலைக்கிளியின் பாதிப்பிலேயே தோய்ந்து வந்திருக்கின்றன. ''காகங்கள் பூக்கும் தென்னை'' என்ற கவிதை சோலைக்கிளியின் ''பாம்பு நரம்புமனிதன்'' தொகுப்பில் இடம்பெற்றுள்ள ''கொலையுண்ட என் மனம்'' கவிதையைப் பார்த்துப் பார்த்து எழுதியது மாதிரி இருக்கிறது.

மஜீதின் கவிதைத் தலைப்புகள் கூட சோலைக்கிளியைப் பின்பற்றியே எழுந்துள்ளன. ''காகங்கள பூக்கும் தென்னை'', ''என்னருகில் வீழ்ந்த அழகின் முட்டை'', ''என்நரம்பெங்கு ஊர்ந்து திரியும் பெண்புழு'' ஆகியன மாதிரிக்குச் சில. ''கோடுகள் பின்னய வெளி'', ''நான் சொட்டும் தீத்திரவம்'' போன்ற கவிதைத் தலைப்புகள் சற்று வேறுபட்டன போல் தோன்றினாலும் உண்மையில் இவற்றின் உட்தொனியானது சோலைக்கிளியின் சாயலேயே ஒத்திருக்கிறது.



மற்றது மஜீதின் கவிதை வரிகள் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கு சோலைக்கிளியின் தொனியையே அடியொற்றிச் செல்வதாயுள்ளது. மஜீதின் கவிதைகள் சோலைக்கிளியை ஞாபகப்படுத்துவதற்கு காரணமான பிரதான அம்சங்களுள் இதுவும் ஒன்று.

இவை தவிர சில கவிதைகள் சோலைக்கிளியின் கவிதைகள் ஆரம்பிப்பது போல்வேறு ஆரம்பிக்கின்றன. ''எட்டாவது நரகம் தொகுப்பிலுள்ள ''நினைவுகள்'' கவிதையின் தொடக்கமும் மஜீதின் ''இப்பவும்இப்படியும்'' கவிதையின் தொடக்கமும் அத்துணை வேறுபட்டவையல்ல. இவற்றைவிட அஃறிணைப்பொருட்களால் கவிதைகளை நிறைக்கும் தன்மையிலும் மஜீதின் கவிதைகள் சோலைக்கிளியை நிகர்க்கின்றன. இத்தொகுப்பிலுள்ள ''அனைவருமே பாம்புக்குகையுள்'' கவிதையின் கடைசிப் பந்தி மூச்சுத் தட்டுமளவுக்கு அஃறிணைச் சொற்களால் நிறைக்கப்பட்டு அடர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அதாவது மஜீதின் கணிசமான கவிதைகளில் சோலைக்கிளியின் நெடி வீசக் காரணமாண இன்னுமொரு விடயம் கவிதை தொடர்பான மஜீதின் கருத்தியல். இது சோலைக்கிளியின் கவிதைகளூடு உள்வாங்கப்பட்டிருக்கத்தக்கதெனக் கருதப்படக்கூடிய உணர்வுமயப்பட்ட கவிதைத் தன்மை. கவிதை ஒரு உணர்வுதான். எல்லா நல்ல கவிஞர்களுக்கும் கவிதை ஒரு உணர்வாகவே ஏற்படுகிறது. சோலைக்கிளியும் மஜீதும் கூட அவ்வாறேயே தான். ஆனால் ஒவ்வொருவருக்கும் கவிதை உணர்வேற்படும் விதம் வேறுபடுவதனாற்தான் கவிதைகளும் வேறுபடுகின்றன. மஜீத் கவிதை உணர்வுக்குட்படும் விதம் சோலைக்கிளியை ஒத்திருக்கிறது. இதனாற்தான் மஜீதின் கவிதைகள் சோலைக்கிளியை ஞாபகப்படுத்துகின்றன.

சோலைக்கிளியும் மஜீதும் ஒரே பிரதேசத்தவர்களாக இருப்பதாலும் ஒரே சொற்களைப் பயன்படுத்து

→14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்று மழைக்கால இரவுகள்

எஸ். கே. விக்னேஸ்வரன்

இந்த மூன்று மழைக்கால இரவுகளுக்கும் இடையில் என்ன சம்பந்தம் இருக்கிறதோ தெரியாது. ஆனால் எப்போதெல்லாம் வானம் கறுத்து மழை கொட்டத் தொடங்குகிறதோ அப்போதெல்லாம் இந்த மூன்று இரவுகளும்எனக்கு அடிக்கடி ஞாபகத்துக்கு வரும். மழை பெய்கிற நூற்றுக் கணக்கான இரவுகளில் இந்த மூன்று இரவுகள்மட்டும் எனக்கு ஞாபகம் வருவது ஏன்என்பது பற்றி நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. ஆனால் அது எனக்கு ஒரு போதும் பிடிபடுவதே இல்லை.

இன்றைக்கும் மழை பெய்துகொண்டு தான் இருக்கிறது. மாரி காலம் வராவிட்டாலும் கூட மழை வந்து விட்டது. ''காலத்துக்கு இப்பெல்லாம் என்னதான் நடக்குது'' என்று பேசிக்கொள்வது சாதாரணமாகப் போய் விட்டது. ஜன்னலுக்கு வெளியே வானமே தெரியாத இருள். முன் வீட்டு கோடிப்புறத்தில் ஒரு வெளிச்சம் தெரிகிறது. அது அவர்களது அடுப்படிக்குள்ளிருந்து வரும் வெளிச்சமாக இருக்க வேண்டும். மற்றப்படி ஒரு வெளிச்சமும் இல்லாத இருள். வீட்டுத் தாவாரத்தில் இருந்து வடியும் தண்ணீர் விழும் தொடர்ச்சியான சப்தப் பின்னணியில் விட்டு விட்டு தூரத்தே கேட்கும் மெல்லிய முழக்கமும், அதை முன்னறிவிப்பதாய் மெல்லியதாய் சிரித்து மறையும் மின்னலுமாக இரவு நகர்ந்து கொண்டிருக்கிறது. மாலையாகும்போது தொடங்கிய இந்த மழை, தொடர்ந்து பெய்துகொண்டே இருக்கிறது. இது தணியுமா இல்லையா எனக்கூறமுடியாமல், வானமே தெரியாத இருள் மண்டிப் போய்க்கிடக்கிறது.

ஜன்னலருகில் கதிரையைப் போட்டபடி மழைச்சூழலின் சத்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் நான். எல்லாவிதமான இனிய சங்கீதங்களையும் போல, இந்த ஓசையையும் அனுபவிக்க முடியும். மழை கூடிக்குறையும் போதும், காற்று வீசும் போதும் மாறி மாறி உயர்ந்தும், தணிந்தும் வரும் ஓசைக்கு காதையும் மனசையும் அர்ப்பணித்து விட்டு உட்கார்ந்திருப்பது ஒரு தனியான சுகம். மழைக் காலங்களில் நீண்ட நேரம் விளக்கெரிய விட்டபடி இப்படி நான் உட்கார்ந்திருப்பேன். 'நேரம் ஒண்டுபாதியாகியிட்டுது போய்ப் படுடா' என்று குறைத்தூக்கத்தில் எனது தகப்பனார் கூறும் வரைக்கும் இந்த இனிய சுகத்தை அனுபவித்தபடியே உட்கார்ந்திருப்பேன். எனது கற்பனை வளம் பெற்று புத்தூற்றாகப் பொங்கிப் பெருகுவதாக எனக்குத் தோன்றும். சோக நினைவுகளை மீட்டுகிறதற்குரிய நாளாக மழைநாட்களை உணர்கிற எனது நண்பன் ஒருவனுடன் இது குறித்து நான் பேசுவேன். தனது காதலியுடன் தனக்கேற்பட்ட ஊடலை நினைத்து உருக அது இனிய பொழுது என்பது அவனது அபிப்பிராயம். ஆனால் எனக்கோவென்றால் எந்தத் தெளிவான சிந்தனைகளுக்கும், காட்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு உணர்வாக அது இருக்கும். அதை நான் ஒரு போதும் தெளிவாக ஞாபகப்படுத்திக்கொள்ள முடிவதில்லை.

ஆனால், இந்த மூன்று இரவுகளும் ஞாபகம் வருவது நினைவில் இருக்கிறது. இவற்றைத் தொடர்ந்து எனது மனம் சஞ்சரித்த இடங்களை என்னால் ஒரு போதும் நினைவு கூர முடிவதில்லை. தகப்பனாரின் அதட்டல் என்னை உலுப்பிவிடும் போது போய் படுக்கையில் விழுவேன். உள்ளங்கால் முதல் உச்சிவரை இறுக்கமாக போர்த்தியபடி கண்களை மூடிப் படுத்திருப்பேன். பழையபடி மனசையும் காதையும் மழைக்கால இரவுக்கு அர்ப்பணித்துவிட்டு அசையாமல் கிடப்பேன். என் நினைவுகளின் சஞ்சாரம் முடிந்து நான் தூங்கிப் போனதையும் என்னால் ஞாபகப்படுத்திவிட முடிவதில்லை. காலையில் மழை விட்டிருந்தால் முற்றத்தையும் முற்றத்தைக் கடந்து நிற்கும் பூச்செடிகள், வேலிப் பூவரசுகள் அதைக்கடந்து நிற்கும் தென்னந் தோப்பு, பனங்காணி எல்லாமே இனிமையாக இருக்கும்.


வீட்டிலிருந்து பின்புறமாக நடந்து போனால் பரந்த வெண்மணற்பரப்பில் மழைத்துளி கோலம் போட்டிருப்பதைக் காணலாம். கால்கள் பதியப் பதிய அதில் நடக்கையில் உள்ளங்காலுடன் உள்ளமும் சேர்ந்து குறுகுறுக்கும். சிவபெருமான்பூச்சி அல்லது தம்பளையன் சிவப்பு நிறத்தில் ஊர்ந்து போவது கோலமிட்டாற் போலிருக்கும். காலையில் எல்லா மரங்களும் குளித்துவிட்டுச் சிலிர்ப்பது போல குதூகலிப்பாக இருக்கும்...

இன்று பெய்கிற மழை எதிர்பாராத மழைதான். நீண்ட நாட்களுக்குப் பிறகு எதிர்பாராமல் திடீரென வானம் கறுத்து பொழியத் தொடங்கிய மழை. வானத்திற்கும் பூமிக்குமாய் ஒரு உயிரான தொடர்பை ஏற்படுத்துகிற பெருமை போலும் மழைக்கு. எப்போதும் சில்லென்று குளிர்ந்தபடி...

O

அப்போது எனக்கு எட்டு வயது நடந்து கொண்டிருந்ததாக அம்மா சொல்லித் தெரியும். நாங்கள் பள்ளிக்கூடத்தால் வந்த நேரத்திலிருந்து மழை பெய்து கொண்டிருந்தது. எங்கள் வீட்டு விறாந்தையில் இருந்தபடி, கால்களைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டு நான் தாவாரத்தில் இருந்து தண்ணீர் விழுந்து வழிந்தோடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இறங்கிப்போய் அதிலே கால்களால் தப்பிவிளையாட எனக்கு எப்போதும் விருப்பமாகத்தான் இருக்கும். 'ஈரத்துக்குள் இறங்கினால் என்ன நடக்குமென்று தெரியும்தானே' என்ற அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அப்படி இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தேன். என்ன நடக்கும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். அம்மாவிடம் தப்ப முடியாது. வேலிப்பூவரசம் கம்பு முறிய முறிய அடி போடுவது என்பது எனக்கு அடிக்கடி நடக்கிற விசயம்தான். ஆனாலும் எப்பவாவது ஆசையை அடக்க முடியாமல் இறங்கிப்போய் ஒரு தடவை தண்ணீரை காலால் தட்டி விடுவதுண்டு. அநேகமாக அம்மம்மா அல்லது அப்பு நிற்கிற நேரத்தில் இதை நான் செய்து பார்த்து விடுவதுண்டு. அம்மா எவ்வளவு பெரியவ என்றாலும் அப்புவுக்கும் அம்மம்மாவுக்கும் பயம்தான். அம்மம்மாவின் சீலைக்குள்ளேயோ அப்புவின் மடிக்குள்ளேயோ எனக்கு நிச்சயம் அடைக்கலம் கிடைக்கும். அப்படியான நாட்களில் எல்லாம் அம்மா என்னைப் பார்த்து முறைப்பதோடு சரி.

அன்று யாரும் இல்லை என்பதைத் தவிர மழையும் ஒரு புதுதினுசாக இருந்தது. ஒரே சீராக இல்லாமல் விசிறி விசிறி அடித்து இடைக்கிடை தாவாரத்துக்குள்ளால்



விறாந்தைப் பக்கமாகவும் அடித்தது. நான் விறாந்தைத் தூணருகாக உட்கார்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மா அடுப்படிக்குள் அலுவலாக இருந்தாள். தம்பி - சின்னக்குழந்தை வீட்டுக்குள் நித்திரையாக இருந்தான்.

வேலிக்கு அப்பால் நின்ற இரண்டு தென்னைமரங்கள் காளிகோயிலில் வேலுக்கிழவி ஆடுவது போல தலையைச் சுற்றிச்சுற்றி ஆடின. எனக்கு திடீரென அது விழுந்துவிடுமோ என்று தோன்றியது. விழுந்தால் தென்னங் குருத்து தின்னலாம். அப்பு வந்தால் வெட்டித் தருவார் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

மழையும் காற்றுமாக பொழுது பட்டும் தொடர்ந்து கொண்டே இருந்தது. அப்பா வந்தபிறகும் மழை விடவில்லை. தலையும் வேட்டியும் தோயத்தோய அவர் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தார். 'அங்காலை கிழக்குத் திக்கெல்லாம் றோட்டை மேவி வெள்ளம் பாயுது... நந்திக் கூடலுக்கை சனம் குடியெழும்பியிட்டுது...' என்று அவர் அம்மாவுக்குச் சொன்னார்.

'உந்த தென்னைமரம் பாறப்போகுது போலை' என்று நான் சொன்னேன்.

மௌனமாக அதைப்பார்த்தபடி நின்றார் அப்பா. அம்மா தேத்தண்ணி கொண்டு வந்தபோது சட சட என்ற சத்தத்துடன் அது பிரண்டு விழுந்தது. நான் எழும்பி ஓட வெளிக்கிட்டேன். கட்டாயம் ஒரு ஆறேழு 'இளனி' யாவது இருக்கும். ஆனால் அம்மா 'எங்கையடா ஓடுறாய்' என்று என்னைப் பிடித்துவிட்டாள்.

அன்றைக்கு 'வெள்ளணவே' இருண்டு விட்டது. வழமையாக அப்பா வந்தபின் சைக்கிளில் எங்காவது போய்விட்டு வருவார். அதற்குப் பிறகும் நீண்ட நேரமாக இருள்வதில்லை. அன்று அப்பா எங்கேயும் போகமுதலே இருண்டு விட்டது.

இரவு நான் நித்திரையாயிருக்கையில் அப்பா என்னைத் தூக்கி எழுப்பினார். தம்பியை அம்மா தூக்கிக்கொண்டு நின்றா. எங்கள் படுக்கைக்கு கிட்ட ஈரம் வந்துவிட்டது. என்னையும் தூக்கிக்கொண்டு சைக்கிளையும் தள்ளிக் கொண்டு அப்பா வெளியே வந்தார். எங்கள் வளவுக் காணியெல்லாம் வெள்ளம். அடுப்படி சுவர் இடிந்து விழுந்திருந்தது. நாங்கள் ஊர்ப்பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்த போது நிறையப் பேர் அங்கே ஏற்கெனவே வந்திருந்தார்கள். அன்று இரவு முழுவதும் பள்ளிக்கூட வாங்கில் நாங்கள் விளையாடினோம். எங்களுடன் பாலன், ரகு, சிவா வீட்டுக்காரர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். விடிய விடிய எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

எங்களுக்கு பிறகு ஒரு கிழமை பள்ளிக்கூடம் நடக்கவில்லை. ஒரு கிழமை நாங்கள் எல்லோரும் பள்ளிக் கூடத்தில் சமைத்துச் சாப்பிட்டோம்.

O

அடுத்ததாக எனக்கு ஞாபகம் வருகிற மழைநாள் இடிமுழக்கத்துடன் துவக்கு வெடிகளும் ஷெல் சத்தங்களும் கேட்ட ஒரு மழை நாள். அன்று நாங்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் நெஞ்சைப்பிடித்தபடி கழித்துக் கொண்டிருந்தோம். எங்கள் வீட்டின் பின்புறமாக நாம் வெட்டியிருந்த பதுங்கு குழியில் தண்ணீர் நிறைந்து விட்டது. பகல் முழுக்க பெய்த மழைக்கு தண்ணீர் நுழையாமல் நாங்கள் எவ்வளவோ முயன்றும் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பதுங்கு குழியைச் சுற்றி தம்பி மண் அணைத்துக் கொண்டிருக்கையில் ஹெலிகொப்ரர்கள் வட்டமிடத் தொடங்கி விட்டன. பொம்பர்களும் வேகமாக ஓடித்திரிந்தன. பக்கத்துவீட்டு தென்னங்காணிக்குள் விழுந்த ஒரு பீப்பாக்குண்டு சிதறி தென்னையுச்சி தீப்பற்றி எரிந்தது. நாங்கள் ஓடிப்போய் பதுங்கு குழிக்குள் புகுந்து கொண்டோம். சரசரவென குழிக்குள் தண்ணி இறங்கி வருவதை நாங்கள் இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தோம். விரித்திருந்த பாயைக் கொஞ்சநேரம் சுருட்டி கையில் வைத்திருந்தான் தம்பி. ஒரு வருடத்திற்கு முன் இறந்து போன அம்மாவின் நினைவு வந்திருக்கவேணும் அவனுக்கு. 'அம்மா இப்ப இருக்கோணும்... இந்தப் பயத்திலையே செத்திருப்பா' என்று சொன்னான். அப்பா ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தார். அடிக்கடி பதுங்குழி வாசலுக்குள்ளால் தலையை எட்டி வானத்தைப் பார்த்தார். கைகளால் மண்ணை அணைத்து வருகிற நீரை தடுக்கப் பார்த்தார். குழிக்குள் இறங்கிய தண்ணீர் கணுக்கால் மட்டத்திற்கு உயர்ந்து விட்டது. நாங்கள் நின்ற பகுதிக்கு பின்புறமாக ஒருபகுதி மண் உடைந்து கொட்டுப்பட்டது. எங்கிருந்தோ ஒரு தேரைதாவி அந்த உடைந்து விழுந்த மண்ணின் மேல் குதித்துப் பதுங்கியது.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சத்தம் அடங்கி விட்டதாகத் தோன்றியது. நாங்கள் வெளியே வந்தோம். இனி இந்த பதுங்குகுழி சரிவராது என்றான் தம்பி. எனக்கு நிறைய யோசனையாக இருந்தது. என்ன நடக்கிறப்போகிறதோ என்று கவலையாகவும் இருந்தது. தொடர்ந்து ஷெல்லடியும் குண்டு வெடிப்பும் தூரத்தே கேட்டுக் கொண்டிருந்தன.

யாரோ இருவர் வளவுக் கேற்றைத் திறந்து கொண்டு ஓடி வந்தார்கள். ''உதாருது' என்று கேட்டார் அப்பா. 'அது நாங்கள்... அவங்கள் வந்திட்டான்களாம் உதிலை சனமெல்லாம் கோயிலடியிலை போய் இருக்குது. நீங்கள் இன்னும் வெளிக்கிடேல்லையே... வீடுகளை இருக்கிறாக்களை சுட்டுத் தள்ளிப் போடுவங்கள்... றேடியோவிலை சொன்னதாமெல்லே முகாமில போயிருக்கச்சொல்லி...' -பக்கத்து வீட்டு ராசா அண்ணையும் மனைவியும்தான் ஓடிவந்தவர்கள். அவர்களுக்கு பேசமுடியாமல் நாக்குழறியது.

'முகாமிலை மட்டும் ஒண்டும்செய்ய மாட்டாங்களோ... முகாமுக்கும் தானே ஷெல்லடிக்கிறாங்கள்' என்றார் அப்பா.

நான் பேசாமல் நின்றேன். தம்பி சுவரில் சாய்ந்தபடி கேட்டுக்கொண்டு நின்றான்.

'இஞ்சாலை வாபிள்ளை மழைக்கை நில்லாமல்' என்று ராசாண்ணையின் மனைவியைக் கூப்பிட்டார் அப்பா.

'எங்களுக்கு வீட்டை இருக்கப் பயமாக்கிடக்கு அதுதான் வந்தனாங்கள்' என்றாள் ராசாண்ணையின் மனைவி.

'நாங்கள் போகேல்லை. காம்பிலை போய் இருந்தால் தான் பெடியங்களை அவங்கள் அப்பிக் கொண்டு போகச் சுகம்' என்றான் தம்பி.

நான் எதுவும் பேசவில்லை. எனக்கு எரிச்சல், கோபம், கவலை என்று எது என்று சொல்லமுடியாத ஒரு உணர்வு. போராட்டத்தில் ஈடுபடுகிற எந்த நாட்டு மக்களுக்கும் உரிய பிரச்சினைதான் இது. ஆனால், ஆனால் போராட்டமே அல்லவா இங்கே பிரச்சினையாகி விட்டது... எவ்வளவு நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் போராடப் புறப்பட்ட நண்பர்களுடன் நானும் சேர்ந்தேன். அப்பொதெல்லாம் அம்மாவும் தம்பியும், ஏன் எதற்கும் கலங்காத அப்பாவும் எவ்வளவு கவலைப்பட்டார்கள்... கண்ணீர் விட்டார்கள்... ஆனால் எல்லாமே குழம்பி... குழம்பியதா அல்லது குழப்பப்பட்டதா...

இப்படி எத்தனை மழையில் நாங்கள் அலைந்தோம். எத்தனை வெள்ளத்துள் நடந்து திரிந்தோம்... எல்லா உழைப்பும் அவமாகிப்போகிற மாதிரி... குழுக்குழுவாக பிரிந்து குழுக்களுக்குள் மோதி...

நான் முதன் முதலாக வீட்டைவிட்டு வெளிக்கிட்டுப் போவதாக அறிவித்த போது அதிர்ச்சியுடன் என்னைப்பார்த்த அப்பா, கண்கலங்கி உடல் பதற அழுத அம்மா... வியப்பும் பயமும் கலந்தபடியே நின்ற தம்பி... எல்லோரும் எவ்வளவு இலகுவில் எனது புறப்பாட்டை ஏற்றுக்கொண்டு என்னோடு சேர்ந்து கொண்டார்கள்... பிறகு எனக்காக எனது வேலைகளில் மௌனமாக அப்பாவும் பங்கு கொண்டது... என்னிடம் வரும் எனது சகாக்களுக்கு சமைத்துப் போட்டும் அன்பாக உரையாடியும் தங்க இடம் ஒழுங்கு செய்தும்... கண்களில் பெருமை மின்ன... அம்மாதான் எப்படி மாறிப் போயிருந்தாள்... விடுதலை உணர்வு அந்த அப்பாவி பெண்மணியையும் கூடத்தான் எப்படி மாற்றிவிட்டிருந்தது.

'அப்ப நீங்கள் வரேல்லையோ' எனக் கேட்டார்' ராசாண்ணை.

தம்பி போகமாட்டேன் என்று அழுத்தமாகச் சொன்னான். ஒரு வேளை முகாமில் நான் போய் தங்குவது எனக்கு ஆபத்தாக முடியலாம் என அவன் கருதியிருக்கக்கூடும்.

தம்பி கைவிளக்கை ஏற்றி வைத்தான். பொழுது சாய்ந்து விட்டது போல நன்றாக இருளாகிவிட்டது. மழை தொடர்ந்து பலக்கத் தொடங்கியது. ராசாண்ணர் மனைவியையும் இழுத்துக்கொண்டு ஓடத் தொடங்கினார். நாங்கள் மௌனமாக இருந்தோம்.

'காம்புக்கு போனால், தற்சேலா ஆமி பிடிக்காட்டிலும், எங்கடையள் பிடிச்சுக்குடுத்துடும்' என்று தம்பி தனக்குள் முணுமுணுப்பது போல சொன்னான்.

அப்பா ஒன்றும் பேசவில்லை. நான் வீட்டை விட்டு வெளிக்கிட்டபோதே அவர் பெருமளவு மௌனமாகி விட்டார். அதன்பின் வந்த அம்மாவின் மரணம் அவரை முழுமையாக மௌனியாக்கிவிட்டது. தேவையில்லாமல் பேசுவதையே அவர் நிறுத்தி விட்டார். அல்லது பேசத்தான் வேண்டுமென்று வந்தால் ஒழிய பேசுவதை அவர் தவிர்த்துவிட்டிருந்தார்.

நான் மௌமாக வெளியே பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன்.

திடீரென மிக அண்மையில் துப்பாக்கிச்சத்தம் கேட்டது. அப்பா மௌமாக என்னைத் திரும்பிப் பார்த்தார். அவர் முகத்தில் கலவரம் தெரிந்தது.

நாங்களும் போவோமா என்று அவர் யோசித்திருக்கக்கூடும். நாங்கள் என்ன முடிவு எடுப்போம் என்பதை அறியாத தால் பேசாமல் இருக்கிறார் போல இருந்தது. பாவம் இவருக்குத்தான் எவ்வளவு அடக்கம். அம்மா இருந்த போது எந்தவிசயத்திற்கும் இறுதியாக தலையசைக்கிறதன் மூலம் எல்லாவற்றிற்கும் பெரியவர் தான் என்ற அந்தஸ்தை அவர் பேணிவந்தார். அல்லது அந்த அந்தஸ்தில் அவரை வைத்திருந்தாள் அம்மா என்று சொல்லலாம். அம்மா இறந்துபோன இந்த ஒருவருடத்துள் எப்படி மாறிப் போனார். ஒரு ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் போல அவர் மனதுக்குள் கவலைப்படக்கூடும். தம்பியோ நானோ அவரது சொல்லைக் கேட்டுத்தான் முடிவு எடுப்போம் என்பது நடைமுறையில் இல்லை என்றாலும், அம்மா செய்வது போல நாம் எதையும் அறிவிக்காமல் விடுவதில்லை. ஆனால் அவர் எமது முடிவுக்கு எதிராக ஒன்றையும் சொல்லாமல் விடுவதன் மூலம் - தனது கருத்துக்களை தனக்குள்ளேயே வைத்துக் கொள்வதன் மூலம் - தனது

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்தானத்தைக் காப்பற்றிக் கொள்கிறார் என்பதாக எனக்குப் படும். ஆனால் அவரது மௌனமும், எமது முகத்தில்படரும்ரேகைகளை பார்த்து தனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்கிற பண்பட்ட மனோபாவமும் நிதானமாக தனிமையில் யோசிக்கிற போது நெஞ்சைப் பிடுங்கும்...

நான் ஓடிப்போன போதும் இப்படித்தான் அம்மாவுடன் சேர்ந்து மௌனமாக கவலைப்பட்டு ஒருவருடைய கவலையைப் போக்க மற்றவர் ஆறுதலாக இருந்து... எனது 'போதல்' நியாயமானதென தமது மனதை மாற்றி எனக்கு எதுவும்நடக்காமலிருக்க பிரார்த்திப்பதில்நிம்மதி கண்டு...

திடீரென்று அப்பா எழுந்து நின்றார். வீட்டின் முற்றத்துப் படலையருகாக யாரோ நடமாடுவது போல இருந்தது. முதலில் விழிப்படைந்தவன்தம்பி தான். விளக்கை ஊதி நூர்த்துவிட்டு அப்பா என்னோடை வாங்கோ' என்று விட்டு வீட்டின் பின்புறமாக ஓடினான். கோடிப்புறமாக வெள்ளம் வந்திருந்தது. நாங்கள் காலை வைத்து ஓடும் சத்தம்சளக் சளக்என்று பலத்துக்கேட்டது. நான்சாரத்தை இடுப்புக்கு மேலால் உயர்த்திக் கொண்டு ஓடினேன். வெள்ளத் தண்ணியின் விசிறலாலும் மழையாலும் நாம் நன்றாக நனைந்தபடியே தான் கோவிலுக்குள் நுழைந்தோம். அங்கு போனபோது தான்தெரிந்தது நாம் மட்டும்தான்உடுத்த உடுப்போடு வந்திருக்கிறோம்என்று. மற்ற எல்லோரும் அநேகமாக கொண்டுவரக் கூடியவற்றைக்கொண்டு வந்திருந்தார்கள். மாற்றிக்கட்ட சாரம் கூட இல்லாமல் நாங்கள் நடுங்கிக் கொண்டிருந்தோம். அப்பா உடுத்த வேட்டியைப் பிழிந்து விட்டு தூணோரமாகச் சாய்ந்தபடி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

பெரிய சத்தத்துடன்ஒரு குண்டு வெடித்தது. முகாமிலிருந்த பெண்கள் கலவரப்பட்டு அங்குமிங்கும் ஓடினார்கள். அவர்களை அமைதிப்படுத்த சில ஆண்கள் கோயில் கட்டிடத்திற்கு வெளியால் போய் மழையை ஊடறுத்து ஏதாவது தெரிகிறதா என்று பார்த்தார்கள். எங்கள்வீட்டுப் பக்கமாக வெளிச்சம் தெரிந்தது போலவும் இருந்தது. மழை பொழிந்து கொண்டிருந்த போதும் அந்த இரைச்சலையும் மீறி விமானம் பறக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கோவிலிலிருந்து நாங்கள் வீட்டுக்குத் திரும்பியபோது எங்கள் வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்திருந்தது. அதனுள்நசுங்கிய நிலையில் அப்பாவின்றலி சைக்கிளும் ஒரு பிள்ளையார்படமும் கிடந்தன. விழுந்திருந்த போதும் உடையாமல் கிடந்த அம்மாவின் படத்தைத் தம்பி தூக்கினான். இடிபாடுகளுக்குள்ளால சைக்கிளை இழுத்து எடுத்து அதை கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தார் அப்பா. இந்த சைக்கிள் அப்பா அம்மாவைக் கல்யாணம் செய்ய முதல் வாங்கிய பழைய சைக்கிள். அப்பாவின் முகத்தைப் பார்க்க முடியாமல் நான் முற்றத்திற்கு வந்தேன்.

O

எனக்கு ஞாபகம் வருகின்ற மூன்றாவது மழைநாள் அவ்வளவு பெரிதாக மழை பொழிந்து கொண்டிருந்த மழை நாள் அல்ல. வீட்டுத் தாவாரத்தின் பின்னால் வெள்ளம்போடாத அளவு மழைதான். ஆனால், அன்று என்றையையும் விட மிகவும் பலமான இடி இடித்துக் கொண்டிருந்தது. ஆட்டுக்கொட்டிலிலிருந்து கட்டியிருந்த ஆடு அறுத்துக்கொண்டு அடுப்படிக்குள் புகுந்ததும் நாய்க்கடுவன். எனது கால்களுக்குள் நுழைந்து பதுங்கியதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. மிகவும் நிதானமாக மழை பொழிந்து கொண்டிருந்தது. விறாந்தையிலிருந்து கால்களைத் தொங்கப் போட்டபடி வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். இருள்பலமாகத் தான்இருந்தது. நட்சத்திரங்கள் மருந்துக்கும்கிடையாது. ஆனால்மழை ஏனோ அவ்வளவு பெரிதாகப்பொழிய வில்லை. வீட்டிலே யாரும் இருக்கவில்லை. எங்கோ வெளியே போயிருந்தார்கள். அப்பா எங்காவது மழையில் மாட்டுப்பட்டபடி வரமுடியாமல் திகைத்துப் போய்நின்றிருக்கக்கூடும்.

விறாந்தையில் இருந்தபடி வெளியில் உள்ள தோட்டத்திற்கு தண்ணீர் இறைக்கும் துரவு நிறைந்திருக்குமோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அல்லது இன்னும் திரும்பி வராத அப்பாவும் தம்பியும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எரிச்சல் அடைந்து கொண்டிருந்தேன். அல்லது வழமை போலவே ஏதாவது ஒரு மழை பொழிந்து கொண்டிருந்த இதே மாதிரியான இரவில் நாங்கள் நெஞ்சு நிறைந்த நம்பிக்கையுடன் 'இயங்கிக்கொண்டி'ருந்த ஒரு சம்பவத்தை நினைத்துக் கொண்டிருந்திருக்கக் கூடும். நான் எத்தகைய மன நிலையில்இருந்தேன்என்பது இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நான் முகத்தில் அடித்த வெளிச்சக் கீற்றால் திடுக்கிட்டு தடுமாறியது மட்டும் ஞாபகம் இருக்கிறது; அந்தக் கணத்தில் அது ஏதோ ஒரு வாகனத்தின்ஹெட்லைற்வெளிச்சம்என்றது உறைத்ததும் அது சிலவேளை இராணுவ வாகனமாக இருக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டதும் ஞாபகம் இருக்கிறது.


விறாந்தையில் இருந்து இறங்கி கோடிப்பக்கமாக நடந்து பின்தாவாரத்தடியில் வந்து திரும்பிப் பார்த்தேன்.

ஒன்றல்ல; ஒன்றன்பின் ஒன்றாக நிறைய வாகனங்கள். எங்கள்வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தன. எனக்கு திகிலும் ஆச்சரியமும் கலந்த ஒரு உணர்வு. எதற்காக இவை இங்கு வரவேண்டும்...?

திடீரென ஏதோ குரல் மிகவும் அருகாகக் கேட்டது. வாகனத்தை விட்டிறங்கி யாரோ வந்திருக்கிறார்கள். நிச்சயமாக எங்கள்வீட்டை நோக்கித்தான்வருகிறார்கள். ஆனால் ஏன்... கேற்றருகில் ரோச்வெளிச்சம் தெரிந்தது.

நான்விறாந்தையில்இருந்து துள்ளிக்குதித்து ஓடினேன். கோடிப்புறமாக ஓடி, பிய்ந்த வேலியைத் தாண்டி வயல்வரப்புகளில் வழுக்கி விழுந்தும் எழுந்தும் ஓடினேன். மழையில் உடல் நனைந்திருந்த போதும் வியர்ப்பதான உணர்வு. வந்தது யாராக இருக்கலாம் என்று நிதானமாக யோசிக்கக்கூட சந்தர்ப்பம் கொடுக்காமல் ஓடினேன். வாசல் கேற்றடியில் நுழைந்தவர்கள் நிச்சயமாக வீட்டிற்குள் புகுந்திருப்பார்கள். வீட்டில் என்ன நடக்கிறதென்பதை அவதானிப்பதற்காகக்கூட எனக்கு ஒருதடவையேனும் திரும்பிப்பார்க்க முடியவில்லை...

ஓடமுடியாதளவுக்கு உடல் களைத்தபோது நான் கிட்டத்தட்ட இரண்டு மைல் தூரம் ஓடிவந்துவிட்டிருந்தேன். உடம்பிலே சேர்ட்கூட இல்லாமல்உடுத்திருந்த சாரத்துடன் வீட்டை விட்டு நான் ஒரு போதும் போனதில்லை. யாராவது கண்டால் என்ன சொல்வது என்று முடிவு செய்யக் கூடத் தெரியாமல் இருந்தது. வீட்டுக்கு வந்தவர்கள்என்ன செய்தார்களோ தெரியாது?



தம்பியும்அப்பாவும்வீட்டுக்கு வந்திருப்பார்களோ? தேடி வந்தவர்கள்அவர்களுக்கு ஏதாவது செய்தார்களோ என்ற அச்சம் எனக்குள்மிகுந்த பயத்தை ஊட்டியது. ஆயினும் இவ்வளவு தூரம்ஓடி வந்த பின்னரும், வெடிகுண்டுகளோ துப்பாக்கிக்குண்டுகளோ வெடிக்கிற சத்தம் கேட்காததால் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. கொஞ்சம் நிதானமாக யோசிக்கவும் முடிந்தது. வந்து நிற்கிற வாகனங்கள் என்னைத் தேடி வந்தனவா அல்லது எதேச்சையாக அங்கு நிறுத்தப்பட்டனவா என்பதைக்கூட தெரிந்து கொள்ள முடியாமல் நான் ஓடியிருக்கத் தேவையில்லையே... இவ்வளவு தூரம் ஓடிவந்து விட்டேனே என்று என்னையிட்டு வெட்கமாகவும் இருந்தது. திரும்பிப் போகலாம் என்று நினைத்துக்கொண்டு மெல்ல மெல்ல வீட்டுப் பக்கமாகத் திரும்பி நடந்தேன். மழை விட்டிருந்தது. நனைந்திருந்த சாரம் இடுப்பில் கிடந்து குளிரூட்டிக் கொண்டிருந்த போதும் நெஞ்சிற்குள் பயம் முற்றாக நீங்கி விட்டதாகத் தெரியவில்லை.

தம்பியும் அப்பாவும் நானுமாக கோவிலுக்கு ஓடிய பழைய ஞாபகம் வந்தது. ஆமிக்காரர் அன்று வீசிய குண்டில் எங்கள் வீட்டின் பகுதி இடிந்து விழுந்திருந்தும் அப்பாவின் றலி சைக்கிள் நெளிந்திருந்ததும் ஞாபகம் வந்தது. இராணுவத்தின் அன்றைய அட்டகாசம் தொடராமல் தடுத்த இந்தியாவின் சாப்பாட்டுப் பார்சல் போடுகையும் நினைவுக்கு வந்தது. விழுந்த பார்சலிலிருந்த பாணில் ஒரு சின்னத்துண்டு தனக்கும் கிடைத்ததென்று தம்பி கொண்டு ஓடிவந்தான். இந்தியா சரியான நேரத்தில் இவங்களை வெருட்டியிருக்கிறது என்று வாயெல்லாம் பல்லாக தம்பி பாண்துண்டுடன் வந்த போது சொன்னான். அப்பா பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு நடந்ததை நம்பமுடியாமல் இருந்திருக்க வேணும். தம்பி மிகவும் சந்தோஷமாக இருந்தான். நல்ல வேலை செய்திருக்குது இந்தியா எண்டு சந்தோஷப்பட்டான்.

எனக்கு சந்தோஷப்பட முடியவில்லை. இந்தியாவின் இந்தச் செயலில் ஒரு வகை அத்துமீறல் இருப்பதாகப் பட்டது. நான் அதைத் தம்பிக்கும் சொன்னேன். அவன் என்னோட சண்டை பிடித்தான். எதுக்கெடுத்தாலும் சந்தேகப்படுகிற அரசியல் என்னுடையது என்று அவன்என்னை ஏசினான். இதோட இலங்கை ஒரு முடிவுக்கு வரும் என்று நம்பிக்கையுடன் பேசினான். அப்பாவின்முகத்தில்எந்தக்கலவரமும்இருக்கவில்லை. அவர் தனது உடைந்து போன சைக்கிளை எப்படி திரும்பவும்திருத்துவது என்று முயன்று கொண்டிருந்தார்.

பிறகு இந்தியப்படை வந்தது. ஒரு கதைபோல கொஞ்சநாள் எல்லோரும் சந்தோஷமாகச்சிரித்தார்கள். நானும்கூட தடுமாறித்தான் போனேன். இந்தியா வந்தது எங்களுக்கு நல்லதோ என்றும் ஐயுறவுப்பட்டேன். ஆனால் அது கனவு போல போயிற்று. சண்டை தொடங்கியது. தம்பி முன்பை விட இப்போது அதிகமாய்ப் பயந்தான். அப்பா ஒரு பெருமூச்சுடன்ஒவ்வொருநாளும் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருந்தார். எங்களுக்கு ஒரு நாளும் விடிவில்லை என்று அவர் யாராவது தனது சகாக்களுடன் பேசும்போது சொல்லிக் கொண்டார். இராணுவம் ஒரு பக்கம், இயக்கங்கள் ஒருபக்கமாக இருபுறத்தாலும் பொதுமக்கள் இம்சைப்படுத்தப்படுகினம் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

எனக்கு எரிச்சலும் கோபமும் கையாலாகாத்தனத்தின் காரணமாக எழுகின்ற வெப்பியாரமும்அடிக்கடி வரும். காரணமில்லாமல் ஆத்திரம் வந்தது. திடீரென நெஞ்சு கனத்து அழவேணும் போல இருந்தது. எந்த நிமிடமும் அச்சமும்என்ன நடக்குமோ என்ற பயமும் முன்பைவிட அதிகமாகி விட்டது. தம்பியும் அப்பாவும் நானுமாக திரும்பவும் பங்கரை பழுது பார்த்து வைத்தோம். ஷெல்லடிகளுக்கும், குண்டுவீச்சுகளுக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியதாக இம்முறை தென்னங்குற்றிகளை அடுக்கி வைத்து கொஞ்சம் பலமானதாக சரிசெய்தோம்.

அதிகாலை நாலரை, ஐந்துமணிக்கெல்லாம் அப்பா எழுந்து விளக்கு ஏற்றிவிட்டு தேவாரம் படிக்கத் தொடங்கினார். அவருக்கு அப்படிச் செய்வது மனதுக்கு நிம்மதியாகஇருந்திருக்க வேணும். எங்கிருந்தெல்லாமோ திருமுறைப்புத்தகங்கள் வாங்கி வந்து பாராயணம் செய்தார். தம்பி ஒவ்வொரு நாள் ஒவ்வொரு செய்தியுடன் வருவான். நான் வீட்டை விட்டு வெளிக்கிடக் கூடாது என்று உத்தரவு போட்டான். இரகசியமாக பலர் கொல்லப்பட்டதாக கேள்விப்பட்ட கதைகளை அவன் சொன்னான்.

வீட்டுக்கு கிட்ட வந்திருந்தேன். வீட்டினுள் விறாந்தையில் கம்பியில் லாம்பு வெளிச்சம் தூரத்தே தெரிந்தது. வந்த வாகனங்கள் போய்விட்டனவா இல்லையா என்பது கூடப்புரியவில்லை. அடிமேல்அடி எடுத்து வைத்து நான் வீட்டுப் பக்கமாக நடந்தேன். யாரும் நிற்பதாகவோ, பேசுவதாகவோ தெரியவில்லை. வாகனங்கள் நிற்பதற்கான அடையாளமும் தெரியவில்லை. கும்மிருட்டு போன்று கண்ணால் ஊடறுத்துப் பார்க்க முடியவில்லை.

பிய்ந்த வேலியைக் கடந்து காலை எடுத்து உள்புறமாக வைத்தேன். வீட்டை நோக்கியே போய்விட வேண்டியது தான். வீட்டில யாரும் இல்லை...

திடீரென்று அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒரு தடித்த குரல்அலறியது - என்காதுக்கு அருகாக.

'ஹோல்ட்'

வெலவெலத்துப் போய் தடுமாறி தொப்பென்று விழுந்தேன்நான்.

கைகளைப்பிடித்து தூக்கி நிறுத்தினார்கள் இரண்டு ஜவான்கள்.

தங்களுக்குள் ஹிந்தியில் பேசியபடி என்னை ஏதோ கேட்டு அதட்டினார்கள்.

எதுவும்புரியாமல் விழித்தேன்.

சத்தம்கேட்டு என்னைப்பிடித்த இடத்தைநோக்கி இன்னும் இரண்டு ஜவான்கள் ஓடி வந்தார்கள். எனக்கு பளிச்சென்று எல்லாம் விளங்கினது போல் இருந்தது. இவர்கள் வீட்டைச் சுற்றிவளைத்துப் படுத்திருந்திருக்கிறார்கள். ஆனால்ஏன்? எதற்காக?

நான் இது எனது வீடு என்று சொன்னேன். அவர்கள் தொடர்ந்தும் ஏதோ கூறி அதட்டினார்கள். ஒருவன் துவக்கினால் இடிப்பதுபோல் என்னை நோக்கி ஓங்கினான்.

எனது வீட்டிலிருந்து லாம்பு வெளிச்சத்துடன் அப்பா என்னைநோக்கி வந்தார். அவருடன்கூட இரு ஜவான்கள் வந்தார்கள். என்னை தனது மகன் என அவர் கண்கலங்க விளங்கப்படுத்தினார்.

எனக்கும் அழுகையாக வந்தது. அவர் எனது தகப்பனார் என்று சொன்னேன் ஆங்கிலத்தில். அதைப்புரிந்து கொண்டு என்னை அவர்கள் விட்டார்கள். நான் அப்பாவுடன் வீட்டுக்குப்போனேன். வீட்டு முற்றத்திலும் விறாந்தையிலும் பல ஜவான்கள் நின்றிருந்தார்கள்.

எனக்கு எதுவும் புரியாமல் தலையைச் சுற்றியது!

அவங்கள் இங்கே காம்ப் போடப்போறாங்களாம் என்று அப்பா விம்மியபடி சொன்னார்.

'தம்பி எங்கே' என்றேன் நான்.

அவர் வாசல் புறமாக கையைக்காட்டினார். அரைகுறை ஆங்கிலத்தில் பேசியபடி தம்பி ஒரு இராணுவத்தானுடன் உள்ளே வந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் 'பிறதர்' என்று சொல்லி அறிமுகப்படுத்தினான். இராணுவத்தான் என்னைக் கூர்ந்து கவனித்து விட்டு 'ஓகே...' என்று தலையாட்டினான்.

எதுவும் புரியாமல் நான் தம்பியைப் பார்த்தேன். 'என்ன செய்யிறது காம்ப் போடப் போறாங்களாம்... ஒண்டும் செய்யேலாது. பேசாமல் இருக்க வேண்டியதுதான்' என்றான் அவன்.

'அப்ப நாங்கள்...' என்றேன் நான்.

'எங்களையும் இருக்கட்டாம், தாங்கள் ரென்ற் அடிச்சு இருப்பாங்களாம்.'' என்ற தம்பியின் முகமும் இருண்டு போய் இருந்தது.

பிறகு இருவாரங்கள் அவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று பேராக இறைச்சிக்கு கிடாய்க் குட்டிகளை இழுத்து வருவது போல பெடியங்களை இழுத்துவந்தார்கள். துவக்கின் பின்புறத்தாலும் பிளாஸ்டிக் வயர்களாலும் அவர்களை அடித்தார்கள்.

இரவுகள் எல்லாம் அமைதியைக் கிழித்துக் கொண்டு அவலமாக அந்தப் பெடியன்கள் அலறும் ஒலியை கேட்டபடி நாங்கள் அழுதபடி வீட்டுக்குள்ளேயே படுத்துக் கிடந்தோம்...

O

மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. முன் வீட்டில் எரிந்து கொண்டிருந்த வெளிச்சம் நின்றுவிட்டது. விளக்கை அணைத்துவிட்டு அவர்கள் படுத்திருக்கக்கூடும். நேரம் உத்தேசமாக என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். ஊகிக்க முடியவில்லை. பத்துமணியாக இருக்கலாம் என்று தோன்றியது.

முன்வீட்டு வெளிச்சமும் நின்றபின் எல்லாமே இருள்மயமாக, கறுப்புநிறம் தீட்டப்பட்ட பொருட்களாக மாறிவிட்டதுபோல தோன்றியது. உள்ளே போய் படுக்கலாம் என்று ஒரு கணம் தோன்றியது. ஆனாலும் இந்த மழையின் இசையை விட்டு போக முடியாமல் ஜன்னல் கம்பிகளில் முகத்தைத் தேய்த்தபடி அதை ரசித்துக்கொண்டிருந்தேன். ஒருகணம் திடீரென்று முழுதாக இருண்டு போய்விட்ட உலகத்துள் தனித்துப் போன ஒருவனாய் நான் உணர்ந்தேன். வேறு எந்த உறவுகளும் அற்ற வெறும் தனியனாய் சமுத்திரத்தின் மடியில் வீசப்பட்டுவிட்ட ஒரு கல்லைப்போல அமிழ்ந்து போய்விட்டதாய் தோன்றியது. நான்இப்படி ஓடி வந்தது ஏன் என்று இன்னமும் ஏன் எனக்குப் பிடிபடவில்லை என்று தோன்றியது.

இந்தியப்படையிடம் பிடிபட்டுக் கொல்லப்பட்ட பாலன், கனடாவுக்கு ஓடிப்போன ரகு... ஓடிப்போகும் முன்பாக கண்களில் கண்ணீர் வடிந்தோட விம்மி விம்மி அவன் நெஞ்சு வெடித்து விடுமாற்போல் அழுத அழுகை... தன்னிடம்கடைசியாக எஞ்சிப்போயிருந்த புத்தகங்களையெல்லாம் மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்திவிட்டு வந்ததாக அவன் துடித்துப் போய் சொன்ன விதம்..., இந்தியாவுக்குப் போய் யூ.பி.ரெயினிங் எடுத்துவிட்டு வந்ததாக கொஞ்சநாள் சொல்லிப் பெருமையடித்துத் திரிந்த சிவா என்ன நடந்ததென்றே தெரியாமல் காணாமலே போய்விட்டது எல்லாம் மனதிலே படமாக எழுந்தன. தேசத்துக்கு துரோகம் செய்தவர்களின் நீண்டு போன பட்டியலில் நானுமோ என்று பயந்த அப்பாவும் தம்பியும் என்னை ஓடிப்போகுமாறு விரட்டியது...

திடீரென அடித்த சூறாவளியில் தூக்கி வீசப்பட்ட ஒற்றைப் படகு போல திகைத்துப்போய் இருந்த எனக்கு ஓடிப்போவதைப்பற்றி எந்த முடிவும் எடுக்கமுடியாமல் தவித்தது... நான் என்னத்தைத்தான் நினைத்துச் செய்தேன்? யார் யாரோ நினைக்கிறார்கள்... நான் இழுபட்டேன். அடிக்கிற அலையில் அள்ளுப்பட்டுப் போனவனாக என் விருப்பம் எதுவுமின்றி வந்து சேர்ந்தேன்.

குறிக்கோள் எதுவுமற்ற, நாளாந்த வாழ்வே குறிக்கோளாக குறுகிப்போன வாழ்க்கைக்குள் வலிந்து திணிக்கப்பட்டுவிட்டவனாக...

செத்துப்போனவர்கள் பாக்கியசாலிகள் என்று ஒருகணம் தோன்றியது. அவர்கள் நம்பிக்கையுடன் செத்துப் போனார்கள். சாவு அவர்களுக்கு அளித்திருக்கக்கூடிய சந்தோசத்தை எனக்கு இந்த வாழ்வு தந்ததா?

மழை பலமாகப்பொழியத் தொடங்கியது. காற்றும் திசை கெட்டு சுழற்றியது. ஜன்னலினூடாக மொத்தமான துளிகள் முகத்தில் அறைந்தன. ஜன்னல் கதவை சாத்தி மூடினேன். வீட்டுக்கு மேல் பொழிகின்ற மழை இரைச்சலாய் ஒலித்தது. ஒரு சிகரட்டை பற்ற வைக்கலாமா, அல்லது பேசாமல் படுத்துவிடலாமா என்று முடிவெடுக்க முடியாமல் கதிரையில் அப்படியே இருந்தேன். சாரத்தை உயர்த்தி முகத்தில் பட்ட மழைத்துளிகளை ஒற்றினேன்...

மழைவிட்டபாடாக இல்லை.

அது தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பெண் புலிகளும்...

அர்த்தநாரீஸ்வரக் கோட்பாட்டிலிருந்து தோற்றம் பெற்ற ஆண்பாதி, பெண்பாதி நிலையை எதிர்த்தே வந்துள்ளன. பெண்கள் எப்போதுமே பெண்மை அடையாளங்களை அழிப்பதற்காக/ இல்லாமலாக்குவதற்காகப் போராடவில்லை. அதன் அங்கீகாரத்திற்காகவும், செயற்பாட்டுக்காகவுமே போராடுகிறார்கள். ஆண் புலிகள் எப்போது பெண்மைக் குணாம்சங்களான சாந்தம், இரக்கம், சகிப்புத்தன்மை போன்றவைகளை மதித்து அங்கீகரிக்கிறார்களோ அப்போதுதான் உண்மையான விடுதலை கிடைக்கும் என்று கூட ஒருவர் வாதாடலாம்.

மூன்றாவதாக, புலிப்பெண்கள் சுதந்திரம் பெற்றவர்கள், விடுதலை பெற்றவர்கள் என்ற வர்ணிப்பு. இது வெறும் வர்ணிப்பேதான். பெண்களின் அதிகாரம் பற்றி அவர்கள் கூறுகையில் அவர்களுக்கு அதிகாரம் வழங்குதல், அவர்களுக்கிருக்கும் 'சக்தி' பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்கமாட்டார்கள். மொத்தத்தில், தன்னிலை உணர்ந்து தனக்கான தீர்மானங்களை தானே எடுக்கிற ஒரு சுதந்திரப் பெண் பற்றிய அக்கறை அவர்களிடமில்லை. தேசியவாதத் திட்டங்களோடு / நடைமுறைகளோடு ஒத்துப்போகிற அவளது 'விடுதலை'யையே அவர்கள் ஏற்பார்கள். முடிவெடுக்கும் அதிகாரங்களை பெண்ணுக்கு வழங்குவது தொடர்பாக எந்தக் கரிசனையும் அவர்களிடம் இல்லை. குமாரி ஜெயவர்த்தன உட்பட பல ஆய்வாளர்கள் எவ்வாறு தேசியவாத இயக்கங்கள் தங்கள் தேசியவாத நலன் சார்ந்து 'பெண் விடுதலையை' திட்டமிட்டன என்பதை விரிவாக எழுதியுள்ளனர். சர்வதேசிய பெண்கள் அமைப்பு தேசியவாதத்திற்கும் மேலாக சமூக நீதி, சுயத்துவம், அரசியல் தனித்துவத்திற்கு முக்கியத்துவமளிக்கிறது. இதனால் இதனிடம் புலிகள் அமைப்பு அங்கீகாரம் பெற்றதாக இல்லை. முடிவெடுக்கும் அதிகாரங்களை பெண்களுக்கு வழங்குதல். அரசியல் சமூக கட்டமைப்பைத் தீர்மானித்தல், ஆண் அதிகாரத்திலிருந்து சுதந்திரமாக இயங்குதல் போன்றவை புலிகளின் பெண்கள் தொடர்பான கொள்கையில் ஏற்றுக்கொள்ளப்படாதவையே. மேலும், யுத்தத்துக்கு எதிராகச் சமாதானத்தைப் பேணுவது, எல்லாப் பண்பாடுகளையும் ஊடறுத்துப் பெண் என்ற தளத்தில் ஒருமைப்பாட்டைப் பேணுவது போன்ற உலகு தழுவிய இலட்சியங்கள் பெண்கள் இயக்கத்தின் முக்கிய அம்சமாகும். இது தேசியவாதங்களை உள்ளிருந்தே சிதைக்கும் என்பதால் விடுதலைப் புலிகளின் பெண்கள் சமத்துவம் என்ற எண்ணத்துக்கு முரண்பாடானதாகவே இருக்க நேரிடுகிறது.

இறுதியாக, ஆயுதம் ஏந்திய பெண்கள் பற்றிய கருத்தியல் மூலம் தூய்மைவாத, கற்புடைமை விம்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த இரண்டு நிலைமைகளுக்காகவும் பாரிய அழுத்தங்கள் செலுத்தப்படுகின்றன. புலிப்பெண்கள் எல்லோரும் ஒரே இலட்சியத்துடன், ஒன்றிணைந்த ஓர் குழுவாய் போராடுபவர்கள் என மகுடம் சூட்டப்பட்டிருக்கிறார்கள். கூடல், கலவி, சமூகக்கலப்பெல்லாம் தடைசெய்யப்பட்ட குற்றங்களாகக் கணிக்கப்படுகின்றன. பெண்கள் கற்புக்கரசிகளாகவும், தூய்மையானவர்களாகவுமே வர்ணிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய கற்புடைமை, அவர்களது இலட்சிய ஒன்றிணைவு, அவர்களது சமூக வாழ்வின் தியாகம் - இவையெல்லாம் அவர்களுக்கு உறுதியையும், உந்துதலையும் வழங்குவதாகக் கருதப்படுகிறது. அவர்களது உள, உடல் உணர்வுகளெல்லாம் மறுக்கப்பட்டே வருகிறது. மானுட ஜென்மங்களாக அன்றாட சமூகக் கலப்பில் ஈடுபடுவது மறுக்கப்படுவது என்பது தேசியவாதக்கின் அடிப்படைப் பண்புகளின் ஒன்றாகும். இதில் புலிகள் விதிவிலக்குப் பெற்றவர்கள் என்று கூற முடியாது. தடை செய்யப்பட்ட காரணத்தால் ஆயுதந் தரித்த பெண்கள் தங்கள் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். பெண் இவ்வாறு இருப்பதானது சமூக உருவாக்கத்தின் ஒரு பகுதியாக புலிகளால் கொள்ளப்படுகிறது. இதனையே பெண்களும் தங்கள் கற்பொழுக்கத்தின் மூலம் உறுதிசெய்து வருகிறார்கள். பன்மைப்பாடு, பண்பாட்டுக் கலப்பு போன்றவற்றின் அடியாக மேலெழும் பல்லினப் பண்பாட்டில் பெரிதும் மதிப்பு வைத்திருக்கும் எம் போன்றோருக்கும் புலிகளின் ஒற்றைப் பண்பாட்டு வாதம் மிகவும் பிரச்சினையானதாகும். இந்த ஒன்றைப் பண்பாட்டு வாதம் தான் ஆயுதம் தாங்கிய புலிப் பெண்களின் வாழ்க்கையையும் காலத்தையும் கட்டுப்படுத்துகிற ஒன்றாகும்.

முடிவாக, நாம் இவ்வாறுதான சொல்ல வேண்டியிருக்கிறது. பெண்களை வீட்டிலிருந்து வெளியேற்றி, அவர்களுக்கு ஆயுதம் வழங்கி, அனேகமாய் ஆண்கள் செய்கின்ற விடயங்களை அவர்களைச் செய்வித்து பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டதென்ற கருத்தினை முன்வைத்து வருகின்றனர் புலிகள். இதன் மூலம் எங்களை பெண்ணிய அடிப்படைப் பெறுமானங்கள் பற்றி பேசவும், எழுதவுமான நிர்ப்பந்தங்களை அவர்கள் ஏற்படுத்தி வருகின்றனர். பெண்ணியம் மானுடப் பெறுமானங்களை மதிக்கிறது. அது மனிதாபிமானது, வன்முறையற்றது, மரணத்தை விட வாழ்வின் மீதான அக்கறையை அதிகம் கொண்டது. இவற்றையெல்லாம் தவிர்த்து விட்ட பெண்ணியத்தால் நாம் தேடுகின்ற சமூக மாற்றுக்களை வழங்கமுடியாது. பெண்ணியவாதி மனிதாபிமான அடிப்படையில் அமைந்த சட்டங்களை ஏற்று நடக்கிறார்; பின்பற்றுகிறார். அதல்லாதவை அடித்தளங்களை இழக்கச்செய்து, சமத்துவம் பற்றிய பல்வேறு கதைகளை கதைக்க வேண்டிய நிலைக்கு ஈடுபடச் செய்கிறது.

எனது இந்த உரையை சில வருடங்களுக்கு முன் கொடூரமாகக் கொல்லப்பட்ட ராஜினி திராணகமவின் வாழ்வை நினைவு கூர்வதன் மூலம் முடிக்கலாம் என நினைக்கிறேன். அவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களவர் ஒருவரை மணமுடித்த தமிழர். ஆயுதம் ஏந்திய நான்கு குழுக்களுக்கு (IPKF, LTTE, EPRLF இலங்கை இராணுவம்) எதிராக அவர்களது எதேச்சதிகாரங்களுக்கு எதிராகப் போராடியவர். முறிந்த பனையின் மனிதாபிமான மீளுயிர்ப்புக்காக வேண்டி அனைத்து வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகளுக்கெதிராய் போராடியவர்.

---

ராஜினி திராணகமவின் நினைவு தினத்தன்று கலாநிதி ராதிகா குமாரசுவாமியினால் நிகழ்த்தப்பட்ட இந்த உரையை Pravada சஞ்சிகை வெளியிட்டிருந்தது. இதன் மறுபிரசுரம் அண்மைய Front Line இதழிலும் லண்டனிலிருந்து வெளிவரும் Tamil Timesலும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரை பற்றி வந்துள்ள எதிர்வினைகள் அடுத்த இதழில் இடம் பெறும்.

*விக்கித்தழுகவே பாவங்கள் சுமையாகின.*
*நெஞ்சழுத்த,*
*இம்மனிதரிடை வேண்டாமென வாழ்வு*
*ஓரமாய் ஒதுங்கி நின்றது.*
*மௌனமாகிப் போனேன்.*
*மனிதர் பகைவரென*
*எட்டாத்தொலைவெங்கும்*
*சென்றுமறையும் கணம் வரைக்கும்*
*எனக்கான நானாகி நின்றேன் தான்*
*சொற்பம்.*

*பின்னவும், சில கணங்கள் போய்,*
*மீளமுடியா வாழ்விதுவென ஜபிக்கப்பட்டு*
*கரைபடிய வந்து வீழ்ந்தேன்*
*எல்லாமாகி நின்ற இம்மனிதரிடை!*

*தப்பித்த கணங்களில், சொர்க்கமது எனக்காய்த்தெரிய*
*இன்னுமொரு நரகிலேன்*
*புறமொதுங்கினேன்?*

*விஷம் தோய்த்த அம்பேகி*
*மனம் கிழிய*
*வழிந்தனவெங்கும் நானான எல்லாம்.*
*ரத்தம் குடித்து களித்திளைப்பாறி*
*மனிதர் தாமாயினர்..*
*குறுகி உள்ளொளிந்து*
*நான் இல்லத்துப் போனேன்.*

*வாழ்விது வென வளம் கொழிக்கும்*
*இவ் அவசர உலகின் மனிதரிடை*
*எனதான வாழ்வு எங்குமேயற்றது.*

*எதிலினி நான் வாழ்தல் கூடும்?*


*மோகிக்கும் கனவுதருகிற அவள்களிலெல்லாம்*
*உள்ளூர்ந்து திளைக்கிற*
*வாழ்வெனதா?*

*மனிதரைத் தின்று ஏப்பம் விடுகிற*
*உலகிடைதான் எனது வாழ்வா?*

*எவள்களிலோ இழந்து நிற்கிற*
*கணங்களில் எனக்கான எல்லோரும்*
*தூரப்போகிற துரோகங்களதா*
*எனது வாழ்வும்...!*

*எதிலினி நான் வாழ்தல் கூடும்..?*

*மனிதரான மனிதரிடை*
*எனக்கான நானாக*
*வாழ்தலினிக் கூடுமோ!?*



## ஏறு வெயிலும்...

வதாலுமே இநதத தன்மை அதிகரிக்கிறது. இது மஜீதுக்கு மட்டுமுள்ள பலஹீனமல்ல. கிழக்கு மாகாணத்தில் இவர் போல் இன்னும் பலபேர் சோலைக்கிளி சாயலில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு வகையான பிரதி பண்ணல் போல் இக்கவிதை முயற்சி தொடர்கிறது. இன்னும் பல தொகுதிகள் அங்கிருந்து வெளிவரும் போது இவ்வுண்மை இன்னும் தெளிவடையும். இது சோலைக்கிளியின் கவிதைத் தன்மையின் ஒரு மோசமான விளைவு. கிழக்கு மாகாணக் கவிதைகளை ஒரு தேக்க நிலையில் வைத்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஏற்கெனவே வெளிவந்த மருதமுனை டீன் கபூரின் குரோட்டன் அழகி என்ற தொகுப்பும் இத்தகைய இன்னொன்றே. ஆனால் மஜீதின் தொகுப்பாயினும் சரியே, டீன் கபூரின் தொகுப்பாயினும் சரியே சோலைக்கிளியின் சாயலில் தென்பட்டாலும் சோலைக்கிளியின் கவிதைகளின் ஆத்மாவில் துடிக்கும் உணர்வு இவர்களின் கவிதைகளில் இல்லை. இவர்களின் பல கவிதைகளில் ஆத்மாவே இல்லை. இவற்றின் ஆத்மாவைத் தேடிச் செல்லும் பயணத்தில் வாசகன் தொலைந்து போய்விட்டான். இதுதான் மு.பொ கேட்ட ஒரு கேள்விக்கான விடை. அதாவது அசலுக்கும் நகலுக்கும் இடையிலான வேறுபாடு.

இவ்வாறு நான் கூறுவதன் மூலம் மஜீத் சோலைக்கிளியை காப்பியடிக்கிறான் என்று சொல்லவரவில்லை. இது மஜீதுக்குத் தெரியாமலே நடைபெற்று வந்திருக்கும் உள்மாற்றம். உண்மையில் மஜீத் தன்னை சுய விமர்சனத்துக்குட்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கியமான கட்டம் இதுதான். சில கவிதைகள் அறவே என்று சொல்ல முடியாவிட்டாலும் கணிசமானளவு சோலைக்கிளியிலிருந்து விடுபட்டவையாகவும் காணப்படுகின்றன. ஆனால், அவை யாவையும் மஜீதின் கவிதைகள் என்று தம்மை தனித்துவத்தோடு அடையாளப்படுத்துகின்றனவா என்று பார்த்தால் நமக்கு ஏமாற்றமே மிஞ்சுகின்றது. இத்தகைய கவிதைகளிலொன்று ''அகதியாய்ப் போகிறேன்'' என்ற தலைப்பிலான கவிதை. இது சண்முகம் சிவலிங்கத்தின் ''நீர் வளையங்கள்'' தொகுப்பிலுள்ள 'பிரியாவிடை' என்ற கவிதையை மீள எழுதியது போல் உள்ளது. 'இப்பவும் இப்படியும்' என்ற கவிதை வாசுதேவனை ஞாபகப்படுத்துகின்றது. இவ்வாறு இன்னும் பல. இந்த வகையில் பார்க்கும் போது இந்தத் தொகுப்பு ஒரு கலவை போலத் தென்படுகின்றது. பல கவிஞர்களின் முகங்களையும் அணிந்தபடி மஜீத் இதனூடு தெரிகிறார். இது மஜீதிற்கு ஆரோக்கியமானதல்ல.

நவீன கவிதை பற்றிய கருத்தியல் 90களின் கவிஞர்களிடையே ஒருமித்ததாக இருந்தபோதும் அவர்களின் உணர்வியக்க வெளிப்பாட்டின் வேறுபாட்டின் மூலமாக அவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்களாகத் திகழ்வது மஜீதுக்கும் புரியக்கூடிய ஒன்றே. இத்தகைய தனித்துவத்தை மஜீத் எய்துவதன் மூலமாகவே தமிழின் முக்கிய கவிஞர்களுள் ஒருவராக இடம்பெற முடியும். அத்தகைய நிலைக்கு வருவதற்கு இத்தகைய பாதிப்புகளில் இருந்து மஜீத் தன்னை முற்றாக விடுவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மஜீதைப்பொறுத்தவரையில் இந்தத் தொகுப்பு நம்பிக்கை தருவது தருவது. அளப்பரிய மாற்றத்தைக் காண்பிப்பது. இப்படி நம்பிக்கை கூடிய ஏராளமான நட்சத்திரங்கள் விழுந்து நொழுங்கி இருக்கின்றன. எனினும் இதன் தொடர்ச்சியால அல்லாமல் இன்னொரு புதிய புள்ளியிலிருந்து ஆரம்பிப்பதன் மூலமாக மஜீத் தமிழின் தவிர்க்க இயலாத ஒரு கவிஞராகப் பரிணமிர்க்க வேண்டும். இன்னொரு கவிஞரின் கவிதையொன்றைப் படித்து விட்டு அதேபோல் தானும் ஒன்றைச் சரிக்கட்ட முயற்சிப்பதைக் கைவிட வேண்டும். மஜீதின் கவிதைகளிலிருக்கும் சொல் இருண்மை, காட்சியிருண்மை வாசகனை உள்நுழைய விடாமல் தடை செய்கிறது. இவை பின்னர் நீங்கிவிடும். இவை போன்ற சிறு குறைபாடுகளை அதிகம் விமர்சிக்க வேண்டியதில்லை. ஏனெனில் சில வேளைகளில் இவையே கவிஞனின் தனித்துவங்களாகவும் பலங்களாகவும் ஆகிவிடுவதுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விடுதலைப் புலிகளிடம் சில கேள்விகள்!

தற்போதைய சூழலில் சரிநிகரை விட்டால், ஒரு மாற்றுப் பத்திரிகை இல்லை என்ற அளவிற்கு, நமது நாட்டின் பத்திரிகை குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளின் தரம் குன்றிவிட்டது. அரசியல்வாதிகளின் உதிரிக்கருத்துக்களை ஆகாஓகோவென்று எழுதிக் கிழிக்கும் சத்திய(?) எழுத்தாளர்களுக்கு, ''கலாநிதி'' பட்டங்களும் கிடைக்கின்றன. அரசாங்கத்தை கண்மூடித்தனமாய் துதிபாடும் இவர்களுக்கு கல்லா-நிதி விருது ஒன்றுதான் குறைச்சல். போகிற போக்கில் லேக்ஹவுஸின் பூனைகளுக்கும் ''கலாநிதி'' விருது கிடைத்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைத் தான்.

புலிகள் அண்மைக் காலமாய் தமிழ் முஸ்லிம் உறவில் அக்கறைப்படுவதாக அறிக்கைகள் விடுகின்றனர். அந்த அறிக்கைகளை பத்திரிகைகளும் தூக்கிப் பிடித்து பிரசுரித்தும் வருகின்றன. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம், முஸ்லிம்களுடன் சுமுகமான உறவு கொண்டாட அவாக்கொண்டுள்ள வேங்கைகள் அதை அறிக்கைகளில் மட்டும்தான் பேணுவார்கள் போல் தெரிகிறது. ஒருபக்கம், இணக்கமான உறவுக்கான அழைப்பு. மறுபக்கம் முஸ்லிம் மக்களின் வயிற்றிலே அடி. அறிக்கைகள் விடுவதனால் நமது அரசாங்க எம். பீக்களை விஞ்சி விடலாம் என வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதைப் போற்படுகிறது.

தமிழ் - முஸ்லிம் உறவில் கரிசனை கொள்ளும் விடுதலைப் புலிகள் எதற்காக வாழைச்சேனை கடலில் முஸ்லிம் மீனவர்களை கடத்த வேண்டும்? ஏன் கப்பம் என்ற பெயரில் பிச்சை கேட்ட வேண்டும்? அப்பாவி ஏழை முஸ்லிம்களின் மாட்டு வண்டில்களை ஏன் பறித்து தகாத வார்த்தைகளால் தூஷித்து அனுப்ப வேண்டும்.

இதய சுத்தியுடன் முஸ்லிம் மக்களுடன் இவர்கள் வாழ விரும்பினால் அதை அறிக்கைகளில் காட்டத் தேவையில்லை. தங்கள் நடத்தைகளால் நிரூபிக்கட்டும். அதுவரை நாங்கள் யாரையும் நம்பி ஏமாறப் போவதில்லை. பச்சையாக கூறப்போனால் புலிகள் அல்லது பெரும்பாலான தமிழ் - சிங்கள மக்களோ நினைப்பது போல், அஷ்ரஃப், எங்கள் ''இரட்சக''ரும் அல்ல. அஷ்ரஃப் ஹாஜியாரில் நாம் நம்பிக்கை இழந்துபல நாளாயிற்று. அலரி மாளிகையின் ஒட்டுண்ணிகள் யாராய் இருந்தாலென்ன அவர்கள் எங்கள் வாக்குகளால் வயிறு வளர்க்கும் ''கோட் அணிந்து டைகட்டி'' காரில் பயணிக்கும் கௌரவப்பிச்சைக்காரர்களே.

இவர்களுடைய வெற்று முழக்கங்கள் பறைமேளம்தான். வேதாந்தம் பேசிக் கொண்டு அப்பாவிகளை ஏய்த்து பிழைத்துக் கண்டது என்ன? இப்போது புதிதாக முஸ்லிம் காங்கிரஸில் அதிருப்தி கொண்டு ''முஸ்லிம் கட்சி'' உருவாகி வருகிறது. இப்படித்தான் ஆரம்பத்தில் கொள்கை முழக்கங்கள், சர்வதேசியம், தேசியம். போதாக்குறைக்கு குர்ஆனியம் என பிதற்றியது முஸ்லிம்காங்கிரஸ். அந்தத்தாய்க்குதப்பாமல் பிறந்து விட்டேன் என நிரூபித்துள்ளது ''முஸ்லிம் கட்சி''. சரி, நடப்பதைத்தான் பார்ப்போமே.

ஆம், நாங்கள் யாரையும் நம்பவில்லை. அரசியல்வாதிகளே கொள்ளைக்காரர்கள். அதுவும் இந்த முஸ்லிம் பெயர் தாங்கிகள் குர்ஆனை தூக்கிப் பிடித்தபடி தமது சாக்கடையை புனிதமாக்க நினைக்கிறார்கள். 'ஷைத்தான்கள் வேதம் ஓதுவதை யார்தான் கேட்கப்போகிறார்கள்?

பெரிதாக பதவி பெரிதல்ல, அதைத் தூக்கி வீசுவேன் என தற்போது ஹிஸ்புல்லா பீற்றித் திரிகிறார். இந்தச் சுடலை ஞானம் எப்போது ஏற்பட்டது, யாரை ஏமாற்றப் பார்க்கிறார்?

இவர்களுடைய பகட்டான அறிக்கைகக்குளும், புலிகளின் சமாதான (முஸ்லிம்களுடன்) அறிக்கைக்கும் வித்தியாசம் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. முடிந்தால் அதை அவர்கள் நடத்தைகளால் நிரூபிக்கட்டும்.

ஊர்காவல்படை ஏன் தோற்றம் பெற்றது? அதற்கு யார் தூபமிட்டவர் என்பதைப் புலிகள் மறைக்கப் பார்க்கிறார்களா? வரலாறு தெரியாத குழந்தைத்தனமானவர்களாக அவர்களை நாம் கருதவில்லை. காத்தான்குடி பள்ளியில் காட்டேறிகள் போல், இறைவணக்கம் புரிந்தவர்களை ஈவிரக்கமின்றி சுட்டுக்கொன்றதின் பின்பும், ஏறாவூரில் புகுந்து, பால்குடிச்சிறார்கள் உட்படகர்ப்பிணிகள் வயோதிபர்கள் என்று வெட்டிச்சாய்த்த பின்பும்தானே முஸ்லிம் ஊர்காவல்படை ஒன்று உத்தியோக பூர்வமாய்த்திரட்டப்பட்டது.

புலிகளிடமிருந்து தனது கிராமத்து அப்பாவிகளை காக்க வேண்டுமென்பதுதானே அன்றைய இறுக்கமான சூழலாய் இருந்தது. இவ்வாறு காட்டுமிராண்டித்தனமாய் வெட்டிச்சாய்த்து தமிழ் - முஸ்லிம்களைமோதவிட்டு குளிர்காய்ந்த பின் எந்த இலட்சணத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரை சிறீலங்கா அரசின் கைக்கூலிகள் எனத் தண்டிப்பீர்கள். அதற்கு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை.

அதற்காக முஸ்லிம் ஊர்காவற்படையினரின் காட்டுமிராண்டித் தனத்தை நான் நியாயப்படுத்தவில்லை. அரசபடையுடன் ஒன்றிணைந்து அப்பாவி தமிழ் மக்களை வேட்டையாடிய அவர்களை எமது மார்க்கம் மன்னிக்கப் போவதில்லை. ஆடு நனைகிறதாம் ஓநாய் அழுகிறதாம் என்றதைப் போல் முஸ்லிம் ஊர்காவலரால்தான் எல்லாம் என்பது போல் அறிக்கை விடாமல் இருந்தால் போதும். நீங்கள் முஸ்லிம்கள் விடயத்தில் நேர்மையாய் நடந்திருப்பின் எமக்கெதற்கு ஊர்காவல்படையினர். புலிகள் இழந்து போன நம்பிக்கைகளை முஸ்லிம்களிடம் மீளவும் கட்டி எழுப்ப வேண்டுமெனில், பின்வரும் நிலைப்பாட்டுக்கு வர தங்களைப் பரிசீலிப்பது அவசரத் தேவையாகும்.

- வடக்கு முஸ்லிம்களை, அவர்களின் பாரம்பரிய தாயகத்தில் சுயத்துவமாய்வாழ வழிவிடுங்கள்.
- கொள்ளையடிக்கப்பட்ட அவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு வழி சொல்லுங்கள்.
- கிழக்கு முஸ்லிம்கள் விவசாயம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்துங்கள். கடத்தப்பட்ட வண்டில்கள், ட்றக்டர்கள், இதர வாகனங்களை மீளவும் ஒப்படையுங்கள்.
- கடலிலே அவர்களின் தொழிலுக்கு அச்சுறுத்தலாய் இருப்பதில்லை என்பதை நிரூபியுங்கள்.
- வயிற்றுக்கே கஞ்சி ஊற்ற அல்லல்படும் இவ்வேளை முஸ்லிம் மக்களிடம் வரி கேட்பதையும், கப்பம் பெறுவதையும் நிறுத்துங்கள்.

*ஓட்டமாவடி அறபாத்*

# மலையக வாய்மொழி இலக்கியம்
## — சில குறிப்புகள்

கடந்த சரிநிகர் 106, 107 களில் தொடராக வெளிவந்த லெனின் மதிவாணத்தின் மலையக வாய்மொழி இலக்கியம் நூல் பற்றிய விமர்சனத்தை வாசித்தேன். இது குறித்து சில கருத்துக்கள் கூற வேண்டியது அவசியமாகின்றது.

முதலில் நாட்டார் பாடல் ஆய்வு என்பது வெறுமனே குறுங்குழுவாதமாக இல்லாமல் அது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரங்கமாக திகழ வேண்டும் என்பதுடன் உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களின் விருப்பு, வெறுப்புகள் வரலாறு என்பன பற்றிய தெளிவுடன் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். தவிரவும் இத்தகைய நாட்டாரியலின் பின்னணியில்தான் இன்றைய மக்கள் இலக்கியங்கள் உருவாகின்றன. குறிப்பாக பாரதியின், கோர்க்கியின் படைப்புகள் யாவும் இந்த ஆளுமையின் பின்னணியில் உருவாகியவையே. காலத்தின் மாறுதலுக்கேற்ப இன்று வேறொரு வடிவில் இக்கூட்டு முயற்சி நடைபெறுகின்றது.

இவ்வாறான ஆய்வு முறையொன்று வெளிவர வேண்டிய சூழ்நிலையில் சாரல் நாடனின் நூல் சிற்சில நாட்டார் பாடல்களைப் பெற்று மனம்போனபோக்கில் கதையளந்து கதாபிரசங்கம் செய்வதையே பிரதானமாகக் கொண்டுள்ளது. இவ்வடிப்படையில் நாட்டார் ஆய்வு தொடர்பாக பல அணுகுமுறைகள் காணப்பட்டபோதும் அவற்றில் எந்த அணுகுமுறையையும் தனது ஆய்வுக்கு துணை கொண்டார் என்பதற்கில்லை. எனவே இந்த நூலை ஆய்வு என்று குறிப்பிடுவதே பொருத்தமற்ற ஒன்றாகும். இத்தகைய அடிப்படைகளைக் கொண்டு லெனின் மதிவாணம் புறநிலைப்பட்ட விமர்சனத்தை சமூகவியல் கண்ணோட்டத்தில் முன்வைத்திருக்கிறார். மலையக நகர் நிலைசார்ந்த தொழிலாளர்களிடமும் தொழிலாள வர்க்க அல்லது உதிரி தொழிலாள வர்க்க உணர்வு மேலோங்கியிருப்பதனால், அவர்களிடையேயும் நாட்டார்பாடல்கள் தோன்ற முடியும். எனவே இது குறித்த ஆய்விலும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை லெனின் மதிவானணம் முன்வைப்பதன் மூலம் மலையக நாட்டார் பாடல் தொடர்பான ஆய்வினை ஆழ அகலப்படுத்தியுள்ளார்.

லெனின் மதிவாணத்தின் விமர்சனக் கட்டுரை சற்று நீண்டிருப்பினும் அதனை முழுமையாக பிரசுரித்து ஆரோக்கியமான கருத்து வளர்ச்சிக்கு இடமளித்த சரிநிகருக்கு நன்றி.

*ரெ.சு.ரேணுகாதேவி*
*ஹட்டன*

# தொடர்க!

பேசிப்பயனில்லை என்று பெரும் போர் தொடுத்து ஊதிப்போன நிலையடைந்து விட்டோம் - ஒற்றுமையில்லாத ஓர் இனம் நம் இனம்தான். கற்ற பெருமையெல்லாம் கைகோர்த்து நிற்காததால் கடல்கரைத்த பெருங்காயமாயிற்று. நம் இனக்காயமோ ஆறாத காயமாயிற்று. நாடுகேட்டு வீடு இழந்தோம். படை திரட்டி இன்று பகடையாயிற்றோம்.

எப்படை தோற்கினும் இப்படை வெல்லுமென்றோம். முப்படையும் வந்து அழிக்குமட்டும் கட்டியதெல்லாம் கல்லறை மட்டும்தான் காரியம் ஒன்றும் ஆகவில்லை. வீரியம் பேசி- வெந்து போனோம் - 50 ஆண்டுகால ஏமாற்றத்தால் நொந்து போனோம்.

இன்னமும் புத்தி வரவில்லை. கெட்ட பின்பு தானே ஞானி. அட சுடலை ஞானமாவது சொந்தசனம் அடையவில்லையே-

நம்மைச் சுட்டிக்காட்ட சுதந்திரச் சிந்தனையோடு வந்துள்ளது சரிநிகர்- சரிந்து விடாமல் சாய்ந்து விடாமல் ஓய்ந்து விடாமல் எழுதுங்கள்-

நீ..ண்..ட இடைவெளிக்குப்பின் தரமான ஏடு. எவரையும் தூக்கிஎழுதாமல் - தாக்கியும் எழுதாமல் தாங்கி எழுதுங்கள். எல்லாம் வல்லோன் துணை செய்வான். சிற்றேடுகளையும் போற்றியுள்ளீர்கள். சிங்கள ஏடுகளிலிருந்தும் தந்துவருகிறீர்கள் - வளமோடு முதல்தர மோடு வளர வாழ்த்துகிறேன். தொடர்க; பணி வளர்க.

*அன்புசீவரத்தினம்,*
*கல்முனை*

# இரட்டைக் கலாநிதி!

இதழ் 110இல் மட்டு. பா.உ. பொ. செல்வராசா அவர்களின் அத்துமீறிய இடமாற்றச் செய்கையை இ. புஸ்பவதி அவர்கள் விளக்கமாக எழுதியிருந்தார். மட்டு. மாவட்டத்தின் பிரதான இடமாற்றத் தளபதியாக இருக்கும் பொ. செல்வராசா அவர்களைப் பற்றி நானும் எனது பங்குக்குச் சில வார்த்தைகளைச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

நான் மட்டக்களப்புக் கச்சேரியில் விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகராக 2 வருடங்கள் கடமையாற்றினேன். தனது நண்பன் ஒருவனின் வேண்டுகோளுக்காக பொ. செல்வராசா பா.உ. அவர்கள் எனக்குத் தெரியாமலே மட்டு. கச்சேரியில் இருந்து மன்னார்க் கச்சேரிக்கு திடீரென இடம்மாற்றி வைத்தார்; இவர்களுக்கு இடமாற்ற விசயம் என்பது ஒரு பொழுது போக்கு. நான் இப்போது மட்டக் களப்பில் இருந்து கடல் மார்க்கமாக கற்பிட்டி ஊடாக மன்னார் சென்று பல சிரமங்கட்கு மத்தியில் எனது கடமையைச் செய்து வருகின்றேன். அரசியல் செல்வாக்கு இன்றி மீண்டும் மட்டுநகர் திரும்பி வரமுடியாது திண்டாடுகிறேன்.

கௌரவ பா.உ. பொ. செல்வராசாவைப் பொறுத்த மட்டில் இடமாற்ற விசயமாக அவருக்கு இரட்டைக் கலாநிதிப் பட்டம் கொடுத்தாலும் மிகவும் சரியானதே!

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**
**விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்**
**மன்னார் மாவட்டம்**

# ஈழ மோகத்தை இடைநிறுத்தியது ஏன்?

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சரிநிகர் வாசகன் நான். ஆனால் ஒரு குறித்த காலத்திற்கு பின் சரிநிகரில் வரும் தெளிவான காத்திரமான விடயங்களை ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்ற உணர்வில் சகல கட்டுரைகளிலினதும் அவசியத்தை உணர்ந்து கோவைப்படுத்தி வருகின்றேன்.

சரிநிகரரை ஒரு கட்டத்தில், வாசித்தபோது ஏற்பட்ட உளப்பூரிப்பு பின்னர் தேக்கப்பட்டு 106வது இதழை பார்த்த போது அது பல மடங்குகள் அதிகரித்ததை உணர்ந்தேன். அந்தப்பூரிப்புக்கு உண்மைக் காரணங்களிலொன்று; ஈழமோகத்தின் ''புடைக்கின்ற புஜங்கள்'' கவிதையும்தான் என கோடிட்டுக்காட்ட துணிகின்றேன்.

அரசியலிலும் அரசியல் சார்ந்த விடயங்களிலும் சாத்தான்கள் செய்கின்ற சேட்டைகளை ஈழமோகம் இலக்கியமாக முன்பக்கத்தில் தந்து வந்ததை சரிநிகர் வாசகர்கள் அறிவர். அவை காத்திரமான படைப்புக்கள். குறைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல. (அதற்காக ஞானதிருஷ்டியில் எதிர்வு கூறி எழுதப்படும் விடயமும் அல்ல)

இப்பேர்ப்பட்ட இலக்கியப் படைப்புக்களை இடையே நிறுத்தியது ஏன்? அது சரிநிகரின் குறை அல்லவா?

ஈழமோகத்தின் கவிதை இப்போது வந்துள்ளது. முன்னர் பிரசுரித்து, இடையில் நிறுத்தி ஏமாற்றியதைப் போல், இனியும் சரிநிகர் ஏமாற்றுதல் கூடாது. அது காலத்திற்குப் பொருத்தமான விடயம். எனவே இடைநிறுத்துவது முறையல்லவே!

சிலவேளை ஈழமோகத்தின் கவிதை ஆடிக்கு ஒரு தடவையும், ஐப்பசிக்கு ஒரு தடவையும் வெளிவருவது இலங்கையில் அதுவும் அரசியலில் (அ) நாகரீகங்கள் அவ்வளவு இடைவெளியில் தான் நடக்கிறது என ஈழமோகம் கருதுவதனாலா? அல்லது அடிக்கடி நடக்கும் (அ) நாகரீகங்களை கவிதையில் சொல்ல பிரசவ வேதனைப்படுகிறாரா? அறிய ஆவலாய் உள்ளேன்.

*பி.ஆர்.அலெக்சாந்தர்*
*வட்டவளை*

## தவறு

சரிநிகர் இதழ் 112இன் இறுதிப்பக்கத்தில் மன்னார் - கற்பிட்டி படகுச்சேவை தொடர்பாக வெளியான செய்தியில் கடற்படையினரைச் சுட்டுமாறு வரும் இடங்களிலெல்லாம் பொலிஸார் எனத் திருத்தி வாசிக்கவும். பொலிஸாரே அச்செய்தியில் குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதே சரியானது.

*ஆ -ர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

# திருமலை: ஊருக்குள் ஆயிரம்!

திருமலைஇப்போது, அவ்வப்போது கலவரங்களுக்குள்ளாகி வருகின்றது. இலங்கையில் நடைபெறும் எந்த வன்செயலும் திருமலையில் இருந்தே தொடங்குகிறது என்ற அபிப்பிராயம் முன்னைய இனக்கலவரங்கள் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் கலவர விளிம்பு வரை சில பிரச்சினைகள் தோன்றி மறைந்தது பத்திரிகைகள் வாயிலாக நாமறிந்தே.

### சந்தைக் குத்தகை:

தற்போது மிகவும் சூடு பிடித்திருக்கிற பிரச்சினை சந்தை குத்தகை விவகாரம் பற்றியது. இது பற்றி கடந்த சரிநிகர் இதழிலும் எழுதப்பட்டிருந்தது. தற்போது இவ்விவகாரம் பிரதான நாளிதழின் தலைப்புச்செய்தியாக ஆகுமளவுக்கு மாறி விட்டிருக்கிறது. இதற்கான பிரதான காரணம் நிர்வாக ஒழுங்குகளில் இராணுவம் தலையை நுழைத்தமையாகும். அதுவும் 'அவசரகால சட்டம்' எனும்சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு பிரிகேடியரே தலையைநுழைத்துள்ளார். இது வெறுமனே நிர்வாகம்சார்ந்து எழுகிற பிரச்சினையல்ல. இலங்கையில் திட்டமிட்டும், திட்டமிடாமலும் அரங்கேறிவரும் பேரினவாத ஊடுருவலினதும் ஆக்கிரமிப்பினதும் ஒரு வடிவேஇது.

இலங்கையில் இன்னும் எஞ்சியிருக்கிற ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாகம் ஜனநாயக முறைகளோடு செயற்பட முடியாத ஓர் அவல நிலையை திருமலைச் சந்தை விவகாரம் புட்டுவைக்கிறது.

முறைப்படி செய்யப்பட்ட சந்தைக் குத்தகையை பேரினவாத வியாபாரிகளின் 'ஊதல்களால்' ரத்துச்செய்வதில் இராணுவ பிரிகேடியருக்கும் அதை நடைமுறைப் படுத்துவதில் நகரசபைத் தலைவருக்கும் தன்மான, பலப்பரீட்சை இடம்பெற்று வருகிறது. இதில் உச்சமாய் பிரிகேடியர் காலக்கெடு விதித்து எச்சரித்திருப்பதும், நகரசபைத்தலைவர் தான் பதவி விலகப் போவதாக கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது விடயமாக தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதமனுப்பியதாக பத்திரிகைகள்செய்தி வெளியிட்டன. இதை 'அதிரடி அய்யாத்துரையார்' கிண்டலடித்தும் எழுதியிருந்தார்.

இந்தக் குத்தகை இழுபறிப் பிரச்சினை ஹர்த்தால், வரி வசூலிப்புத் தலையெனச் சென்றுவிட்டது. இன்னும் வரிந்து கட்டிக் கொண்டு மல்லுக்கட்டாததுதான் குறை. அது இப்போ நடக்குமோ எப்ப நடக்குமோ என்று அப்பாவி மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். முன்னர் கலவரக் காலங்களில் கனகா 'மில்', 'தமிழ்' மார்க்கெட், சிங்கள மார்க்கெட் என வெவ்வேறு இடங்களில் சந்தை நடைபெற்றது. அப்படி ஒரு நிலை வந்தால் பிரச்சினையில்லாமல் இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். அந்தத் தமிழ் மார்க்கட் இப்போது பொலிசாரின் காவலரணாயிருப்பது அதனையும் சாத்தியமற்றதாக்கும்.

எப்படியோ இந்தச் சந்தைக் குத்தகைப் பிரச்சினை ஜனாதிபதி வரை சென்ற ஒரு தேசியப்பிரச்சினையாகிவிட்டது. இதிலும் 'நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி தான் தீர்ப்பு வழங்க வேண்டியுள்ளது. பிரிகேடியரா, சூரியமூர்த்தியா அல்லது வேறெதுவுமா என்று பொறுத்துத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

### லிங்கநகர் குடியேற்றம்:

இடைக்கிடை இவ்வாறு இடம் பெறும் நிகழ்வுகளுக்கப்பால் ஒரு நிரந்தர பிரச்சினையாக தற்போது மாறிவருவது லிங்கநகர் குடியேற்றப்பிரச்சினையும், இராணுவ முகாம் அமைப்புமாகும். இது அரசியல் ரீதியாக இழுபறிப்பட்டுக் கொண்டிருப்பதால், அங்கு வாழ் அப்பாவி மக்களே மிகுந்த அச்சத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

சந்தை விவகாரத்தில் தலையிட்ட பிரிகேடியரே இதிலும் தனது சண்டித்தனத்தைக் காட்டியுள்ளார். அங்கு வாழ்தமிழ்மக்களை காலக்கெடு விதித்து எழும்பச் சொல்லியுள்ளார். இவர்களை எழுப்பிவிட்டு சிங்கள மக்களை குடியேற்றும் ஏற்பாட்டிலேயே இவரும் இவர் சார்ந்தோரும் இறங்கியுள்ளனர். பொலிஸ்நிலையம், இராணுவ முகாம், பொலிஸ்காவலரண்கள் என ஒரு பாதுகாக்கப்பட்ட சூழலிலே திட்டமிட்டபடி இக்குடியேற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. திருமலை கடற்கரையோரப்பிரதேசங்கள், திருமலைஹபறணை வீதிக்கருகாமையான குடியேற்றங்கள்போன்று இதுவும் இன்னும் பல குடியேற்றங்களும் மிக நிதானமான முறையில் நடந்தேறுகிறது. இதற்கு, முன்பு துணையாக இருந்தார் என பீரிஸ் என்ற காணி ஆணையாளர் தமிழ்இயக்கமொன்றினால் கொலைத்தண்டனைக்குட்படுத்தப் பட்டார்.

திருமலையைப் பொறுத்தவரை இக்குடியேற்றப் பிரச்சினை நிரந்தரத் தொடர் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இப்பிரதேசத்தின் முக்கிய தளங்களெல்லாம் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளது. சந்தை, மீன்பிடி, போக்குவரத்து என முக்கிய தொழிற்துறைகள் யாவும் சிங்கள மக்களின் ஆதிக்கத்திற்குட்பட்டேயுள்ளது.

### மீன்பிடி:

அண்மைய கடற் தாக்குதல்களையடுத்து மீன்பிடி, தடைசெய்யப்பட்டிருக்கிறது. எனினும் சிங்கள மீனவர்கள் மட்டும் கடற்படைப் பாதுகாப்புடன் மீன்பிடியை மேற்கொள்கின்றனர். மூதூர், கிண்ணியா உட்பட திருமலை நகர தமிழ் முஸ்லிம் மக்களது மீன்பிடித் தொழில் முற்றாக தடையை நோக்கிச் சென்றிருப்பதால் அதனையே நம்பிவாழும் அவர்களின் குடும்பங்கள் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளன. சில இடங்களில் சிறு வள்ளங்களில் குறிப்பிட்டளவு தூரம்சென்று மீன்பிடிக்க அனுமதியிருக்கிறது. எனினும் அவை தேவையை நிறைவேற்றப் போதியனவாக இல்லை. இதனால் உள்ளூர்ச்சந்தைகளில் மீனின் விலை அதிகரித்திருப்பதோடு முழு லாபமும் சிங்கள மீனவர்களுக்கே போய்ச் சேருகிறது. திருமலையின் மீன்பிடி வளத்தைக்கருத்திற்கொண்டே கொண்டே தென்பகுதியைச் சேர்ந்த மீனவக்குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



### திருமலை மூதூர் படகுச் சேவை:

திருமலை மற்றும் மூதூர் வாழ் மக்களைப் பெரிதும் பாதிக்கின்ற இன்னொரு அன்றாடப்பிரச்சினை திருமலை - மூதூர் கடற்போக்குவரத்தாகும். முன்னர் பல இயந்திரப்படகுகள் சேவையிலீடுபடுத்தப் பட்டிருந்த இந்தப் பயணப் பாதையில் தற்போது 'மகாவலி தேவி' என்கிற ஒரே இயந்திரப்படகுதான் சேவையிலீடுபடுகிறது. இ.போ. சவுக்குச் சொந்தமான மற்றப்படகு சேதமடைந்திருப்பதால் மிகவும்சிரமம் ஏற்பட்டுள்ளது. முன்னைய திருத்த வேலைகளுக்கான கொடுப்பனவு (6லட்சம் வரை) இ.து.அ.சபைக்குச் செலுத்தவேண்டியிருப்பதால் இதனைத் திருத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சேவையிலீடுபடும்படகிலும் கண்டிப்புடன் நூறு பேர் மட்டுமே, அதுவும்மிக மிகநீண்ட காத்திருப்பின் பின் ஏற்றப்படுகிறார்கள். இவர்களில் குறித்தளவினரான இராணுவத்தினரும் தினமும் பயணம் செய்கிறார்கள். இவர்கள் யாவரும் இலவசமாகப் பயணம்செய்வதால் அது ஈட்டவேண்டிய லாபத்தைப் பெறமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலை தொடர்ந்தால் அந்தப்படகுச் சேவையும் ஸ்தம்பிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த நீண்டகாலப்பிரச்சினை பல தடவை உரியவர்களுக்கு எடுத்துக் கூறப் பட்டிருப்பினும் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. தற்போது மூன்று புதிய படகுகள் பெற்றுத்தருவதாக அமைச்சர் அஷ்ரஃப் கூறியிருப்பதாக கட்சி விசுவாசிகள்சிலர் கூறுகின்றனர்.

தீவுப் பகுதிக்கான கப்பல் சேவையும் இங்கிருந்தே இடம்பெறுகின்றது. தற்போது ஏற்பட்டிருக்கும் காலநிலைக் கோளாறினால் அண்மைய பயணம் தடை செய்யப்பட்டுள்ளது.

இப்பயணம் மேற்கொள்ள வரும் யாழ் வாசிகள் படும் சிரமம் அளப்பரியது. இவர்களுக்காக திருமலையின் வீடுகள் லொட்ஜ்கள், வாடகைக்கு விடப்பபட்டு 'வரும்படி' பெற்றுத்தருகிறது. முன்னர் பயணத்திற்காகப் பதிந்தவர்கள், பின்னால் வந்து பதிபவர்களின் 'கவனிப்புகளினால்' பயணம் செய்யமுடியாதிருக்கிறார்கள். வெயிலில் நீண்ட கியூவும், நெரிசலும் கஷ்டமும் என எல்லோரும் எப்படியோ ஊர்போய்ச் சேருவதிலே குறியாய் இருப்பதைக்காணமுடிகிறது.

### மூதூர் வைத்தியசாலை:

மூதூர்ப் பகுதியில் வைத்தியசாலைப் பிரச்சினையே மும்முரமடைந்து செல்கிறது. அதுமட்டுமன்றி அவசர சிகிச்சைக்காக ஒரு அம்புலன்ஸே பயன்படுத்தப் படுகிறது. இது மூதூரைப்பொறுத்தவரைப் போதுமானதாயில்லை. ஏனைய நோயாளிகள் படகின் மூலமே திருமலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள். படகு புறப்படும் நேரமே இவர்களை எடுத்துச் செல்வதற்கான நேரமுமாக இருக்கிறது.

தற்போது மூதூருக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள நிலையத்தின் பாதுகாப்புக்கருதி அதை அண்டியுள்ள பாதை மூடப்பட்டு வெறும் நடைபாதையாக மாற்றப்பட்டுள்ளது. இதனருகே வைத்து இரு பொலிசார் சுடப்பட்டதே இதற்கான காரணமெனப்படுகிறது.

இதுபோக திருமலையின் 'மிகமிகப் பாதுகாப்பான நகரம்' அழகுமயமாக்கப்பட்டு வருகிறது. இதில் நகரசபைத் தலைவர் மிகக் கரிசனையாக ஈடுபட்டு வருகிறார். மக்கெய்ஸர் விளையாட்டரங்கம் விஸ்தரிப்புக்காக உடைக்கப் பட்டுள்ளது.

அண்மைய தீபாவளி உற்சவத்தின்போது திருமலையின் கோலாகலம் இது என்றுமிருக்காதா என எல்லோரையும் ஏங்கவைத்தது!

**எம்.கே.எம்.ஷிப்**

# யாழ்ப்பாணத்தில் அவர்களும் இவர்களும்

முன்னர் குடாநாடு புலிகளின் பிடியில் இருந்தபோது எந்த சட்டவிதிமுறைகளை அவர்கள் அமுல் செய்தார்களோ அதே போலவே படையினரும் தற்போது அமுல்படுத்துகின்றனர்.

புலிகள் முறைப்பாட்டுப் பெட்டிகளை வீதிகளிலும், தமது முகாம்களுக்கு அருகிலும் வைத்தனர். அதேபோல தற்போது படையினரும் வீதிகளிலும், தமது முகாம்கள், காவலரண்களுக்கு அருகிலும் முறைப்பாட்டுப் பெட்டிகளை வைத்துள்ளனர்.

புலிகள் மக்களிடம் ஐயா வாங்கோ, அம்மா வாங்கோ என்றது போல படையினரும் சோதனை நிலையங்களில் ஐயா இறங்கிப் போங்க, அம்மா ஏறிப்போங்க, ஐயா, அக்கா என்ற மரியாதைச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

புலிகள் சேரன் பல்பொருள் விற்பனை நிலையம், சோழன் வியாபார நிலையம் போன்றவற்றை அமைத்து மலிவு விலையில் பொருட்களை விற்றனர். அதேபோல படையினரும் சில மலிவு விற்பனை நிலையங்களைத் திறந்து மலிவு விலையில் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

புலிகளிடம் 'பாஸ்' எடுத்து வெளியே போக ''பாஸ்'' அலுவலகம் முன்பு கியூ. அதுபோல இராணுவ சிவில் நிர்வாக அலுவலகம் முன்பு கப்பலில் அல்லது விமானத்தில் செல்வதற்கு அனுமதி பெற கியூவில் நிற்க வேண்டும்.

புலிகள் குடும்ப அட்டை முறையை அமுல் செய்தனர். அதனைப் படையினரும் அறிமுகம் செய்துள்ளனர். ஏதாவது தேவைகளுக்கு கிராம சேவகரிடம் அல்லது அலுவலகம் போனால் குடும்ப அட்டை கேட்கின்றனர்.

முன்பு கொழும்பில் இருந்து லொறிகளில் பொருட்கள் வரும்போது புலிகள் சிலவற்றை எடுப்பது தெரியும். ஆனால் வவுனியாவில் 'ரெலோ', 'புளொட்' எடுத்ததாகவும் சொல்வர்.

இப்போது கப்பலில் வரும் பொருட்களில் சில மாயமாக மறைகின்றன. பல வர்த்தகர்கள் இவ்வாறு பொருட்கள் காணாமல் போனதாகப் புகார் செய்துள்ளனர்.

அரசுக்கும், படையினருக்கும் எதிரான சுவரொட்டிகளை புலிகள் முன்பு ஒட்டினர். இப்போது புலிகளுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. வீரவேங்கைகள் எனத் தூபிகள் அன்று கட்டப்பட்டன. இப்போது படையினருக்கு நினைவுக்கல் நாட்டப் படுகின்றது.

அன்று, விளம்பரங்கள், பெயர்ப் பலகைகளில் தூய தமிழில் எழுதும்படி புலிகள் கட்டளையிட்டனர். இன்று அரச வாகனங்கள், தனியார் பஸ்கள் என்பனவற்றில் சிங்களச் சொற்களும் எழுதப்பட்டாக வேண்டியிருக்கிறது.

பெண் போராளிகள், பெண் காவல் துறையினர் அன்று வீதிகளில் காணப்பட்டனர். இன்று பெண் இராணுவத்தினர் பெண் பொலிஸார் காணப்படுகின்றனர்.

புலிகள் தமது தேவைக்கு தனியார் வாகனங்களைப் பயன்படுத்தியது போலப் படையினரும் தமது தேவைகளுக்குத் தனியார் வாகனங்களை எடுத்து உபயோகிப்பர்.

புலிப் போராளிகள் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் வீதிகளில் திரிவது போலவே இப்போது படையினர் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் உலாவுகின்றனர்.

'அப்ப அவை திரிஞ்சினம்', 'இப்ப இவை திரியினம்' என்று யாழ் மக்கள் சொல்கின்றனர்.

படையினரின் கடைகளில் சில முக்கிய பொருட்களுக்கு கொழும்பு விலையை விட அதிகம். அது அவர்களின் வரி. முன்னர் புலிகளின் வரி.

*-மரிவேந்தன்-*

# அடையாள அட்டைகள் வரவில்லை.

ஓரிரண்டு மாதங்களுக்கு முன்னர் ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் ''இராணுவ விஷேட அடையாள அட்டைகள் வழங்குதல்'' என்ற ஒருவகையான நோய் பரவியது. ஒரு குடும்பத்தில் பத்துப்பேர் இருந்தாலும் அவர்கள் அனைவரும் அடையாள அட்டைகளுக்காக முப்பது ரூபா பணம் செலுத்திப் புகைப்படம் எடுக்க வேண்டுமெனச் சங்கைக்குரிய சில கிராம சேவையாளர்கள் வேண்டினர்.

இந்த நடவடிக்கையினால் சில கிராம சேவையாளர்கள் தங்களுடைய பொக்கட்டுக்களை நிரப்புவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சில கிராம சேவையாளர்கள் புகைப்படம் எடுப்பதற்குத் தங்களுடைய வீடுகளை ஸ்டூடியோக்களாக மாற்றியிருந்தனர். ஆனால் படம் எடுக்கும் முப்பது ரூபாவில் ஒவ்வொருவரிடமிருந்தும் 5 ரூபா தொடக்கம் பத்துரூபா வரை தங்களுக்குத் தரப்பட வேண்டுமெனக் கூறி ஸ்டூடியோ உரிமையாளர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தைச் சங்கைக்குரிய கிராம சேவையாளர்கள் வாங்கிக் கொண்டனர். ஒரு நேர வயிற்றுப் பசியைச் சமாளிக்க முடியாத ஏழை எளியவர்களும் இந்தக் கிராம சேவையாளர்களின் நெருப்பினுள் அகப்பட்டனர்.

மாதங்கள் கடந்தன, அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டது. பாவம் இந்த ஏழை எளியவர்களின் நெருப்பாவது இந்தக் கிராமசேவையாளர்களைச் சுட்டெரிக்காதா?

*அஹமட் ஹிஸாம்*

### கருத்தரங்கு

திருமலைக் கலாமன்றமும் தகவமும் இணைந்து ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் தொடர்பான முழுநாள் கருத்தரங்கொன்றை ஜனவரி மாத இறுதியில் நடாத்தவுள்ளது. கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

*தகவம்*
*40 லில்லி அவென்யூ*
*கொழும்பு - 06*

### கருத்தரங்கு

புகலிட பிரச்சினைகள் தொடர்பாக 80களின் ஆரம்பத்தில் ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்த சுசீந்திரனுடன் கலந்துரையாடல் ஒன்றை விபவி நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. கலந்து கொள்ள விரும்புவர்கள் ஜனவரி 12, மாலை 4.30மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு சமூகம் தரவும்.

*பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்*
*58, தர்மராம வீதி*
*கொழும்பு - 06.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்